உதயன்

www.onlineuthayan.com

34: பக்கங்கள் சுடர் 27 கதிர் 277 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 13 புதன்கிழமை (29/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00




உதயன் ஆசிரியரின் 'ரிட்' மனுவில்

# நீதிவானுக்கு எதிரான தடை மீண்டும் நீடிப்பு

## கால அவகாசம் கேட்டார் கணேசராசா

-நீதிமன்றச் செய்தியாளர் எஸ்.எஸ்.ஜனகன்-

கொழும்பு, ஓக 29

'உதயன்' நாளிதழின் ஆசிரியருக்கு எதிராக யாழ். நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராசா நீதிமன்ற நடவடிக்கைகள், நீதிமன்ற விசாரணைகள் எவற்றையும் முன்னெடுப்பதற்கும் ஆசிரியரைக் கைது செய்வதற்கான பிடியாணை உத்தரவு எதனையும் பிறப்பிப்பதற்கும் விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவைக் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி வரை நீடித்துள்ளது.

ஒக்ரோபர் 31ஆம் திகதி வழக்கு மீண்டும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும்போது, நீதிவான் கணேசராசா கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆட்சேபனைகள் ஏதாவது இருப்பின் அவற்றை அணைக்குமாறு நீதிபதி சிறிஸ்கந்தராசா உத்தரவிட்டார்.

ஜூன் 28ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் வெளியான செய்தி ஒன்று தொடர்பில் யாழ்.நீதிவான் கணேசராசா தமக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குத் தடை விதிக்கக் கோரியே 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் சார்பில் 'ரிட்' மனு ஒன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதை ஒட்டி இடைக்காலத் தடை உத்தரவும் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தது. அந்தத் தடை உத்தரவே ஓகஸ்ட் 29ஆம் திகதியில் இருந்து நவம்பர் முதலாம் திகதி வரை நீதிமன்றத்தால் நீடிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று இந்த 'ரிட்' மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா, திபாலி விஜேசுந்தர ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதிவான் கணேசராசா மன்றில் முன்னிலையாகி இருந்தார். அரசுத் தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க, நீதிவான்

பார்க்க பக்கம் 4

சிறைகளில் வாடும் அப்பாவி அரசியல் கைதிகளின் வழக்குகள் துரிதமாக விசாரிக்கப்பட வேண்டும். -மகாநாயக்கர் வலியுறுத்து. 5

நாடாளு மன்றத்தை முடக்க பாரதீய ஜனதாக் கட்சி முயற்சி- பதிலடி கொடுப்போம் என்கிறார் சோனியா 8

செவ்வாய்க்கிரகத்தில் இருந்து மனிதக் குரல்கள்- அமெரிக்கா அனுப்பிய விண்கலத்தில் பதிவாகியுள்ளதாக நாசா விஞ்ஞானிகள் பரபரப்புத் தகவல். 9

'ஒப்பரேசன் ஒசாமா' எழுதிய அமெரிக்க இராணுவ அதிகாரியை குறிவைத்துள்ள தீவிரவாதிகள். 10

### ஈரான் செல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஓக.29

ஈரான் தலைநகரம் தெஹ்ரானில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் 16 ஆவது உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 50 பேரடங்கிய குழுவொன்றுடன் இன்று ஈரானுக்குச் செல்கின்றார்.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பெற்றோலியவளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உட்பட வர்த்தகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோரே 50 பேர்கொண்ட குழுவில் இடம்பிடித்துள்ளனர்.

அணிசேரா நாடுகளின் மாநாடு எதிர்வரும் 30ஆம், 31ஆம் திகதிகளில் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடைபெறுவதை முன்னிட்டு அங்கு பலத்த பாதுகாப்பு வசதிகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை, குறித்த மாநாட்டில் கலந்துகொள்வதற்குச் செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 30ஆம்

பார்க்க பக்கம் 4

# இலங்கைக்கு வரும் ஐ.நா. குழு நியமிப்பு

## ஹன்னி மெகாலி தலைமை



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி இலங்கை வரவுள்ள தமது குழுவின் உறுப்பினர்களை ஆணையாளர் நவிப்பிள்ளை [நவநீதம்பிள்ளை] நேற்று நியமித்திருக்கிறார்.

இலங்கை வரும் குழுவுக்கு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆசிய, பசுபிக், மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க பிரிவுகளுக்குப் பொறுப்பான தலைவர் ஹன்னி மெகாலி தலைமையேற்கிறார். இவருடன் களச் செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளுக்கான பிரிவின் மூத்த அதிகாரி அஸ்ரா பெட்ராவும், மேலும் சில உயர்நிலை அதிகாரிகளும் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

செப்ரெம்பர் 14ஆம் திகதி வரும் இந்தக் குழு ஆறு நாள்கள் தங்கியிருந்து கொழும்பில் அரச, எதிர்க்கட்சி மற்றும் தமிழ்க் கட்சித் தலைவர்களுடன் முக்கிய சந்திப்புகளை நடத்தவுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கைப் பயணம் எதிர்வரும் நவம்பரில்

பார்க்க பக்கம் 4

### நேற்றிரவு நிலநடுக்கம்

கொழும்பு, ஓக.29

பதியத்தலாவை ரன்கிந்த குளத்திற்கு கிழக்கில் நேற்றிரவு 2.9 ரிச்டர் அளவிலான நில அதிர்வு உணரப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப்பணியகம் அறிவித்துள்ளது. எனினும் "இந்த அதிர்வினால் சேதங்கள் ஏற்படவில்லை எனவும்இதனால் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ங-16)

## வன்முறை யாழ். குடாநாட்டில் இந்த ஆண்டு திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29

கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தின் முதல் அரையாண்டு காலத்தில் யாழ். குடாநாட்டில் வன்முறைகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

கடந்த 6 மாதங்களில் மட்டும் 188 துஷ்பிரயோக மற்றும் வன்முறைச் சம்பவங்கள் யாழ். குடாநாட்டில் இடம்பெற்றுள்ளன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

"பாலியல் வன்முறைகள்

பார்க்க பக்கம் 4

## சீனாவை நம்பும் இலங்கை எப்படி நட்பு நாடாக முடியும்?

### இந்திய அரசைக் கேட்கிறார் கருணாநிதி

கொழும்பு, ஓக.29

இந்தியாவை விடவும் சீனாவையும் பாகிஸ்தானையும் சார்ந்து இயங்குகின்ற இலங்கையை நட்பு நாடு என்று மத்திய அரசு எப்படிச் சொல்ல முடியும்? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

இது தொடர்பாக கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

மத்திய இணை அமைச்சர் பல்லம் ராஜு 'இலங்கை நமது நட்பு நாடு. எனவே இலங்கை இராணுவத்துக்குத் தொடர்ந்து பயிற்சி அளிப்போம்' என்று கூறியிருக்கிறார்.இந்தப் பதில்

பார்க்க பக்கம் 4

## தனித் 'தமிழீழம்' உருவாக ஒருபோதும் இடமளியோம்

### அடித்துக் கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஓக.29

தமிழீழம் என்ற தனிநாட்டை இலங்கைக்குள் உருவாக்குவதற்கும், நாட்டைப் பிரிப்பதற்கும் தாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என ஐக்கிய தேசியக் கட்சி நேற்று திட்டவட்டமாகத் தெரிவித்தது. அத்துடன், நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கில் செயற்படுபவர்களையும் தாம் கடுமையாக எதிர்க்கின்றோம் எனவும் அது தெரிவித்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஐ.தே.க. பொதுச் செயலாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 4

## ஆஸ்திரேலியா சென்ற 147 பேர் கடற்படையினரிடம் மாட்டினர்

கொழும்பு,ஓக.29

இரண்டு படகுகள் மூலம் ஆஸ்திரேலியா நோக்கிச் செல்ல முயற்சித்த 147 இலங்கையர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



பார்க்க பக்கம் 4

ராஜ் TVS TVS

TVS KING ஆட்டோ காட்சியறை இப்போது நெல்லியடியில்

எல்லா வர்ணங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

இன்று 29.08.2012 புதன்கிழமை 9.00 மணிக்கு KING லங்கா (பிரை) லிமிட்டட் இன் பிரதான நிறைவேற்று அதிகாரி மதிப்பிற்குரிய திரு. சம்பத் அகலவத்த அவர்களினால் கோலாகலமாக திறந்து வைக்கப் படுகிறது.விற்பனை, உதிரிப்பாகங்கள், விற்பனைக்கு பின்னான சேவைகள் யாவும் ஒரே இடத்தில் இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.இன்று எமது சேவை நிலையத்தில் இலவச வாகன சேவையை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

முன்னேற்றத்தின் KING வசதியிலும் KING

"ராஜ் TVS"
கலாசாலை கூட்டம்,
இல. 191, பருத்தித்துறை வீதி,
நெல்லியடி

T.P : 021 226 2249
Hot line : 077 7358 357
E - Mail : rajtvsnelliady@gmail.com
Web : www. tvslanka

RAJ TVS
Kanagasabai Building
No. 191, Point Pedro Road,
Nelliady

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசியலுக்காக மதத்தை ஏலமிடும் மஹிந்த அரசு

## ஐ.தே.கட்சி சீற்றம்

கொழும்பு, ஒக.29

தேர்தலுக்கான தொனிப்பொருளொன்று தமக்கு இல்லாததால், சமயத்தை ஏலமிட்டு, இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட புத்தரின் புனித எலும்பை வைத்து அரசு தேர்தல் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது என ஐக்கிய தேசியக் கட்சி நேற்று குற்றஞ்சாட்டியது.

அத்துடன், நாட்டின் பொலிஸ், இராணுவத்தினருக்கு இணையாகச் சேவையாற்றி வருகின்ற 40 ஆயிரம் சிவில் பாதுகாப்புப் படையினருக்கு நிரந்தர நியமனம் வழங்காமல், தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அரசு அவர்களைப் பயன்படுத்தி வருகின்றது என ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

கடந்த காலங்களில் அரசு, மக்களிடம் பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. அத்துடன்,கடந்த தேர்தல்களில் யுத்த வெற்றியைத் தொனிப்பொருளாகக் கொண்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டது.

ஆனால் இம்முறை அரசின் தேர்தல் பிரசாரத்திற்குத் தொனிப்பொருள் ஒன்று இல்லாததால், இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட புத்தரின் புனித எலும்பை வைத்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுகின்றது.

மாகாணசபைத் தேர்தல்கள் இடம்பெறுகின்ற பகுதிகளில் மட்டும்தான் புத்தரின் புனித எலும்பு மக்களின் பார்வைக்காக வைக்கப்படுகிறது. தற்போது அரசின் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெறுகின்ற அநுராதபுரம், சேருவில ஆகிய பகுதிகளில் புத்தரின் புனித எலும்பு காட்சிப்படுத்தப்படவுள்ளது.

சமயத்தை ஏலமிட்டு தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுகின்றது. பௌத்த சமய விவகார அமைச்சரின் பிறப்பிடமான அம்பாறையில் கூட தேர்தல் முடிவடைந்த பின்னரே புத்தரின் புனித எலும்பு காட்சிப்படுத்தப்படவுள்ளது.

நாட்டின் பொலிஸ், இராணுவத்தினருக்கு இணையாக சேவையாற்றிவரும் 40 ஆயிரம் சிவில் பாதுகாப்புப் படையினருக்கு இணையாகச் சேவையாற்றி வருகின்ற சிவில் பாதுகாப்புப் படையினருக்கு நிரந்தர நியமனம் வழங்காதுள்ளது. 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என அரசு கூறியது. ஆனால், அதை செய்து முடிப்பதற்கு அரசு இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சிவில் பாதுகாப்புப் படையிலிருந்தவர்கள் அந்தந்த திணைக்கள அதிகாரிகளுக்கு சேவை செய்வதற்கும், சீமெந்து கல் வெட்டுவதற்கும், வடிகான் சுத்தம் செய்வதற்கும், மரக்கறித் தோட்டம் செய்வதற்கும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

திருகோணமலையில் ஆளுங்கட்சி யினரின் தேர்தல் பிரசார நடவடிக்கை களிலும் இவர்கள் ஈடுபடுத்தப் படுகின்றனர். வீட்டுக்கு வீடு சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்கு இவர்கள் பயன்படுத்தப் படுகின்றனர்.

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இரண்டாம் பகுதிக்கான வினாத்தாள் பரீட்சை நடைபெறுவதற்கு முன்னதாகவே வெளியிடப்பட்டுள்ளது. முதலில் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளின் 'இஸட்' புள்ளி விவகாரத்தில் குளறுபடிகள் ஏற்பட்டன. இப்போது 5ஆம் ஆண்டு மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சைகளில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பாகம் இரண்டுக்கான வினாத்தாள் முன்கூட்டியே வெளியிடப்பட்டிருந்தால் அதற்கான முழுப் பொறுப்பையும் கல்வி அமைச்சும், பரீட்சைகள் திணைக்களமுமே ஏற்க வேண்டும் - என்றார்.

# முன்னேஸ்வரம் வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தத் தடை

**நீதிமன்றம் உத்தரவு**

கொழும்பு,ஒக.29

எதிர்வரும் 2 ஆம் திகதி வரை முன்னேஸ்வரம் பத்திரகாளியம்மன் கோயில் வளாகத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளக் கூடாது என்று சிலாபம் மாவட்ட நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

பொலிஸார் முன்வைத்த முறைப்பாடு ஒன்றை பரிசீலித்த சிலாபம் மாவட்ட நீதிபதி ஜகத் கஹந்தகம நேற்று செவ்வாய்க்கிழமை இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

முன்னேஸ்வரம் பத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த மிருக பலிபூசை எதிர்வரும் முதலாம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் அதனை நிறுத்துமாறு ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட பௌத்த அமைப்புக்கள் கோரிக்கை முன்வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சோதனை எனைச் சூழ்ந்து வரினும் மிருகபலி பூஜைக்கு இடமளியேன்

## மேர்வின் சூளுரை

கொழும்பு, ஒக. 29

''எனக்கு எவ்வாறான சோதனைகள் வந்தாலும் தாய்நாட்டில் மிருக பலி பூஜைக்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டேன். முதலாம் திகதி முன்னேஸ்வரம் விரைந்து சென்று வேள்வி பூஜையைத்தடுத்து நிறுத்துவேன்.''

- இவ்வாறு அமைச்சர் மேர்வின் சில்வா நேற்று மீண்டும் திட்டவட்டமாக இடித்துரைத்தார்.

இந்நடவடிக்கைக்கு இந்து மக்கள் தனக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்றும் அமைச்சர் மேர்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளியம்மன் காளி கோயிலில் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ள வேள்வி பூஜை தொடர்பிலேயே உதயனிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

மிருக பலியை இந்து மதம்கூட எதிர்க்கின்றது. அந்த மதத்தில் புலமை வாய்ந்தோர் இந்த விடயத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். எந்தவொரு கடவுளும் மிருகங்களைப் பலி கேட்கவில்லை என்ற விடயத்தை இவ்விடத்தில் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

அத்துடன், எனது தாய்நாட்டில் மிருக பலி சார்ந்த பூஜை நடவடிக்கைகளுக்கு நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன் என்ற விடயத்தையும் உறுதியான முறையில் கூறிவைக்க விரும்புகின்றேன். எதிர்வரும் முதலாம் திகதி பல அமைப்புகளுடன் முன்னேஸ்வரம் சென்று சத்தியாக்கிரகம் இருந்து குறித்த பலி பூஜையை நான் தடுத்து நிறுத்துவேன். எந்தவொரு சக்தியாலும் இதைத் தடுக்க முடியாது.

இந்து மதத்திலும் இந்நடவடிக்கைக்கு இடமில்லை. எனவே, இந்துமக்களும் மிருக பலியைத் தடுக்க நான் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்'' - என்றார்.

# ஓட்டோ - பஸ் விபத்து அறுவர் ஸ்தலத்தில் சாவு

## நிந்தவூரில் நேற்றிரவு கோரம்

அம்பாறை, ஒக. 29

நிந்தவூர் பிரதான வீதியில் அட்டப்பள்ளம் பகுதியில் இடம்பெற்ற ஓட்டோ - பஸ் விபத்தில் ஓட்டோவில் பயணம் செய்த 6 பேரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

அக்கரைப்பற்றில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பயணிகள் பஸ்ஸும் கல்முனையில் இருந்து வந்த ஓட்டோவுமே நேற்றிரவு 8.30 மணியளவில் மோதிக் கொண்டன.

இதில் ஓட்டோ சாரதி உட்பட அதில் பயணித்த அறுவரும் உயிரிழந்தனர். கல்முனைக்குடி புதிய வீதியைச் சேர்ந்த எம்.எம். ஜெமினா (வயது -40), எம்.ஏச். இர்பானா (வயது -24), எம்.ஏச். றிஹானா (வயது -34), எம்.ஏச்.எம். அன்சார் (வயது -3), எம்.ஏச்.எம். அப்துல் சஹ்ராஸ் (வயது -2) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் முச்சக்கர வண்டிச் சாரதியான சஹாப்தீனுமே உயிரிழந்தவர்கள் என இனங்காணப்பட்டனர். இவர்களது சடலம் நிந்தவூர், கல்முனை ஆகிய வைத்தியசாலைகளில் வைக்கப்பட்டுள்ளன. சம்மாந்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் குறித்த பஸ் சாரதியையும் கைது செய்துள்ளனர். (10)

# கிராம சேவகர்களுக்கான ஆள்சேர்ப்பு அடுத்த மாதத்தில்

யாழ்ப்பாணம், ஒக.29

நாடு பூராகவும் 3500 கிராம சேவகர்களை ஆள்சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்களை கோரும் அறிவித்தல் அடுத்த மாதம் 15 ஆம் திகதியன்று வெளியிடப்படுமென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரான பீ.ப.அபேகோன் தெரிவித்துள்ளார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தோரிடம் இருந்து இது தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாவும் அவர் தெரிவித்தார்.

திறந்த போட்டிப் பரீட்சையொன்றின் மூலமாக தகுதியுடையோர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

கிராம சேவகர்கள் தொடர்பாகப் புதிய சேவை யாப்பொன்று தற்போது கட்டமைக்கப்படுள்ளதோடு ஆள்சேர்ப்பு ஒழுங்குமுறை தொடர்பாக ஊழியர் எண்ணக்கை ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய நியமனங்கள் 2013 ஆம் ஆண்டில் வழங்கப்படவுள்ளன.

நாடு முழுவதிலுமாக 14,200 கிராம சேவகர் பிரிவுகள் இருந்த போதிலும் 10,800 கிராம சேவகர்கள் மாத்திரமே சேவையில் உள்ளனர்.

இறுதியாக 2008 ஆம் ஆண்டில் 2600 கிராம சேவகர்கள்சேர்த்துக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (10-22)

# முன்னேஸ்வரம் மிருக பலி விவகாரத்தில் அரசியல் வாதிகள் தலையிட வேண்டாம்

## இந்துமாமன்றம் கோரிக்கை

கொழும்பு, ஒக.29

சிலாபம் முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் கோயிலில் எதிர்வரும் முதலாம் திகதி மிருகபலி நிகழ்வு இடம்பெற இருப்பதையறிந்து வேதனைப்படுகின்றோம். அதேநேரம் அரசியல் வாதிகளையும், இந்து அல்லாத வேறு சமய குழுக்களையும் இதில் தலையிட வேண்டாமென வேண்டுகின்றோம்.

- இவ்வாறு அகில இலங்கை இந்துமாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அது விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இந்து ஆலயங்களில் மிருகபலி செய்யவேண்டாம் எனக் காலத்துக்குக்காலம் நாங்கள் வேண்டுகோள் விடுத்து வந்திருக்கின்றோம். இது எமது சமயத்திற்கு ஒவ்வாத, ஏற்றுக்கொள்ளமுடியாத பாவச் செயல் எனச்சுட்டிக்காட்டி வந்திருக்கின்றோம். மனிதர்களுக்காக மிருகங்களையோ பட்சிகளையோ எந்த ஓர் உயிர் இனத்திற்கும் ஆலயத் திருத்தலத்திலோ சுற்றாடலிலோ கொடுமை செய்வதை அனுமதிக்கமுடியாது.

சிலாபம் முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் கோயிலில் மிருகபலி நிகழ்வைச் செய்யவேண்டாமென ஆலயநிர்வாகத்தினரையும், பூசகர்களையும் வேண்டுகின்றோம். அதேநேரம் அரசியல்வாதிகளையும், இந்து அல்லாத வேறு சமய குழுக்களையும் இதில் தலையிட வேண்டாமென வேண்டுகின்றோம்.

மேலும், இதனை ஓர் அரசியல் பிரச்சினையாகவோ மதத் துவேஷ நிலைமையை ஏற்படுத்துகின்ற நிலைமையாகவோ மாற்றவேண்டாம். இந்தப் பிரச்சினைகளை கையாளும் பொறுப்பை இந்துக்களிடமே விட்டுவிடுங்கள். வழிபாட்டுத் தலத்தில் சமூகம் சம்பந்தமான பிரச்சினைகள் அல்லது கேள்விகள் எழலாம். சமூக நம்பிக்கையின் அடிப்படையில் ஓர் நிகழ்வு இடம் பெறும்போது அதனை அந்தக் கண்ணோட்டத்தில் அணுகவேண்டும். அதேநேரத்தில் சமூக விடயங்கள் சமய நம்பிக்கைகளுடன் கலக்கப்படக்கூடாது.

எமது சமயத்தின் புனிதமான கோட்பாடுகளுக்கோ அல்லது வழிபாட்டுத்தலங்களின் புனிதத்திற்கோ அல்லது தெய்வீகத்தன்மைக்கோ எவரும் களங்கம் ஏற்படுத்தக்கூடாது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர் தேசிய டிப்ளோமா கற்கையாளர்கள் புறக்கணிப்பு வழக்கு எதிர்வரும் 7 ஆம் திகதி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 29

பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த உயர்தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவம் டிப்ளோமா பட்டதாரிகளினால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 7 ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரச நிர்வாக ஆள்சேர்ப்புக்காக ஜூன் மாதம் பட்டதாரிப் பயிலுநர் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இதற்கு உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் கடந்த மாதம் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் யாழ். மாவட்டத்தில் வழங்கப்பட்ட போதும் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை. ஆயினும் ஏனைய மாவட்டங்களில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளுக்கு பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டது.

மாவட்ட உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தாம் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய கிளையிலும் முறைப்பாடு செய்திருந்தனர்.

மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுக்க முற்பட்டபோது, இலங்கைப் பொதுச் சேவை ஆணைக்குழு மேற்படி விடயம் தொடர்பில் தாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை இடைநிறுத்தியிருந்தது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 228 உயர்தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ டிப்ளோமா பட்டதாரிகள் உயர் நீதிமன்றத்தில் கடந்த மாதம் 31 ஆம் திகதி அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது மனுதாரர்கள் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், ஏனைய மாவட்டங்களில் டிப்ளோமா பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான நியமனம் வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பட்டதாரி பயிலுநர்கள் நியமனம் வழங்கப்பட்டவர்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு உள்வாங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனவே பாதிக்கப்பட்ட மனுதாரர்களுக்கு உடனயாக நடவடிக்கை மேற்கொண்டு நியமனம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

இதன்போது அரச தரப்பு சட்டத் தரணிகள் ஏனைய மாவட்டங்களில் டிப்ளோமா பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்த கால அவகாசம் தேவை என்று கோரியதால் வழக்கு அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. (10-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனா வைத்தியசாலைக்கு லிப்ற்: ஒக்ரோபரில் இயங்கத் தொடங்கும்

**அமைச் சர் பாட்டலி சம்பிக்க ரண வக்க யாழ்ப்பாணத்தில் நின் றிருந்தவேளை இந்தத் தொலைநகல் வைத்திய சாலைக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம், ஒக.29

யாழ்.போதனா வைத்திய சாலையில் நான்கு மாடிக் கட்டடத் தொகுதிக்கான லிப்ற் வசதி விரைவில் அமைக்கப் படும். அது எதிர்வரும் ஒக் ரோபர் 15 ஆம் திகதியில் இருந்து பயன்பாட்டுக்கு வரும். இவ்வாறு இலங்கை மின்சார சபையின் கொழும் புக் காரியாலயத்தில் இருந்து நேற்றுத் தொலைநகல் மூல மாக யாழ்.போதனா வைத் தியசாலைக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக வைத்திய சாலைப் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்தார்.

மின்சக்தி எரிசக்தி அமைச் சர் பாட்டலி சம்பிக்க ரண வக்க யாழ்ப்பாணத்தில் நின் றிருந்தவேளை இந்தத் தொலைநகல் வைத்திய சாலைக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, வைத்திய சாலைப் பணிப்பாளர் மற்றும் வைத்திய சங்கப் பிரதிநிதி கள் அமைச்சர் சம்பிக்க ரண வக்கவை நேற்றுப் பிற்பகல் புங்குடுதீவில் சந்தித்து லிப்ற் விடயம் தொடர்பாக கலந்துரையாடி அந்த விட யம் குறித்து தெளிவுபடுத் தும் வகையிலான மனு ஒன்றையும் அமைச்சரிடம் கையளித்திருந்தனர். அத னைப் பெற்றுக் கொண்ட அமைச்சர் இதுவிடயம் தொடர்பில் தான் உடனடி யாக நடவடிக்கை எடுப்ப தாக உறுதியளித்தார் எனவும் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித் தார். (10-4)

## வரியிறுப்பாளர்களின் வசதி கருதி பருத்தித்துறையில் நடமாடும் சேவை

### வட்டாரங்கள் தோறும் நடைபெறும்

வடமராட்சி, ஒக.27

பருத்தித்துறை நகர வரி யிறுப்பாளர்களின் வசதி கருதி வட்டாரங்கள் தோறும் நடமாடும் சேவையினை நடத்தப் பருத்தித்துறை நகர சபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைய முதலாவது நடமாடும் சேவை எதிர் வரும் 5 ஆம் திகதி புதன் கிழமை தம்பசிட்டி வட்டாரத்தில் காலை 9 மணிக்கு புலோலி மேற்கு சதாவதானி சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் பிற் பகல் 1.30 மணிக்கு அத்தி யடிப் பிள்ளையார் கோயில் சிறுவர் பாடசாலை மண்டபத் திலும் நடைபெறவுள் ளன.

இந்த நடமாடும் சேவை யில் ஆள்கள், காணிகள் பெயர்மாற்றம், சைக்கிள் மற்றும் வளர்ப்பு நாய்களுக் கான உரிமத் தகடுகள் விநி யோகம், சட்டப் பிரச்சினை கள், உப பிரிவிடுகை உள் ளிட்ட ஆலோசகைகளும் சேவைகளும் வழங்கப்ப டும் என்று சபைத் தலைவர் சபா.ர வீந்திரன் தெரிவித் துள்ளார்.

சபைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் சபை ஊழியர்களுடன் இணைந்து இந்த நடமாடும் சேவை களை மேற்கொள்ளவுள்ள னர். (எ-8)

## கடும் வறட்சியின் காரணமாக குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு

காரைநகர்ப் பிரதேசங்க ளில் தொடரும் கடும் வறட்சி யினால் நீர் நிலைகள் அனைத்தும் வற்றி வறண் டுள்ளதுடன் குடி தண்ணீ ருக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் வயிற்றோட்டம், வாந்தி போன்ற நோய்களும் பரவ ஆரம்பித்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இந்தப் பிரதேச கிராமங் களில் உள்ள கிணறுகள் உட் பட அனைத்து நீர் நிலைக ளும் வற்றி வறண்டு போயுள் ளன. இதனால் அடிப்படைத் தேவைகளுக்கே தண்ணீரி னைப் பெற்றுக்கொள்ள முடி யாத நிலையில் மக்கள் சிர மங்களை எதிர்கொள்கின்ற னர்.

காரைநகர் கரையோரக் கிராமங்களுக்கு பிரதேச சபை யினால் பவுஸர் மூலம் நீர் விநியோகிக்கப்படுகின்றது. அதுவும் வாரத்தில் 3 தினங் கள் ஒருவருக்கு 4 லீற்றர் என்ற அடிப்படையிலேயே தண்ணீர் வழங்கப்படுகிறது. அந்த தண்ணீர் மக்களின் தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்ப டுகின்றது.

காரைநகரில் உள்ள பொது அமைப்பு ஒன்றினால் காரைநகருக்கு வெளியில் இருந்து குடி தண்ணீர் கொண்டு வரப்பட்டு விநி யோகிக்கப்பட்டு வருகின் றது. அந்த தண்ணீரினைப் பெற்றுக்கொள்ளவும் மக்கள் அலைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நன்னீர் கிணறுகளில் உள்ள தண் ணீரை வடித்தெடுத்து பயன் படுத்தி வருகின்றனர். ஆனா லும் வாந்தி, வயிற்றோட்டம் போன்ற நோய்களால் பாதிக் கப்பட்டு வருவதாக தெரி விக்கின்றனர்.

இதேவேளை இந்தப் பகுதிகளில் கிணறுகள் பல பாவனைக்குட்படுத்தப் படாமல் இருக்கிறது. அதன் உரிமையாளர்கள் வெளியூர் களில் வசிப்பதனால் அவற்றை மக்கள் பாவிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

அவ்வாறான கிணறு களை வறட்சிக் காலங்களில் மக்கள் பாவனைக்குட் படுத்த பிரதேச சபை நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதியில் உள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-8-250)



சாவகச்சேரி நகரசபை மன்றத்தின் கட்டடப் பணிகள் துரிதகதியில் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளது.

## வீடமைப்பு அதிகார சபையில் 5 வருடங்கள் பணியாற்றியோருக்கு இடமாற்ற அனுமதி

யாழ்ப்பாணம், ஒக.29

தேசிய வீடமைப்பு அபி விருத்தி அதிகார சபையில் ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் சகல உத்தி யோகத்தர்கள் அடுத்த வரு டம் தை மாதத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட வுள்ளனர்.

இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் இது சம்பந்தமான சுற்றறிக் கையைச் சகல அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத் துள்ளார்.

தேசிய வீடமைப்பு அபி விருத்தி அதிகார சபையில் கடமையாற்றும் உத்தியோ கத்தர்கள் பல வருடங்களாக ஒரே இடத்திலேயே கடமை யாற்றி வருகிறார்கள். யாழ். மாவட்டத்திலுள்ள அலுவல கத்தில் மட்டும் இருபது வரு டங்களுக்கு மேல் தொடர்ந் தும் கடமையாற்றி வருபவர் களும் உள்ளனர்.

இடமாற்றம் செய்யப் படாமல் தொடர்ந்து ஒரே இடத்தில் கடமையாற்று பவர்களின் நிலைப்பாடு குறித்து தலைவரின் கவனத் துக்கு கொண்டுவரப்பட்டது. இதனால், ஒரு மாவட்டத் தில் ஐந்து வருடங்களுக்கு மேல் கடைமையாற்றி வரும் அனைவரையும் ஏனைய மாவட்டங்களுக்கு இடமாற் றம் செய்வதற்கான நடவடிக் கையைத் தலைவர் மேற் கொண்டுள்ளார்.

அடுத்த வருடம் தை மாதத்திலிருந்து இடமாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதால் ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் அனைவ ரும் விரும்பிய மூன்று மாவட்டங்களைத் தெரிவு செய்து விண்ணப்பிக்குமாறு சுற்றுநிருபத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (எ- 115)

## மாடுகளைப் பிடித்து வெட்டி விற்கும் அநியாயம்

தற்போது அல்லைப் பிட்டியில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக அலையும் மாடுகளைத் தடம் வைத்துப் பிடித்து உண வுக்காக வெட்டித் திருட்டுத் தனமாக விற்பனை செய்யும் சம்பவங்கள் அதிகரித்திருப் பதாகஅந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீட்டு அயலில் கட்டி நிற் கும் மாடுகளும் திருடப் பட்டு உணவுக்காக வெட்டி விற்கப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

திருட்டுத்தனமாக மாடு களைத் திருடி வெட்டி விற் பனை செய்தது குறித்து சில தினங்களுக்கு முன் சிலர் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். எனினும் அவர்கள் மீது நட வடிக்கை எடுக்கப்பட வில்லை என்று மக்கள் குற் றம் சுமத்துகின்றனர்.

தினசரி குறைந்தபட்சம் இரண்டு அல்லது மூன்று மாடு கள் வரை திருட்டுப் போவ தாகத் தெரிவிக்கப்படு கிறது.

இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை அதிகாரி கள் மேற்கொண்டு மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படு வதைத் தடை செய்ய வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எ-7)

## தொற்றுநோயைத் தடுக்க குடிதண்ணீர்ப் பரிசோதனை

யாழ்ப்பாணம், ஒக.29

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி நிலை காரணமாக குடிதண்ணீரில் தொற்று நோய்கள் பரவுவதற்கான சாத்தியம் உள்ளதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக குடிதண்ணீர் மாதிரிகள் எடுக் கப்பட்டு யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீடத்தில் பரி சோதனைக்காக ஒப்படைக் கப்பட்டுள்ளன என்றும் பரி சோதனை முடிவுகள் ஒரு வாரத்தில் வெளிவரும் என் றும் நல்லூர் சுகாதார வைத் திய அதிகாரி பணிமனை யினர் தெரிவித்துள்ளனர்.

கடும் வறட்சி காரணமாக கிணற்றுநீர் வற்றி கிருமிகள் பரவக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. இதனால் நெருப்புக்காய்ச்சல் உள்ளிட்ட பலவகை நோய்கள் தொற் றுவதற்கு சாத்தியம் ஏற்பட் டுள்ளது. இவ்வாறான தொற்று நோய்களில் இருந்து விலகி இருக்கவே தண்ணீர் மாதிரி கள் பரிசோதனைக்காக மருத்துவபீடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளன.

நல்லூர் சுகாதார வைத் திய அதிகாரிப் பிரிவுக்கு உட்பட்ட கொக்குவில், கோண்டாவில், திருநெல் வேலி போன்ற பிரதேசங் களில் தெரிவுசெய்யப்பட்ட 6 இடங்களிலிருந்து இந்த மாதிரிகள் நேற்று எடுக்கப் பட்டன. அவை நேற்றைய தினமே மருத்துவபீடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

பல இடங்களில் கிணற்று நீர் முற்றாக வற்றிவிட்டது. அனேகமான இடங்களில் கிணற்றில் தண்ணீர் அடிமட் டத்துக்குச் சென்றுவிட்டது. இந்த நிலை தொடருமாயின் தண்ணீர் மூலமாக கிருமிகள் பரவும் வாய்ப்பு உண்டு என் பதால் இந்த நடவடிக்கை முதற்கட்டமாக ஆரம்பிக்கப் பட்டுள்ளது என்று சுகாதாரப் பணிமனை மேலும் தெரி வித்தது. (10-4)

## சங்கானையில் நவீன சந்தை ரூ. 60 மில்லியனில் உறுதி

### பிரதேச சபை உறுப்பினர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக.29

சங்கானையில் 60 மில்லி யன் ரூபா செலவில் நவீன சந்தைக் கடைக் கட்டடத் தொகுதி 'புறநெகும' திட்டத் தின்கீழ் அமைக்கப்படவுள்ளது.

பொருளாதார அபிவி ருத்தி அமைச்சின் சிரேஷ்ட செயலாளரும்- 'புறநெகும' தேசிய இணைப்பாளருமான வியானி குணதிலக இதற்கான விசேட அனுமதியைப் பெற் றுத் தருவதாக உறுதி மொழி அளித்துள்ளார்.

இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபை தொழில் நுட்பக் குழுத் தலைவரும் உறுப்பி னருமான த.நடனேந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

வலி. மேற்கில் கட்டம் -iii 'புறநெகும' திட்டத்தின் கீழ் 60 மில்லியன் ரூபா செலவில் சங்கானையில் நவீன சந்தைக் கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள் ளது.

இதற்கான மக்களின் முன் னுரிமைத் தெரிவு, சபைத் தீர்மானம், பிரதேச ஒருங் கிணைப்புக் குழுத் தீர்மானம் என்பன அங்கீகரிக்கப்பட் டுள்ளன.

எனினும் இதற்கான மாவட்ட மட்ட தீர்மானமும் மாகாண மட்ட தீர்மானமும் இழுபறியில் உள்ளன. ஆயி னும் தேசிய 'புறநெகும' இணைப்பாளர், பொருளா தார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வின் அனுமதியைப் பெற்றுத் தரு வதாக உறுதியளித்துள்ளனர்.

மாகாண ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டத்தில் இதற் கான நடவடிக்கை எடுக்கக் கோரி விசேட கடிதம் ஒன் றையும் அனுப்பியுள்ளேன்- என்றார். (ங-41)

## சைகை மொழி தொடர்பான செயலமர்வு

வடக்கு மாகாண பிரதேச செயலகங்க ளில் பணியாற்றும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோர்களுக்கான சைகைமொழி தொடர் பான் ஐந்து நாள் பயிற்சி நெறி கைதடி முதி யோர் இல்லத்தில் செப்ரெம்பர் மூன்றாம் திகதி தொடக்கம் ஏழாம் திகதி வரை நடைபெ றவுள்ளது.

மாகாண சமூக சேவை திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத் தப்படவுள்ளதாக சமூக சேவை திணைக்களப் பணிப்பாளர் திருமதி. ந.இன்பராஜ் அறி வித்துள்ளார். (10-9).

## மருந்தாளர்களுக்குத் தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்திய சாலையில் மருந்தாளர்க ளுக்குத் தட்டுப்பாடு நில வுவதாக சுகாதார அமைச்சுக்கு தெரியப்படுத்தியும் இது வரை எவரும் நியமிக்கப்பட வில்லை என யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்திய கலா நிதி எஸ். ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

வைத்தியசாலைக்கு சுமார் 45 மருந்தாளர்கள் தேவையாக உள்ளனர். ஆனால் தற்போது 24 மருந் தாளர்களே பணியில் உள்ள னர். இதன்காரணமாக வைத் தியசாலைக்கு வரும் நோயா ளர்களுக்கு சேவையை வழங் குவதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன் மருந் தாளர்களும் வேலைச்சுமையை எதிர்கொள்ள வேண்டி ஏற் பட்டுள்ளது. ஆளணிநெருக்கடி தொடர்பாக சுகாதார அமைச் சுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை புதிதாக எவரும் நியமிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (10-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனாவை நம்பும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மூலம் தமிழ்நாட்டையும், தமிழர்களின் உணர்வுகளையும் மத்திய அரசு காயப்படுத்தியுள்ளது. 2009ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற போருக்குப்பின், இலங்கை அரசு இந்தியாவை நட்பு நாடாகக் கருதுவதைவிடவும், சீனாவையும், பாகிஸ்தானையும் தான் நட்பு நாடுகளாகக் கருதிச் செயற்படுகிறது. இலங்கையில் வடக்கு மாகாணத்தில் பலாலி, காரைநகர், மன்னார், ஆனையிறவு, தள்ளாடி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில் இராணுவத்தினர் முகாம்கள் அமைக்கவும், படையினரின் குடும்பங்களை குடியேற்றவும் சீனாவே உதவி செய்கிறது.

இதுகுறித்து ஆராய சீன இராணுவ அமைச்சர் லியாங் குவாங்ஜி நாளை (இன்று புதன்கிழமை) இலங்கைக்கு செல்லவுள்ளார். இதைவிட எதிர்வரும் செப்ரெம்பர் 15ஆம் திகதி சீன மக்கள் காங்கிரஸின் துணைத் தலைவர் யு பாங்கோ தலைமையிலான 96 பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றும் இலங்கைக்குக்கு செல்லவுள்ளது. இந்தக் குழு இலங்கையில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட உள்ளனர். இது மாத்திரமல்ல, இலங்கைக்கு சீனா 36 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் 14 அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் படையினரின் குழந்தைகளை படிக்க வைக்க ஒன்பது கோடி ரூபாய் செலவில் பாடசாலை ஒன்றையும் சீனா கட்டிக் கொடுத்திருக்கிறது. சீனாவிடமிருந்து 59 கோடி ரூபாய் செலவில் எம்.ஏ. 60 ரக பயணிகள் விமானத்தை வாங்கவும் இலங்கை ஒப்பந்தம் செய்துள்ளது. இந்தியாவை விட ஆறு மடங்கு அதிகமான பல்வேறு உதவிகளை சீன நாடு, இலங்கைக்கு செய்து கொடுத்திருக்கின்ற நிலையில் இந்தியா எதை நம்பி இன்னமும் இலங்கை நட்பு நாடு என்று சொல்லிக் கொண்டிருக்கிறதோ? இதை ஒரு தலை நட்பு என்றுதான் சொல்ல முடியுமே தவிர, இரு நாடுகளுக்கு இடையேயான சுமுகமான நட்பு என்று எப்படிச் சொல்ல முடியும்? - என்று தெரிவித்துள்ளார். (ங)

## ஈரான் செல்கிறார்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

திகதி விசேட உரையொன்றை மாநாட்டில் நிகழ்த்தவுள்ளார். அதன்பின்னர் ஈரான் ஜனாதிபதியையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார். இச்சந்திப்பின்போது இரு நாடுகளுக்கிடையிலான பரஸ்பர உறவு, முதலீடுகள் ஆகியன குறித்து விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது.

அத்துடன், ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதி, கடன் உதவிகள் ஆகியன உட்பட மேலும் சில முக்கிய விடயங்கள் தொடர்பில் இரு நாட்டு ஜனாதிபதிகளும் கலந்துரையாடவுள்ளனர் எனத் தெரியவருகின்றது. இலங்கையிலிருந்து செல்லும் அமைச்சர்கள் குழாம் அந்நாட்டின் அமைச்சர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி, அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கும் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெஹ்ரானில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இதன்போது, வடக்கு, கிழக்குப் பிரச்சினை, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசு அமுலாக்கம் ஆகியவை உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அணிசேரா நாடுகளின் குழுவில் 120 நாடுகள் அங்கம் வகிப்பதுடன், 17 நாடுகள் அவதானிப்பு நாடுகளாகச் செயற்படுகின்றமை தெரிந்ததே. 1961ஆம் ஆண்டு பெல்கிரேட்டில் நடைபெற்ற முதலாவது அணிசேரா உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட 27 நாடுகளில் இலங்கையும் ஒன்று. அத்துடன், அணிசேரா நாடுகளின் 5ஆவது உச்சி மாநாடு காலஞ்சென்ற பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் 1976ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வன்முறை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மட்டும் என்றில்லை, எல்லாவிதமான வன்முறைகளும் அதிகரித்துள்ளன'' என்று தெரிவிக்கிறார் யாழ். போதனா வைத்தியசாலையின் மனநல மருத்துவர் திருமதி முல்லை பரமேஸ்வரன்.

13 வயதுக்கும் 21 வயதுக்கும் இடைப்பட்டவர்களே பெரும்பாலும் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கின்றனர் என்று மருத்துவர் முல்லை சுட்டிக்காட்டினார். ''குடாநாட்டைப் பொறுத்தவரையில் 47 சதவீதமான துஷ்பிரயோகங்கள் இந்த வயதினரிடையேதான் நடந்துள்ளன. எஞ்சியவற்றில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்'' என்றார் அவர்.

குடாநாட்டைப் பொறுத்த வரையில் தெல்லிப்பழை, கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய 5 பிரதேச செயலர் பிரிவுகளிலேயே அதிகமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று மாவட்டச் செயலகப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

யாழ். மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டு 395 சம்பவங்களும் 2010ஆம் ஆண்டில் 320 சம்பவங்களும் 2011ஆம் ஆண்டில் 191 சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என்று கூறும் புள்ளிவிவரம், இந்த ஆண், முதல் 6 மாத காலப் பகுதிக்குள் மட்டும் 188 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று காட்டுகின்றது.

''துஷ்பிரயோகங்களுக்கு உள்ளானவர்களை சமூகத்தில் இருந்து ஒதுக்கக்கூடாது. பாதிக்கப்பட்டவர்களை முதலில் குடும்பத்தினர் ஏற்று அரவணைத்துக்கொள்ள வேண்டும். அவர்களைச் சமூகம் ஏற்றுக்கொள்வதற்கு அதுவே முன்மாதிரியாக இருக்கும்'' என்று கூறுகின்றார் மருத்துவர் முல்லை.

பாதிக்கப்பட்டவர்கள் தமது வாழ்க்கையை ஆரோக்கியமானதாகக் கட்டியெழுப்புவதற்குச் சமூகம் காத்திரமான பங்களிப்பை வழங்குவதுடன் ஒருவர் மீண்டும் மீண்டும் பாதிக்கப்படாமல் இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்துகிறார். (உ-05)

# படையதிகாரிகள் ஆளுநராவது சர்வாதிகார ஆட்சியின் அறிகுறி

**ஹக்கீம் கொதிப்பு**

கொழும்பு, ஒக.29

பெரும்பான்மைச் சமூகத்தின் இராணுவ மற்றும் படையதிகாரிகளைத்தான் ஆளுநராகவும், அரச அதிபராகவும் நியமிக்கும் புதிய பாரம்பரியம் கண்டனத்திற்கு உரியது. இது சர்வாதிகார ஆட்சியின் அறிகுறியாகவே தென்படுகிறது. இந்தப் புதிய பாரம்பரியத்தை மாற்றுவதற்கான போராட்டத்தை இந்தத் தேர்தலோடு ஆரம்பித்து அதன் பின்னரும் தொடரவேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மூதூர் பொதுமைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் ஹக்கீம் அங்கு உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்ட விவகாரம் மிகவும் பரிதாபத்திற்குரியது. அதைத்தான் நாம் பொம்மை ஆட்சி என்கின்றோம்.

அதைவிட மோசமாக ஒரு சர்வாதிகார ஆட்சி, ஆளுநர் மூலமாக இந்த மண்ணில் நடந்துகொண்டிருப்பதை நாம் கேள்விக்குட்படுத்துகின்றோம். மேல் மாகாணத்தில் இருக்கும் ஆளுநரை கிழக்கு மாகாண ஆளுநரோடு எந்தவிதத்திலும் ஒப்பிடவே முடியாது. தமக்குள்ள அதிகாரங்களைக்கூட தாரைவார்க்கக் கூடியவராகவே அவர் காணப்படுகின்றார். ஆனால், கிழக்கில் ஆளுநரின் அதிகாரம் தலைகீழாக மாறியுள்ளது.

இந்த மண்ணில் பெரும்பான்மைச் சமூகத்தின் இராணுவ மற்றும் படையதிகாரிகளைத்தான் ஆளுநராகவும், அரச அதிபராகவும் நியமிக்கும் புதிய பாரம்பரியம் மிகப் பெரும் கண்டனத்திற்கு உரியதாக இருக்கின்றது. அந்தப் புதிய பாரம்பரியத்தை மாற்றவேண்டிய போராட்டத்தை இந்தத் தேர்தலோடு ஆரம்பித்து அதன் பின்னரும் தொடரவேண்டும்.

இவற்றை விட்டுக்கொடுப்பதன் மூலம் - இவற்றை கண்டும் காணாமலும் இருப்பதன் மூலம் - இவற்றைக் கேள்விக் குட்படுத்தாமல் இருப்பதன் மூலம் - இந்தச் சமூகத்தின் விடிவை தொடர்ந்தும் பாதிக்கும் விதத்தில் அடங்கிப்போய் பேசாமடந்தைகளாக இருக்கும் காலம் மலையேறிவிட்டது.

இவற்றைப் பற்றித் தீவிரமாக சிந்திப்பதற்கும் அடுத்த கட்ட அரசியிலில் எங்களுக்கு வரும் சவால் எவையாகயிருந்தாலும், முஸ்லிம் காங்கிரஸ் என்ற இயக்கம் இந்த அரசோடு சேர்ந்த நாள் தொட்டு எங்களுக்கு எதிரான விமர்சனங்கள் எழுந்துக் கொண்டிருந்தன. எங்களது போராளிகள்கூட முஸ்லிம் காங்கிரஸின் நடவடிக்கைள் தீவிரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திய நிலையிலும் நாம் மிகவும் பக்குவமாக இந்த விடயங்களை கையாளவேண்டும் என்பதற்காகப் பொறுமை காத்தோம்.

இன்றுள்ள சூழ்நிலையில் இந்த சமூகத்தின் அரசியல் செல்வாக்கு இந்தத் தேர்தலில் மிகத் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டுள்ள நிலையில் பயந்து ஒதுங்கி ஓடி ஒளிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. மிகத் தெளிவாக இந்த விடயங்களைப் பேச வேண்டும். அரச மேலிடங்களைக் கேள்விக்குட்படுத்த வேண்டும்.

என்னைப் பொறுத்தமட்டில் சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் சம்பந்தமாக எழுந்திருக்கும் சவால்கள் சர்வதேசத்தால் கூர்மையாகப் பார்க்கப்படுகின்றன. பிராந்திய ரீதியான வல்லரசுகளும் இந்த விடயத்தை அவதானமாகப் பார்க்கின்றன. இந்த சமூகத்தின் அரசியல் இயக்கமான முஸ்லிம் காங்கிரஸ் எந்தச் சந்தர்ப்பத்திலும் நாட்டைக் காட்டிக்கொடுக்காத ஒரே சக்தியாக இருந்து வருகிறது - என்றார்.

## தனித் தமிழீழம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தமிழகத்தில் நடைபெற்ற 'டெசோ' மாநாட்டில் இலங்கையிலிருந்து கலந்துகொண்ட நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவை ஐ.தே.க. பொது எதிரணிக்குள் இணைத்துக்கொண்டு செயற்படுகின்றது என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்திருந்தது.

இது தொடர்பில் ஐ.தே.கவின் நிலைப்பாடு என்னவென ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்விக்கு கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது கட்சியின் கொள்கைகளும், நவசமசமாஜக் கட்சியின் கொள்கைகளும் வெவ் வேறானதாகும். பொது எதிரணியில் இணைந்திருப்பதால்எமது கட்சியின் கொள்கைக்கமைய செயற்பட வேண்டுமென நாம் நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவிடம் கூறமுடியாது. அதேபோல், அவரது கட்சியின் கொள்கைகளுக்கமைய நாம் செயற்பட வேண்டுமென அவர் எம்மிடம் கூறமுடியாது. நாம் பொது எதிரணியில் இணைந்திருந்தாலும் எமது கட்சியின் கொள்கைகள் வெவ்வேறே. அவரவர் கட்சியின் கொள்கைகளுக்கு அமையத்தான் அவரவர் செயற்பட வேண்டும்.

கட்சி ரீதியில் நாம் வேறுபட்டிருந்தாலும் பொது எதிரணியினர் என்ற வகையில் இந்த அரசை ஆட்சியிலிருந்து விரட்ட வேண்டும் என்பதே எமது நோக்கம். அதனடிப்படையிலேயே நாம் பொது எதிரணியினர் என்ற வகையில் செயற்படுகின்றோம்.

நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கில் எவராவது செயற்பட்டால் அவர்களுக்கு நாம் எமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவிப்போம். அத்துடன், தனித் தமிழீழம் என்ற நாட்டை இலங்கைக்குள் உருவாக்குவதற்கும் நாம் இடமளிக்க மாட்டோம்.

ஜாதிக ஹெல உறுமயவுக்கும், அரசுக்குமிடையில் பல பிரச்சினைகள் உள்ளன. முதலில் அவற்றைத் தீர்ப்பதற்கு அது வழிசெய்ய வேண்டும். அதைவிடுத்து, எம்மைப்பற்றி விமர்சிக்கக் கூடாது - என்றார்.

## ஆஸ்திரேலியா சென்ற...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

34 தமிழர்கள் மற்றும் 2 சிங்களவர்கள் உள்ளடங்கலாக 66 பேரை ஏற்றிய ஜெத்சமணி என்ற படகு பேரு வளை கடலில் இருந்து 22 மைல் தூரத்தில் வழிமறிக் கப்பட்டுள்ளது.

59 தமிழர்கள் மற்றும் 22 சிங்களவர்கள் அடங்கலாக 81 பேரை ஏற்றிய பஞ்சலி துவ என்ற படகு சிலாபம் கடலில் இருந்து 20 மைல் தூரத்தில் வழிமறிக்கப்பட் டுள்ளது.

தப்பிச் செல்ல முயற்சித்த 147 பேரில் ஆண், பெண் இருபாலாரும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் யாழ்ப் பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, சிலாபம், புத்தளம், கொழும்பு, நீர்கொழும்பு, குருநாகல் மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். பிடிக்கப்பட்ட அனைவரும் முகத்துவாரம் அழைத்து வரப்பட்டு பின்னர் மேலதிக விசார ணைகளுக்கென குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச)

## இலங்கைக்கு வரும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இடம்பெறவுள்ளதால் அதற்கான முன்னேற்பாடுகளையும் இந்தக் குழு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் இறுதிப் போர் நடைபெற்ற வன்னி பெருநிலப்பரப்புக்கும் செல்வதற்கு இந்தக் குழு இலங்கை அரசிடம் அனுமதி கேட்டுள்ள போதிலும் இன்னும் அது வழங்கப் படவில்லை. அந்தக் கோரிக்கையை இலங்கை அரசு பரிசீலித்துவருவதாகத் தெரிகிறது. (உ-சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நீதிவானுக்கு எதிரான...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சார்பாக அன்றி 'நீதிமன்றுக்கு உதவுபவர்' ('அமிக்காஸ் கூரே') என்ற வகையிலேயே முன்னிலையாகி இருந்தார்.

இந்த வழக்கில் தனது ஆட்சேபணைகளை அணைக்க கால அவகாசம் வேண்டும் என்று நீதிவான் கணேசராசா கோரினார். அதையடுத்து வழக்கை ஒக்டோபர் 31ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த நீதியரசர்கள், இடைக்காலத் தடையை, அதற்கு அடுத்த தினமான நவம்பர் முதலாம் திகதிவரை நீடிக்க உத்தரவிட்டனர்.

''நாடாளுமன்றில் கூறப்படும் விடயங்களை விமர்சிக்க நீதிமன்றுக்கு அதிகாரமில்லை - சுமந்திரன் எம்.பி. நேற்று சுட்டிக்காட்டு'' - என்ற தலைப்பில் ஜூன் 28ஆம் திகதி 'உதயன்' நாளிதழில் வெளியான செய்தி ஒன்று தொடர்பில் விளக்கமளிக்குமாறு தம்மை நீதிமன்றுக்கு அழைத்த யாழ்.நீதிவான் சட்டமுறையற்ற வகையில் தம்மை பகிரங்க நீதிமன்றத்தில் மன்னிப்புக் கோருமாறு பலவந்தப்படுத் தினார் என்று 'ரிட்' மனு ஒன்றைப் பத்திரிகை ஆசிரியர் தே.பிரேமானந்த் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

யாழ். நீதிவானின் சட்டமுறையற்ற நடவடிக்கைகளில் இருந்து தமக்குப் பாதுகாப்பு தருமாறு கோரி 'உதயன்' ஆசிரியர் தாக்கல் செய்திருந்த இந்த மனுவின் சார்பில் நேற்று ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரன், சட்டத்தரணிகள் இரான் கொரியா, நிரான் அங்கிட்டல் ஆகியோர் முன்னிலையாகி வாதிட்டனர்.

பிரதிவாதியான யாழ். நீதிவான் மாணிக்க வாசகர் கணேசராசா, ஜூலை 17 ஆம் திகதியிட்டு மேன்முறையீட்டு நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கு அனுப்பியிருந்த கடிதத்தில், தான் உதயன் ஆசிரியருக்கு எதிரான வழக்கு விசாரணையிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகிக்கொள்வதாக அறிவித்திருந்தார். தான் நீதிவான் நீதிமன்றத்தின் மேற்படி வழக்கு விசாரணையிலிருந்து விலகிக்கொள்வதால் தன்னை இந்தவழக்கின் பிரதிவாதி என்ற வகையில் நீதிமன்ற நடவடிக்கையிலிருந்து விடுவிக்கும்படியும் அவர் கேட்டிருந்தார். (உ-01)

## விபத்தில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

படுகாயமடைந்தார். உடனடியாக தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனாலும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய தேர்த் திருவிழாவுக்கு வந்திருந்த அடியார்களை ஏற்றிக் கொண்டு வந்த மினிபஸ்ஸே விபத்தில் சம்பந்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மினிபஸ்ஸில் மாட்டிக்கொண்ட சங்கர் சுமார் 20 மீற்றர் தூரம் வரையில் இழுத்துச் செல்லப்பட்டார் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

விபத்து நடந்த இடத்துக்கு விரைந்த சுன்னாகம் பொலிஸார் மினிபஸ்ஸைக் கைப்பற்றிப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். விபத்தில் சிக்கிய சைக்கிளும் கொண்டு செல்லப்பட்டது.

மினிபஸ் சாரதி சம்பவத்தைத் தொடர்ந்து வாகனத்தைக் கைவிட்டுத் தப்பி ஓடிவிட்டார். எனினும் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாகம் நீதிவான் கஜநிதிபாலன் விபத்துக்குறித்து விசாரணைகளை நடத்தினார். இறந்தவரின் உடலை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டார்.

(உ-04,86,36)

# விபத்தில் குடும்பஸ்தர் சாவு

வலி.வடக்கு, ஓக.29

சுன்னாகம், மதவடியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பத்ஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மயிலணி வடக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ்.சங்கர் (வயது 50) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் செலுத்தி வந்த சைக்கிளும் காங்கேசன் துறை வீதியில் பயணித்த மினிபஸ்ஸும் விபத்தில் சிக்கிக் கொண்டதில் சங்கர் படுகாயமடைந்தார். உடனடியாக தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனாலும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய தேர்த் திருவிழாவுக்கு வந்திருந்த அடியார்களை ஏற்றிக் கொண்டு வந்த மினிபஸ்ஸே விபத்தில் சம்பந்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மினிபஸ்ஸில் மாட்டிக்கொண்ட சங்கர் சுமார் 20 மீற்றர் தூரம் வரையில் இழுத்துச் செல்லப்பட்டார் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

விபத்து நடந்த இடத்துக்கு விரைந்த சுன்னாகம் பொலிஸார் மினிபஸ்ஸைக் கைப்பற்றிப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். விபத்தில் சிக்கிய சைக்கிளும் கொண்டு செல்லப்பட்டது.

மினிபஸ் சாரதி சம்பவத்தைத் தொடர்ந்து வாகனத்தைக் கைவிட்டுத் தப்பி ஓடிவிட்டார். எனினும் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாகம் நீதிவான் கஜநிதிபாலன் விபத்துக்குறித்து விசாரணைகளை நடத்தினார். இறந்தவரின் உடலை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டார். (உ-04,86,36)

# படையதிகாரிகள் ஆளுநராவது சர்வாதிகார ஆட்சியின் அறிகுறி

## ஹக்கீம் கொதிப்பு

பெரும்பான்மைச் சமூகத்தின் இராணுவ மற்றும் படையதிகாரிகளைத்தான் ஆளுநராகவும், அரச அதிபராகவும் நியமிக்கும் புதிய பாரம்பரியம் கண்டனத்திற்கு உரியது. இது சர்வாதிகார ஆட்சியின் அறிகுறியாகவே தென்படுகிறது. இந்தப் புதிய பாரம்பரியத்தை மாற்றுவதற்கான போராட்டத்தை இந்தத் தேர்தலோடு ஆரம்பித்து அதன் பின்னரும் தொடரவேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். மூதூர் பொதுமைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் ஹக்கீம் அங்கு உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:-

மிக முக்கியமாக நாங்கள் இந்தத் தேர்தல் சம்பந்தமாக எடுத்துள்ள முடிவால் அரசு தடுமாறிப் போயிருக்கின்றது. அதன் வெளிப்பாடாக எமது கட்சியின் வெற்றியைத் தடுப்பதற்கான முயற்சிகள் பல்வேறு கோணங்களிலிருந்து முடுக்கிவிடப்பட்டுள்ளன.

யாப்பில் உள்ள சட்டபூர்வமான காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட அனைத்து அதிகாரங்களையும் இந்த மண் அனுபவிப்பதற்கான பின்புலத்தை மாகாணசபைகளின் ஊடாக நாம் பெற்றுக்கொள்வதற்கு எங்களைத் தயார்படுத்தவேண்டும்.

கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்ட விவகாரம் மிகவும் பரிதாபத்திற்குரியது. அதைத் தான் நாம் பொம்மை ஆட்சி என்கின்றோம்.

அதைவிட மோசமாக ஒரு சர்வாதிகார ஆட்சி, ஆளுநர் மூலமாக இந்த மண்ணில் நடந்துகொண்டிருப்பதை நாம் கேள்விக்குட்படுத்துகின்றோம்.- என்றார்-


## கண்ணீர் அஞ்சலி



**இராசையா தர்ஷன் (பொறியியலாளர்)**

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

செ.சிவபாதம்
குகன் மரத் தொழிலகம்,
நவாலி கிழக்கு, மானிப்பாய்.

(22183)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA No- 1 புறொயிலர் குஞ்சுகள் , சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 30.08.2012 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

றாஜீவ், நாவலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P NO 077 6090926

(22300)(6.9.14)


## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி துரைராசா

வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா கமலாதேவி நேற்று (28.08.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைராசாவின் (தபால் அலுவலக ஊழியர்) அன்பு மனைவியும் ஞானரூபன், ஐங்கரன், தமிழினி(ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயும், தர்சா, தனுசன், தாருஜன், துவாரகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் சரஸ்வதி (கொலண்ட்), சண்முகரட்ணம் (கணக்காளர்), காலஞ்சென்ற சீவரட்ணம் மற்றும் யசோதாலட்சுமி, தர்மரட்ணம், செல்வரட்ணம், சந்தரவதனா (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் பாலராசா (கொலண்ட்), ராசாத்தி (ஆசிரியை), தயாநிதி (கிளிநொச்சி வைத்தியசாலை), காலஞ்சென்ற நடேசமூர்த்தி மற்றும் இந்திரா, அம்பிகா, ஜோகராஜன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2012) புதன்கிழமை பி.ப 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


*வேலணை கிழக்கு,*
*4 ஆம் வட்டாரம்.*

தகவல்:
குடும்பத்தினர்.


## விற்பனைக்கு

WAxxxx தொடரிலக்கமுடைய 1550km தூரம் ஓடிய ஸ்கூட்டி ஸ்கிறிக் (Scooty Streak) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0718474312 (22297)


## மரண அறிவித்தல்



### திரு வேலுப்பிள்ளை சிவப்பிரகாசம்

ஓய்வு பெற்ற முகாமையாளர் ப.நோ.கூ.ச-காரைநகர்

*மலர்வு : 18.07.1941* *உதிர்வு: 28.08.2012*

காரைநகர் புதுறோட்டை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வேலுபிள்ளை சிவப்பிரகாசம் 28.8.2012 மதியம் சிவபதமடைந்தார் அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பார்வதி தம்பதிகளின் புதல்வரும். கமலாம்பிகையின் அன்புக் கணவரும். இராஜேந்திரன், செந்தில்நாதன், அரிகரன் ஆகியோரின் தந்தையாரும். பத்மலோஜினி, மகாலட்சுமி, தீபா ஆகியோரின் மாமனாரும். சௌமியா, சஜீவன், யதர்சினி, சந்தியா, அபிநயா ஆகியோரின் அன்பு பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக 29.8.2012 காலையிலிருந்துவைக்கப்பட்டு இறுதிக்கிரிகைகள் 30.8.2012. வியாழக்கிழமை 10.30 மணியளவில் நடைபெற்று கல்கிஸ்சை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: பிள்ளைகள் 077 2718756

## நல்லூர் பிரதேச சபை

### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2012

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால்கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தயும்,கேல்விப்பத்தரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 29.08.2012 தொடக்கம் 10.09.2012 பி.ப 4.00 மணி வரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 11.09.2012 மு.ப 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 11.09.2012 மு.ப 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட்(ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட்(ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்பித்தல் வேண்டும்.
07. கேல்விப்பத்திரத்ததின் ஒரு பிரதியை தலைவர்/ செயலாளர் நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற விலசத்திற்கு பதிவுத் தாபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேல்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர் உள்ளுராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.
08. மேலதிக விவரங்கள் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளளாம்.

| தொ. இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேல்விப்பத்திக் கட்டணம் (VAT,NBT நீங்களாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | மகாத்மாஜி வீதி கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 3560.00 | 500.00 | M10/C10 |
| 02 | முத்தட்டுமடம் குறுக்கு ஒழுங்கை கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 2530.00 | 500.00 | M10/C10 |
| 03 | பூங்கனிஞ்சோலை முன் வீதி கல்வியங்காடு கல்லிட்டுத் தாரிடல் | 2600.00 | 500.00 | M10/C10 |
| 04 | பாடசாலை முன் ஒழுங்கை கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 3070.00 | 500.00 | M10/C10 |
| 05 | அரியாலை கிழக்கு கடற்கரை வீதி அரியாலை கல்லிட்டுத் தாரிடல் | 10120.00 | 500.00 | M08/C09 |
| 06 | நாராயணா கோவில் வீதி கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 3320.00 | 500.00 | M10/C10 |
| 07 | பனிக்கர் வீதி திருநெல்வேலி கல்லிட்டுத் தாரிடல் | 2350.00 | 500.00 | M10/C10 |
| 08 | கைதடி எல்லை வளைவினை மீள நிர்மாணித்தல் | 10640.00 | 500.00 | M08/C09 |

நல்லூர் பிரதேசசபை
கொக்குவில்.

[illegible],
தவிசாளர்.

## மரண அறிவித்தல்



### மார்க்கண்டு தங்கம்மா

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்பொழுது வட்டுதெற்கு மூளாய் வீதியில் வசித்துவந்தவருமான மார்க்கண்டு தங்கம்மா நேற்று (28.08.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் முருகேசு-பொன்னுத்துரை தம்பதியரின் அன்பு மருமகளும் மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் பன்னீர்ச்செல்வம், செல்வராணி, இந்திராணி, சக்திவடிவேல், ஞானம்பால், காண்டீபன், யோகமலர், கலாதேவி, மதியழகன் ஆகியோரின் அன்புத் தாயும்.

காலஞ்சென்றவர்களான நவரத்தினம், துரைச்சாமி, புவனதாஸ், மற்றும் மகேஸ்வரன், சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2012) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு தெற்கு,*
*உடுக்கியவளை வீதி,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஸ்யாவில் மருத்துவ பட்டப்படிப்பு

இலங்கை மெடிக்கல் கவுன்சில் / WHO அங்கீகரிக்கப்பட்டது

**STAVROPOL STATE MEDICAL UNIVERSITY & VOLGOGRAD STATE MEDICAL UNIVERSITY**

போதனா மொழி 100% ஆங்கிலம்.
காலம் - 6 வருடம்

2012 செப்டெம்பரிற்கான தெரிவுகள் இன்று முதல் ஆரம்பம்

- தெரிவிற்கான பரீட்சை இல்லை.
- சிறந்த மருத்துவ வெளிப்பாடு.
- பல்கலைக்கழக விடுதி.
- சிறப்பான கட்டண சலுகையுடன் வருடாந்த கட்டணம்.
- இலங்கையை ஒத்த காலநிலை.

விரைவாக பதிவு செய்யுங்கள் குறிப்பிட்டளவு ஆசனங்களே உள்ளன.

**CALL : HAROLD LEON**
**0777348049 / 0757213200**

**Global Education Training & Services (GET'S)**
E-mail : getslanka@gmail.com, getslanka@sltnet.lk
Web : www.getslanka.com
(சி/2640)(6.8.14)


## சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம்

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டம் நாளை பி.ப 3 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

(16-131)


நானும் உங்களை 2012க்கு அப்பால் அனுப்புகிறேன்

# மிஷனரி மாநாடு

நன்றி செலுத்துதல் இறைவேண்டல்

**காலம்: 28- 31, ஆவணி 2012**
**இடம்: சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்**

மாநாடு காலை 6.30 - மாலை 4.00
கண்காட்சி காலை 9.00 - மாலை 4.00
நன்றி வழிபாடும், நற்செய்தியும் மாலை 5.00 - மாலை 7.30

யாவரும் இணைந்து மிஷனரிமார்களுக்கு ஊடாக யாழ் பிரதேசம் பெற்றுக்கொண்ட கல்வி, சமூக, ஆன்மீக விருத்திகளுக்காக நன்றி செலுத்துவோம் வாரீர். இயற்கை - சமூக அழிவுகளில் இருந்து எம் சமூகத்தை பாதுகாக்க இறையாசீர் வேண்டுவோம் வாரீர்.

மேலதிக விவரங்களுக்கு உங்கள் சபை ஊழியர்களிடம் தொடர்பு கொள்ளுங்கள்

(22217)(3.6.14)



# திரு. கந்தையா இரவீந்திரனுக்கு தர்மசாஸ்தா குருகுல அந்தணப் பெருமக்களின் வாழ்த்துகள்



35 வருடங்கள் கிராமசேவையாளராக தொடர்ந்து சேவையாற்றி ஓய்வுபெறும் கந்தையா இரவீந்திரனை ஆசீர்வதித்து மேன்மேலும் அவர் பணி தொடர வாழ்த்துகிறோம்.

தா. மகாதேவக்குருக்கள்
சே.சிவபாலசர்மா
மற்றும்
குருகுலமாணவர்கள்

(22286)(5-6-7)



ஆங்கில மொழியில் 5 மாதங்களில் நிபுணத்துவம் அடைய ஓர் பொன்னான வாய்ப்பு

இவ்வருடம் A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், 16 வயதிற்கு மேற்பட்டோர், பல்கலைக் கழக, தொழில்நுட்ப கல்லூரி, வெளிவாரி, கல்வியற் கல்லூரி மாணவர்கள் அனைவருக்குமான

# SPECIAL ENGLISH COURSE

**ஆரம்பம்: 01.09.2012 காலை 8.30 மணி**

பல இடங்களுக்கும் சென்றும் பெரும் தொகைப் பணத்தையும் செலவு செய்தும் ஆங்கிலம் பேசுவது எட்டாக் கனியாக உள்ளதா?

கவலையை விடுங்கள்

- மிக மிகக் குறைந்த கட்டணம்
- இலகுவான கற்றல் கற்பித்தல் முறை
- மனத்திருப்தியான உன்னத சேவை
- டிப்ளோமா சான்றிதழ்
- ஆங்கிலத்தில் சிறப்புத் தன்மையை அனுபவிக்க

என்றும் நாம் யாழ் மாவட்டத்தில் ஆங்கிலம் கற்பித்தலில் முதலிடம்

**E-CITY, College of English**
"குருகுலம்" ஆனைப்பந்தி சந்தி, பருத்தித்துறை வீதி, யாழ்.
பிரதான வீதி, சங்கானை.
பிரதான வீதி, வேலணை.
0212250055/0777364362/0774924166

(22280)(6.8.14)



# 31ஆம் நாள் அஞ்சலி



அமரர்
**பிலிப்-குணநாயகம்**
[ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்க முன்னாள் பணியாளர்]

கடந்த [30.07.2012] திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது முன்னாள் பணியாளர் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் தொழிற் சங்கம்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்

[சி/2959][5-6-7]


# UNIVERSITY OF JAFFNA
# BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed Bids from the qualified contractors for the following services.

| Service Details | Refundable deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Providing Facilities Management Services for Hostels at Siddha Medicine Unit, Kaithady, University of Jaffna. | 2,500.00 | 500.00 | M9/C10 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |
| Providing Facilities Management Services for Kanagasuntheram Male Hostel and Sivagnanasundram Female Hostel, University of Jaffna. | 15,000.00 | 500.00 | M7/C8 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |
| Providing Facilities Management Services for various Locations, University of Jaffna. | 2,500.00 | 500.00 | M9/C10 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |

Bids form may be obtained from the Deputy Registrar / Capital Works & Planning Unit, University of Jaffna upon producing valid registration book or related document and receipt for the cash payment for the above fee at the Shroff's Counter, University of Jaffna until 07.09.2012.

Perfected Bids should be sealed and marked with the job and the name of the service on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till 2.30 p.m on 12.09.2012 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of Bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O Box 57,
Thirunelvely,
Jaffna
28.08.2012

Registrar
University of Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பூசிமெழுகிப் புனுகு பூசிக்காட்டுவது எல்லாக் காலமும் சரிப்படுமா?

போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களில் மிகப் பலர் இன்னும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவில்லை என்று அறிகிறோம். அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அவர்களுக்கான அடிப்படை வசதிகளை அரசாங்கம் இனியும் தாமதிக்காது செய்துகொடுக்க வேண்டும். இடம்பெயர்ந்தவர்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தினால் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் எவரும் மக்கள் சபையில் இவ்வாறு குரல் கொடுத்ததாக நினைத்துவிடாதீர்கள்.

இந்த நாட்டின் பிரதான பௌத்தமத பீடங்களில் ஒன்றான மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் வண.திப்பொட்டுவெவ ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரே மேற்கண்டவாறு வலியுறுத்தி உள்ளார்.

தம்மைச் சந்தித்து ஆசிபெற்ற வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் நேரில் இதனைத் தெரிவித்துள்ளார் மகாநாயக்கர்.

அதுமட்டுமன்றி, பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்கள் மீது தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் மீதான நீதிமன்ற விசாரணையைத் துரிதப்படுத்தி, குற்றமற்றவர்களை விடுதலை செய்ய வேண்டும். சிறுகுற்றம் செய்தவர்களை தேவையற்ற விதத்தில் தடுத்து வைக்கக் கூடாது. அவர்கள் மீதான விசாரணைகளை விரைந்து பூர்த்திசெய்யவேண்டும். தேவைப்படும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும் என்றும் மல்வத்த பீடாதிபதி வலியுறுத்தி உள்ளார்.

இவற்றோடு நிறுத்தாது, நீடித்துச்செல்லும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் வேலை நிறுத்தத்தை நிறுத்துவதற்கு அவசர நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் வலியுறுத்தினார். அத்தோடு நிறுத்தாமல், அரசாங்கத்துக்குள் உள்ள பல்வேறு குழுக்களும் ஒன்றிணைந்து, பல்கலைக்கழக ஆசிரியர்களின் குறைபாடுகளை நுனி முதல் அடிவரை ஆராய்ந்து தீர்வு ஒன்றை வகுத்தாக வேண்டும் என்றும் மல்வத்த மகாநாயக்கர் அறிவுறுத்தி உள்ளார்.

அவர் அத்தோடு நிற்காமல், நாட்டின் பெரும் எண்ணிக்கையான பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், ஆசிரியர்களும் இந்தளவு பெரும் பரிமாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை பரிதாபத்துக்குரியது என்றும் கவலை தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கத்தின் குறைபாடுகளைத் தகுந்த ஆலோசனைகளையும் சேர்த்து, பௌத்தமத பீடாதிபதி மனம் திறந்து கருத்து வெளியிட்டிருப்பது பெரிதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மகாநாயக்க தேரரின் ஆலோசனைகளை அரசாங்கம் பத்தோடு பதினொன்றாகச் சேர்த்துக் கொள்ள மாட்டாது என்று கருதுவதும் தப்பன்று.

இதற்கிடையில், மகாநாயக்க தேரரின் கருத்துக்களுக்கு, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், சுற்றிவளைத்து அரசின் சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை பெரிதுபடுத்திக் காட்டிச் சமாளித்திருக்கிறார் என்பதனை எவரும் புரிந்துகொள்ள இயலும். அவற்றில் சிலவற்றைப் படித்துப்பாருங்கள்:

* பல வகையான ராஜீக அழுத்தங்களின் மத்தியிலும், இலங்கை அரசு போருக்குப் பின்னரான தனது செயல் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. மக்களுக்கு நலன் விளைக்கும் விதத்தில், சாதகமான முறையில் அவற்றை முன்னெடுக்கின்றது. அதுமட்டுமன்றி அந்தத் திட்டங்களை அனைத்துலக அரசுகள் அவற்றின் பிரதிநிதிகள் நேரில் கண்டறிய வாய்ப்பு அளிக்கிறோம். அப்போதெல்லாம் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், அரசாங்கம் வடக்கில் மேற்கொள்ளும் புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகள் குறித்துத் திருப்தி தெரிவித்துள்ளனர்.

* போர் முடிவுக்கு வந்த வேளையில் - மூன்று வருடங்களுக்கு முன்னர் - தமிழ்ப் பொது மக்கள் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்திருந்தனர். அவர்களில் இன்னமும் மூவாயிரம் பேர்களை மட்டுமே மீளக்குடியமர்த்த வேண்டியுள்ளது.

* 2009 மே மாதத்தில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோரின் எண்ணிக்கை 11,600 ஆகும். ஆனால் இப்போது சுமார் 2, 000 பேர்களே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களின் குடும்பங்களுடன் இணைக்கப்பட்டு விட்டனர்.

இவ்வாறு மல்வத்த பீடாதிபதியிடம் அமைச்சர் பீரிஸ் தெரிவித்திருப்பினும், அவரது தகவல்களுக்கும் களநிலைவரங்களுக்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடுகள் உள்ளதாக பகுத்து அறியலாம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கு இணங்க -

நீண்ட காலமாக, பல வருடங்களாக சந்தேகத்தின் மீது தடுத்து வைக்கப்பட்டும், நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் மிகப் பலர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

- வாழ்க்கையின் ஓரத்துக்கே செல்லும் அளவுக்கு விரக்தியுற்ற நிலையில், சாத்வீக மார்க்கத்தில் தமது எதிர்ப்பை அவர்கள் காட்ட முனைந்தவேளை, அரச அதிகாரிகளால் மிகக் கொடூரமான முறையில் தாக்கப்பட்டதால் தமிழ் இளைஞர்கள் இருவர் உயிரிழக்க நேர்ந்துள்ளது. அதேபோன்று சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மற்றொரு அரசியல் கைதி அறிவிழந்த (கோமா) நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தகைய பல 'அடுத்த பக்கங்களை', வணக்கத்துக்குரிய மல்வத்த மகாநாயக்க தேரரிடம் எடுத்துக்கூறாமல், அரசுக்கு சார்பான நல்ல பக்கங்களை மட்டுமே அமைச்சர் பீரிஸ் தொட்டுக்காட்டியிருக்கிறார்.

நம்நாட்டு அரசாங்கமும் அதன் பிரதானிகளும், உள்நாட்டிலேயே உண்மைகளை பூசிமெழுகியும் மறைத்தும் பேசுவதனால் -

அனைத்துலக நாடுகளுக்கு எவ்வாறு சேற்றுக்குள் புனுகு ஊற்றிக் காட்டுவார்கள் என்பதனை எவரும் இலகுவில் ஊகித்துக்கொள்ளலாம்.

ஆனாலும், இந்த நாட்டு அரசினதும் அதன் பிரதானிகளினதும் செப்படி வித்தைகளை வெளிநாடுகளின் ராஜதந்திரிகளும் அரசாங்கத்தினரும் மணந்து பிடிக்கும் வல்லமை உள்ளவர்கள். ஜெனிவா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் அரசு இதனை உணர்ந்துகொள்ளத் தவறுவது ஏனோ என்பது, எவராலும் பகுத்து, வகுத்து அறியமுடியாத ஒன்றாகவே நீள்கிறது.

# வலி.வடக்கில் 190 குடும்பங்களுக்கே 'வடக்கின் வசந்தம்' இலவச மின்சாரம்

### விண்ணப்பித்தோர் எண்ணிக்கையோ 5,700

யாழ்ப்பாணம், ஓக. 29

மக்கள் மீளக் குடியமர்ந்த வலி. வடக்குப் பிரதேசத்தில் வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தினூடாக 5 ஆயிரத்து 700 குடும்பங்கள் வரையில் மின்சாரத்தைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள போதும் 190 குடும்பங்களுக்கே இதுவரையில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் மக்கள் மீளக் குடியமர்ந்து வருகின்றனர். மீளக் குடியமரும் மக்களுக்கு 'வடக்கின் வசந்தம்' வேலைத் திட்டத்தினூடாக இலவச மின்விநியோகம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் இலவச மின்சாரத்தைப் பெறுவதற்காக 5 ஆயிரத்து 700 குடும்பங்கள் வரையில் பதிவுசெய்திருந்தன. ஆனால் இவர்களுக்கான மின் விநியோகம் முழுமைப்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

மின் விநியோகத்துக்கான உபகரணங்கள் இல்லாமையே தாமதத்துக்குக் காரணம் என இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்துக்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

இதேவேளை, தாம் பாதிக்கப்பட்டுள்ள விடயம் குறித்து வலி. வடக்கு மக்கள் யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் ஆகியோருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மின்சக்தி, எரிசக்தி அமைச்சரினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்பு விடுக்கப்பட்ட போதும் இதுவரையில் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கடந்த ஜூலை மாதம் 20ஆம் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் 40 குடும்பங்களுக்கான 'வடக்கின் வசந்தம்' மின் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்பின்னர் ஏனைய பகுதிகளுக்கான மின்விநியோகம் வழங்குவதற்குரிய எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கேட்டபோது; "யாழ்ப்பாணம் வந்துள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுடன் இது தொடர்பில் கலந்துரையாடப்படும்" என்று தெரிவித்தார். (ஒ-10-5)

## பதிவு செய்யப்பட்ட 130 தனியார் பஸ்களே மத்திய நிலையத்திலிருந்து வெளியூர் சேவை

### ஆனால் அனுமதி பெறாத 70 பஸ்கள் கொழும்பு சேவையில்

யாழ்ப்பாணம், ஓக.29

யாழ். மத்திய தனியார் பஸ் நிலையத்தில் இருந்து 130 தனியார் பஸ்களே பதிவுசெய்யப்பட்டு சேவையில் ஈடுபட்டுள்ளன என்று வெளிமாவட்ட தனியார் பஸ் சங்கங்களின் முகாமையாளர் என். கண்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட தனியார் பஸ்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா, கிளிநொச்சி, முழங்காவில், துணுக்காய், முத்தையன்கட்டு, மன்னார், கண்டி, பதுளை, பேசாலை, திருகோணமலை, திருக்கோயில், பசறை, எம்பிலிப்பிட்டிய, மத்துகம, கதிர்காமம், மொனராகலை ஆகிய இடங்களுக்கு குறிக்கப்பட்ட நேரத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

சங்கத்தினூடாக உரிய அனுமதிப் பத்திரம் பெற்று யாழ். மத்திய தனியார் பஸ் நிலையத்திலிருந்து இவை சேவையில் ஈடுபடுகின்றன.

ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு சேவையில் ஈடுபடும் 70 இற்கும் மேற்பட்ட தனியார் பஸ்கள் உரிய அனுமதிப் பத்திரம் பெறாமல் சேவையில் ஈடுபடுகின்றன. இவை யாழ். முற்றவெளிப் பகுதியிலிருந்து தினமும் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. அனுமதிப் பத்திரம் பெறாத தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக நாம் விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

எனினும் யாழ். மத்திய தனியார் பஸ் நிலையத்தில் அனுமதிப் பத்திரம் இல்லாத பஸ்கள் எவையும் உட் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படுவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

(10-14)

## உள்ளூராட்சி சேவையை மேம்படுத்த திட்டம்

யாழ்ப்பாணம், ஓக.29

வடக்கின் உள்ளூராட்சி சேவையை மேம்படுத்துவதற்கான, உள்ளூராட்சி உட்கட்டுமான சேவை மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் 532.92 மில்லியன் ரூபா முழுமையாக செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் வடக்கில் நவீன வடிவிலான 10 கட்டடங்கள், 5 வீதிகள் என்பன புதிதாக உருவாக்கப்பட்டுள்ளதுடன் 2 பொறி இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டு மொத்தம் 17 வேலைகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

இந்தத்திட்டத்தில் தற்போது 7 கட்டிட நிர்மாண வேலைகள் முடிவுறுத்தப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 70 வீதமும் இலங்கை அரசு 23 வீதமும் உள்ளூராட்சி சபைகள் 7 வீதமாகவும் நிதியை வழங்கியுள்ளன .

(10-41)

# சிறைகளில் வாடுபவர்களின் வழக்குகளை துரிதமாக விசாரித்து முடிக்க வேண்டும்

### அப்பாவிகள் விடுவிக்கப்படுவதும் அவசியம்; பீரிஸிடம் மல்வத்த மகாநாயக்கர் வற்புறுத்து

கொழும்பு, ஓக.29

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக சிறையில் வைக்கப்பட்டிருப்பவர்களின் வழக்குகள் துரிதமாக விசாரித்து முடிவெடுக்கப்படவேண்டும். அத்துடன் அப்பாவிகளான கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறார் மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் அதிவணக்கத்துக்குரிய திப்பொட்டுவாவே சுமணங்கள தேரர். வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மரியாதையின் நிமித்தம் மகாநாயக்கரைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

சிறிய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் அவசியமின்றி தொடர்ந்தும் காவலில் வைக்கப்படலாகாது. அவர்கள் பற்றிய விசாரணைகளை முடித்து தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பின்னர் புனர்வாழ்வு பெறுவதற்கு அனுப்பப்பட வேண்டும் என்று மகாநாயக்கர் தெரிவித்தார்.

போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவது தொடர்பாக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச்சரிடம் விசாரித்த மகாநாயக்கதேரர், ஒரு பகுதி மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் இன்னமும் மீள்குடியமர்த்தப்படவில்லை என்று தாம் அறிந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்த மக்களில் சிலர் அவர்கள் விரும்பிய இடங்களில் குடியமர்த்தப்படவில்லையென்று தெரிவித்த மாநாயக்கதேரர், வீதி திருத்தங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் அதேசமயம் இந்த மக்களுக்கு காணிகள் அல்லது வீடுகள் மீள் குடியமர்வுக்காக வழங்கப்படவேண்டியது மிக முக்கியமாகும். அதேபோல் இந்த மக்களுக்கு அவசியமான தண்ணீர் மற்றும் மின்சாரம் போன்ற இதர வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்றார்.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்ட அவர், இந்தப் பிரச்சினையை விரைவாகத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும் - என்றார்.

வெளியுறவு அமைச்சர் முன்னர் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்தவர் என்பதைக் குறிப்பிட்ட மகாநாயக்கர், அரசில் உள்ள பல குழுவினரும் ஒன்று சேர்ந்து மாதக் கணக்கில் இழுபட்டுக் கொண்டிருக்கும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்றும் - நாட்டில் முன்னெப்போதும் இல்லாத வகையில் பெரும் எண்ணிக்கையில் பல்கலைக்கழக ஆசிரியர்களும் பேராசிரியர்களும் இவ்வளவு பெரிய அளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதைப் பார்க்க கவலையாக இருக்கிறது என்றும் கூறினார் மகாநாயக்கர்.

(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீரை வழங்கும் நீராதாரங்களை வேறு தேவைக்குப் பயன்படுத்த வேண்டாம்

## பூநகரிப் பிரதேச சபை வேண்டுகோள்

பூநகரி,ஓக.29

பூநகரிப் பிரதேசத்திலே வீதி அபிவிருத்தி மற்றும் கட்டட வேலைகளில் ஈடுபடுவோர் மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்குப் பயன்படுத்தும் கிணறுகள், குளங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பூநகரிப் பிரதேச சபையினர் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

கடும் வறட்சி காரணமாக இங்குள்ள குளங்கள், கிணறுகள் என்பன வற்றிய நிலையில் காணப்படுவதால் பவுசர் மூலமாக எடுத்துவரப்படும் தண்ணீர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் பூநகரிப் பிரதேசத்தில் இடம்பெறும் வீதி அபிவிருத்தி வேலைகள் மற்றும் கட்டட வேலைகளுக்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொள்வதற்கு குடிதண்ணீரை வழங்கும் கிணறுகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் நிலைமை மேன்மேலும் மோசமடைந்து வருகின்றது.

எனவே மக்களின் நலன் கருதி குடிதண்ணீரைப் பெறுக் கொள்ளும் கிணறுகள் மற்றும் குளங்களிலுள்ள நீரை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டாமென பூநகரிப் பிரதேச சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை பூநகரிப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள தண்ணீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முயற்சிகளில் படையினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் குளங்களில் இயந்திரங்களின் உதவியுடன் குழிகளைத் தோண்டுவதில் ஈடுபட்டுள்ளனர். இதனால் ஓரளவு நீரைப் பெறமுடிவதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மழை பொய்த்துள்ளதால் கிணறுகள், குளங்கள் ஆகியவற்றின் நீர் வற்றிக் காணப்படுகின்றன. இதனால் என்றுமில்லாத வகையில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இங்குள்ள மக்கள் குடிதண்ணீரைத் தேடி அலைந்து திரிவதோடு கால்நடைகளும் குடிப்பதற்கு நீரின்றி பெரும் அவலத்தை எதிர்கொண்டு வருகின்றன.

இங்கு நிலவும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக இடர் முகாமைத்துவ அமைச்சின் ஆலோசனைக்கு ஏற்ப படையினர் வற்றிய நிலையில் காணப்படும் குளங்களில் இயந்திரங்கள் மூலமாக குழிகளைத் தோண்டி வருகின்றனர்.

வில்லடி, சின்னத் தம்பிராய், பரமன்கிராய், கரிக்கோட்டம் ஆகிய இடங்களில் வற்றிய நிலையில் காணப்படும் குளங்களிலேயே இராணுவத்தினர் குழிகளைத் தோண்டி வருகின்றனர். இந்தக் குழிகளில் தேங்கி நிற்கும் நீரை மக்கள் தமது குடிதண்ணீர்த் தேவைக்கெனப் பயன்படுத்தி வருகின்றனர். (க-115)

# மாளிகாவத்தை காரியாலயத்தில் சான்றிதழ்களைப் பெறமுடியும்

## கிளிநொச்சி அலுவலகம் அறிவிப்பு

அக்கராயன்,ஓக.29

கிளிநொச்சி மாவட்டத்தில் பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதில் இடர்களை எதிர்கொண்டு வந்தவர்கள், கொழும்பு மாளிகாவத்தைக் காரியாலயத்திலிருந்து இவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை கிளிநொச்சி மாவட்டப் பதிவாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

1940 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் கணினி மயப்படுத்தப்பட்ட வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கடந்த காலப் போர் மற்றும் இடப்பெயர்வு காரணமாக தொலைந்து போன பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்தனர்.

மேலும் மீள்குடியமர்வின் பின்னர் மேற்படி ஆவணங்கள் கைவசம் இல்லாததால் மக்கள்தமக்குரிய உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் பெரிய சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-எ-18)

# நெல் கொள்வனவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது நெல் சந்தைப் படுத்தும் சபையினரால் நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

இதனால் தாம் அறுவடை செய்த நெல்லை விற்க முடியாத நிலையில் இருந்த விவசாயிகள் நிம்மதியடைந்துள்ளனர். தற்போது நெல் சந்தைப்படுத்தும் சபையினரால் ஒரு கிலோ நெல் 28 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. கமநல சேவை நிலையத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, பூர்த்தி செய்து ஒப்படைப்பதன் மூலம் நெல்லைச் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்க முடியும். இதுவரையும் நெல்லைக் கொள்வனவு செய்ய எவரும் முன்வராத நிலை இருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## மழை வேண்டி குளத்தில் பொங்கல்



மழை பொய்த்ததால் கடும் வறட்சியை எதிர்கொண்டுள்ள நிலையில் மழைவேண்டி அக்கராயன் குளத்தின் நடுவே பொங்கல் வழிபாட்டில் ஈடுபடும் கிராம விவசாய அமைப்பினர். (க-18)

# அக்கராயன் ம.வி. மாணவர்களுக்கு குடிதண்ணீர் பெறுவதில் சிரமங்கள்

## ஒதுக்கப்பட்ட நிதியை சரிவரப் பயன்படுத்தவில்லை எனப் பெற்றோர் விசனம்

கிளிநொச்சி,ஓக.29

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்துக்கு கடந்த ஆண்டு குடிதண்ணீர் வசதியைப் பெறுவதற்கு வழங்கப்பட்ட நிதி தகுந்த முறையில் பயன்படுத்தி குடிதண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்று மாணவர்களின் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அக்கராயன் மகாவித்தியாலயத்தில் 1972 ஆம் ஆண்டு தொடக்கம் குடிதண்ணீர்ப் பிரச்சினை நிலவுகிறது. அக்கராயன் பகுதியிலேயே மிக உயர்ந்த இடத்தில் இந்தப் பாடசாலை இருப்பதன் காரணமாக இயல்பாகவே குடிதண்ணீர்ப் பிரச்சினை நிலவுகின்றது.

இந்த நிலையில் அமைச்சர் டக்ளஸினால் இரண்டு லட்சம் ரூபாவும் அமைப்பு ஒன்றினால் 2 லட்சத்து 15 ஆயிரம் ரூபாவும் மொத்தமாக 4 லட்சத்து 15 ஆயிரம் ரூபா பாடசாலைக்கு வழங்கப்பட்டிருந்தது.

பாடசாலைக்கருகில் உள்ள தனியார் காணி ஒன்றிலிருந்து சக்தி மிகுந்த நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் பாடசாலையின் நீர்த்தாங்கிக்கு நீரை நிரப்பி குழாய்கள் மூலம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் குடிதண்ணீர் வழங்கலை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் பாடசாலை நிர்வாகம் பாடசாலை வளாகத்திலுள்ள ஜூலை மாதத்தில் முற்றாக நீர் வற்றுகின்ற கிணற்றிலிருந்து குறுகிய கால நீர் வசதிகளை மேற்கொண்டது.

கிடைக்கப் பெற்ற நிதியில் சிறந்த முறையில் பெற வேண்டிய குடிதண்ணீரைப் பெறமுடியாத நிலையில் அக்கராயன் மகாவித்தியாலயம் கரைச்சி பிரதேச சபையிடம் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடென முறைப்பாடு செய்தது.

இந்த நிலையில் கரைச்சிப் பிரதேச சபையும் ஒன்று விட்டு ஒரு நாளைக்கு குடிதண்ணீர் வழங்கலை மேற்கொண்டு வருகிறது.

கடந்த ஆண்டு கிடைக்கப் பெற்ற நிதியைச் சிறந்த முறையில் பயன்படுத்தி குடிதண்ணீர் வழங்கலை மேற்கொள்ளாத பாடசாலை நிர்வாகத்தின் நடவடிக்கை குறித்து பழைய மாணவர்களும் பெற்றோர்களும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

குடிதண்ணீர் வசதிக்காக கிடைக்கப் பெற்ற நிதி எந்த வகையில் பயன்படுத்தப்பட்டது என்பது தொடர்பாக தகுந்த விசாரணை ஒன்றினை கிளிநொச்சி வலயக் கல்வி பணிமனையினர் நடத்த வேண்டுமெனப் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இது தொடர்பாகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேலுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "இந்தப் பாடசாலையில் குடிதண்ணீர் பிரச்சினை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்பதனால் பவுஸர் மூலமாகத் தண்ணீர் வழங்குவது போதுமானதாக இல்லை. அதனால் சற்றுத் தொலைவான இடத்திலிருந்து குழாய் மூலமாகக் குடிதண்ணீர் விநியோகிக்க வேண்டியுள்ளது. அதற்கென ஒருதொகை நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. மேலதிக நிதி தேவைப்படுகிறது. அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" -என்றார்.

முன்னர் பாடசாலை நிர்வாகத்திடம் வழங்கப்பட்ட நிதி எந்தவகையில் பயன்படுத்தப்பட்டது என்பது தொடர்பாக ஆராயுமாறு இதுவரை எவரும் வலயக் கல்விப் பணிமனையிடம் கோரவில்லை என்றும், எனினும் இதுபற்றி விசாரணை நடத்தப்படும் என்றும் தெரிவித்தார். (க-எ-4-18)

# நகரைச் சுத்தமாக வைத்திருக்குமாறு வர்த்தக சங்கத்தினர் வேண்டுகோள்

கிளிநொச்சி,ஓக.29

மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் கொடிய நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றும் பொருட்டு, கிளிநொச்சி நகரைச் சுத்தமாக வைத்திருக்குமாறு கிளிநொச்சி வர்த்தக அபிவிருத்திச் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மழைகாலத்தில் நீர் தேங்கி நிற்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளதால் டெங்கு போன்ற ஆள்கொல்லி நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக ஏ-9 பிரதான வீதி, கனகபுரம் வீதி, இரத்தினபுரம் வீதி ஆகிய இடங்களில் வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் குறிப்பாக, உணவகங்களை நடத்துவோர் கண்ட இடங்களிலும் கழிவுகளைக் கொட்டாது குப்பைத் தொட்டிகளில் அவற்றை இடவேண்டும். மேலும் இவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளும் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நகரைச் சுத்தமாக வைத்திருப்பதன் மூலமாக கொடிய நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றமுடியும் எனவும் அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# தையல் கண்காட்சியும் இயந்திரங்கள் வழங்கலும்

முல்லைத்தீவு,ஓக.29

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு தையல் இயந்திரங்களை வழங்கும் நிகழ்வும், தையல் கண்காட்சியும் ஒட்டுசுட்டானில் இடம்பெற்றுள்ளன.

தையல் ஆசிரியை செல்வி சு. புவனேஸ்வரி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் தி.திரேஸ்குமார் கலந்து கொண்டார். இந்தப் பயிற்சியின் போது 35 பயிற்சியாளர்கள் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். (க-500)

# சுகாதாரக் குறைபாடுகளுடன் முல்லைத்தீவு பொதுச் சந்தை

முல்லைத்தீவு,ஓக.29

முல்லைத்தீவு பொதுச் சந்தை சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கி வருவதால் நோய்கள் பரவும் ஏதுநிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தை இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் இ[illegible] நெருக்கடிக்கு மத்தியில் இயங்கி வருகின்றது. இதனால் வியாபாரிகளும், நுகர்வோரும் என்றுமில்லாத அளவில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாகச் சந்தையின் சுகாதார நிலைமை மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது. இங்குள்ள மலசல கூடம் கதவு கூட இல்லாத நிலையில் சுகாதாரக் கேடான முறையில் காணப்படுகின்றது. அந்தப் பகுதிக்கு மூக்கைப் பொத்திப் பிடித்தபடியே தான் செல்லமுடிகிறது.

சந்தையில் வர்த்தகம் செய்வோர் மற்றும் சந்தைக்கு வருவோர் மட்டுமல்லாது வெளியிடங்களைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளும் வேறு வழியின்றி இந்த மலசல கூடத்தையே பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் ஒரு வாளிகூட இங்கு இல்லை. சந்தையில் உள்ள கிணற்றுவாளிக்கும் சந்தை வியாபாரிகளே அடிக்கடி கயிற்றினைப் போடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்தையைப் புனரமைத்துச் சுகாதார வசதிகளையும் மேம்படுத்தாது விட்டால் மக்களுக்கு நோய்களை ஏற்படுத்தும் ஒரு இடமாக இது மாறிவிடுமெனப் பலரும் அச்சம் வெளியிட்டுள்ளனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி வைத்தியசாலை வளாகத்தில் மாகாண சபைக்கான புதிய கட்டடம்

## நாளை அடிக்கல் நடும் வைபவம்

தென்மராட்சி, ஓக.29

கைதடி அரச வைத்திய சாலை வளாகத்தில் வட மாகாணசபைக்கான புதிய கட்டடம் அமைக்கப்படுவதோடு, வைத்தியசாலையும் நவீன முறையில் மீளபுதிதாக நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்ற திணைக்களங்களின் தலைவர்களுக்கான கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சுகாதார அமைச்சு, உள்ளூராட்சி அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்கள் மற்றும் கட்டடத்திணைக்கள அதிகாரிகள், கைதடிப் பகுதியில் உள்ள அரச நிறுவனங்களின் தலைவர்கள், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கைதடி அரசினர் வைத்தியசாலை வளாகத்தில் வைத்தியசாலைக்கு எந்தவித பாதிப்பும் இன்றி வடமாகாண சபைக்குரிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

சுமார் பத்து மில்லியன் ரூபா நிதியுதவியுடன் இந்த வைத்தியசாலை புதிதாக அமைக்கப்படவுள்ளது.

வைத்தியசாலையின் கட்டடப் பணிகள் இந்த வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும் எனவும் அதுவரைக்கும் பழைய கட்டடத்தில் வைத்தியசாலையின் மருத்துவப் பணிகள் வழமை போன்று நடைபெறும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலையை அகற்றி மாகாண சபை கட்டடத்தை அமைப்பதற்கு முன்னர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்த விடயம் வெளிச்சத்துக்கு வந்ததை அடுத்து கைதடிப் பகுதியில் உள்ள ஏனைய அரச தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதனை அடுத்தே இந்த வைத்தியசாலை அகற்றப்படாமல் அதே வளாகத்தில் மாகாண சபைக் கட்டடத்தை அமைப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது. (எ-17)

# தனியார் பஸ்களிலும் மும்மொழிகளில் பெயர்ப்பலகை இருத்தல் வேண்டும்

## போக்குவரத்து ஆணைக்குழு அறிவிப்பு

வடமராட்சி,ஓக.29

போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ்கள் மற்றும் பஸ்கள் பெயர்ப்பலகையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சின்னம் பொறிக்கப்பட வேண்டும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கமைய யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் யாவும் பெயர்ப்பலகைகளை புதிதாக வடிவமைத்து பொருத்தி வருகின்றன.

பஸ்கள் சென்று வரும் இடங்கள் மும்மொழிகளிலும் இருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கவனம் எடுத்துள்ள பஸ் உரிமையாளர்கள், பெயர்ப்பலகைகளில்

**அனைத்து இன மக்களும் அறியும் வகையில் பஸ்களில், பஸ்கள் சென்று வரும் இடங்கள், வழித்தட இலக்கம் என்பன மும்மொழிகளிலும் இருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.**

வழித் தட இலக்கம் மற்றும் ஆணைக்குழுவின் சின்னத்துடன் பொருத்துவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். (எ-8)

# யாழ். ஆஸ்பத்திரி நோயாளரை பார்வையிட வருவோர் அவலம்

## உச்சி வெயிலில் வீதியோரத்தில் பெரும்பாடு

யாழ்ப்பாணம், ஓக.29

யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களைப் பார்வையிட வருவோர் வைத்தியசாலை பின்பக்க வாசலில் வெயிலில் கால்கடுக்க காத்து நிற்கும் அவலம் தொடர்கிறது.

யாழ்.மாவட்டத்தின் பல இடங்களில் இருந்து நோயாளர்களைப் பார்வையிடுவதற்கென வந்து மணிக்கூட்டுவீதிப் பக்கம் கூடும் மக்களினால் இந்தப் பகுதியில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது.

அதாவது இந்த வீதியில் ஓட்டோக்கள் தரித்து நிற்கின்றன. நடைபாதை வியாபாரங்கள் இடம்பெறுகின்றன. மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையமும் உள்ளது. பயணிகளை இறக்கும் மினிபஸ்கள் பயணிகளை இறக்கி விடுவதும் ஏற்றுவதுமாகவும் இருப்பதால் இந்தப் பகுதியில் விபத்துக்கள் ஏற்படும் அபாயமும் காணப்படுகிறது.

நோயாளர்களை பார்ப்பதற்கென உள்ளே விடப்படும் பார்வையாளர்கள் பெரிய கேற் இருந்தும் சிறைச்சாலைக்குள் செல்வது போன்று சிறிய 'கேற்' ஊடாகவே உள்ளே அனுமதிக் கப்படுகிறார்கள். இந்த வாசல் ஊடாகவே வைத்தியசாலையின் மருந்துலொறிகள், சடலங்களை ஏற்றிவரும் வாகனங்கள் என்பனவும் உள்ளே அனுமதிக்கப்படுகின்றன. அவ்வேளைகளில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பார்வையாளர் உள்ளே செல்வதற்கு தடுத்து வருகின்றனர். இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (எ-78)

# சித்திரத் தேரில் அன்னை துர்க்கை



வரலாற்றுப் புகழ்மிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று அதிகாலை இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து காலை 8.40 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வெளிவீதியுலா வரும் நிகழ்வு காலை 9.15 மணிக்கு ஆரம்பமாகியது.

யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் அதிகாலை முதல் அடியவர்கள் வருகை தந்தவண்ணமிருந்தனர். வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த மக்களும் அதிக எண்ணிக்கையில் தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டனர்.

காவடிகள், தூக்குக்காவடிகள், பறவைக்காவடிகளுடன் பல இடங்களில் இருந்தும் அடியவர்கள் வருகை தந்திருந்தார்கள். பலநூற்றுக்கணக்கான அடியவர்கள் அங்கப்பிரதிட்டை, அடியழித்தலிலும் ஈடுபட்டார்கள். (எ-86)

# உள்ளூராட்சி மன்ற சம்மேளனத்தின் துணைத் தலைவராக துரைராஜா

தென்மராட்சி, ஓக.29

உள்ளூராட்சிமன்ற வரலாற்றில் முப்பது வருடங்களின்பின்னர் வடமாகாணத்தில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி சபை தவிசாளர் ஒருவர் அகில இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்திற்கு துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளரான சி.துரைராஜாவே அகில இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் துணைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திலேயே இவர் சம்மேளனத்தின் துணைத் தலைவராகவும் வடக்கு மாகாணம், யாழ்.மாவட்டம் ஆகியவற்றின் பிரதிநிதியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கு இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பின்னரே சம்மேளனத்தில் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் இணைந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-9)

# குடாநாட்டு மீனவர் பிரச்சினை; கலந்துரையாடலில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ்.மாவட்டத்தில் உள்ள மீனவர்கள்எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட காங்கேசன்துறையைத் தலைமைக் காரியாலயமாகக் கொண்டியங்கும் கரையோரப் பாதுகாப்பு இணைப்பதிகாரி ஜெயந்த டி சில்வா கலந்து கொண்டார்.

கரையோரப் பாதுகாப்பு இணைப்பதிகாரியின் முதல் சந்திப்பில் கலந்து கொண்டது தொடர்பாக கணேசமூர்த்தி தெரிவித்ததாவது:-

கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் பிரதேச ரீதியாக ஆராயப்பட்டது. வெடிபொருள் பாவித்து மீன் பிடித்தல், தங்கூசி வலை பாவித்தல், சுருக்குவலை பாவித்தல், டைனமோ ஒளி பாய்ச்சுதல் போன்ற சட்டவிரோதமான மீன்பிடிமுறை மற்றும் இழுவைப் படகைப் பயன்படுத்தி மீன்பிடித்தல் போன்றவற்றால் கடல்வளம் அழிவடைகிறது. இதனால் சிறு தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

தென்பகுதியில் கரையோரப் பாதுகாப்புக்காக தனியான படைமுகாம் மூலம் இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. வடபகுதிக்கு நிறுவப்பட்ட பாதுகாப்புக்கான படைமுகாம் மூலம் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படவுள்ளன.

மேலும் கடற்றொழில் நீரியல் வளத்துறையின் உதவி மூலம் எதிர்காலத்தில் படையினரின் உதவியும் பூரண ஒத்துழைப்பும் வழங்கப்படும்-என்றார் (எ-13)

# ஓய்வூதியர் ஒன்லைன் வசதியுள்ள வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளில் இதுவரை ஓய்வூதியம் பெறும் அனைவரும் ஒன்லைன் வசதியுள்ள வங்கிகளில் கணக்குகளை ஆரம்பித்து அதன் புகைப்படப்பிரதியை பிரதேச செயலகங்களின் ஓய்வூதியக்கிளைகளுக்கு கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் மாதாந்தம் வவுச்சர் வழங்கப்படாமல் நேரடியாக வங்கிக் கணக்குக்கு அனுப்புவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.**

இதுவரை காலமும் இணைக்கணக்கு வைத்துள்ள ஓய்வூதியர்களை தனிக் கணக்கை ஆரம்பித்து வழங்குமாறும், தொடர்ந்தும் இணைக் கணக்கு மூலம் ஓய்வூதியம் பெற விரும்புவோர் ஓய்வூதியருடன் இணைக் கணக்கில் உள்ளவர்கள் பிரதேச செயலக ஓய்வூதிய கிளையில் சமாதான நீதிவான் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட பிரமாணப் பத்திரத்தை வழங்கவேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இணை வங்கிப் [illegible] யாக உள்ளவர் குறித்த ஓய்வூதியர் உயிருடன் இருப்பதை உறுதிப்படுத்துவதுடன், அவர் வெளிநாடு சென்றால் அல்லது இறந்தால் பிரதேச செயலருக்கும் குறித்த வங்கிக் கிளை முகாமையாளருக்கும் அறிவிப்போமென பிரமாணப் பத்திரம் மூலம் உறுதிப்படுத்த வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ளது போன்று வடக்கு கிழக்கு மாகாண ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் மாதாந்தம் வவுச்சர் வழங்கப்படாமல் நேரடியாக வங்கிக் கணக்குக்கு அனுப்புவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகிறது.

இதன் பிரகாரம் ஓய்வூதியர் வருடாந்தம் ஜனவரி மாதத்தில் உயிர் வாழ் சான்றிதழ் வழங்கப்படல் வேண்டுமெனவும், ஓய்வூதியர் இறந்தால் அல்லது வெளிநாடு சென்றால் பிரிவு கிராம அலுவலர் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளை, ஓய்வூதியம் பெறும் வங்கிக் கிளை ஆகியவற்றுக்கு அறிவிக்க வேண்டும். (எ-9)

# விபத்தில் இருவர் காயம்

தளங்கிளப்பில் நேற்று இடம்பெற்ற ஓட்டோ - வாகன விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

ஓட்டோவில் பயணித்த மறவன்புலோவைச் சேர்ந்த அழகராசா உமாதேவி (வயது 64), ஓட்டோ சாரதியான கோயிலாக்கண்டியைச் சேர்ந்த இராசையா ஜனார்த்தனன் (வயது 34) ஆகியோர் காயமடைந்தவர்களாவர். இந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் அனுமதிக்கப்பட்டனர். (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுடில்லியில் நடந்த 9ஆவது இந்தியா-சீன கூட்டு பொருளாதார குழுக் கூட்டத்தின்போது வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா, சீன வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் சென் டெமிங்கை கைகொடுத்து வரவேற்றவேளை....

# புலிகள் மீதான தடை வழக்கில் வாதாட வைகோவுக்கு அனுமதி

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை குறித்த வாதங்களை முன் வைக்க ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுக்கு டில்லி உயர்நீதிமன்ற நீதிபதி வி.கே.ஜெயின் அனுமதித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீடிப்பது பற்றிய தீர்ப்பாயத்தின் அறிவிப்பு கடந்த 18 ஆம் திகதி வெளியிடப் பட்டது. தீர்ப்பாயத்தின் விசாரணையில் கலந்து கொண்ட ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தம்மையும் விசாரணையில் பங்கேற்க அனுமதிக்கக் கோரினார்.

இதுதொடர்பான விசாரணை டில்லி உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. அப்போது மத்திய அரசு சட்டத்தரணி சாண் டியோக் தமது வாதத்தை எடுத்துரைத்தார். வைகோ, தனது தரப்பு வாதத்தைத் தொடர்ந்தார்.



அவர் கூறியதாவது:

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள், அனுதாபிகளைச் சுட்டிக் காட்டித்தான் இந்தத் தடை ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது. நான், விடுதலைப்புலிகளின் ஆதரவாளன், அனுதாபி ஆவேன். கடந்த தீர்ப்பாயத்திலேயே, எங்கள் இயக்கமான ம.தி.மு.கவை, மத்திய அரசு, தன்னுடைய ஆவணங்களில் குறிப்பிட்டு உள்ளது.

புலிகளை ஆதரித்தேன் என்பதற்காக என் மீது வழக்குகள் போடப்பட்டு, நிலுவையில் உள்ளது. எனவே, சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவும், இந்த விசாரணையில் நான் பங்கேற்கவும் அனுமதிக்க வேண்டும்- என்றார்.

ஆனால் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க முடியாது. அதே நேரத்தில் தீர்ப்பாய விசாரணையிலும், புலிகள் மீதான தடை குறித்தும் வைகோ தன் வாதங்களை முன் வைக்கலாம் என்று நீதிபதி வி.கே. ஜெயின் ஆணை பிறப்பித்தார்.

தீர்ப்பாயத்தின் அடுத்த அமர்வு, சென்னையில் அடுத்த மாதம் 28, 29 ஆகிய இரு தினங்களிலும் நடைபெறவுள்ளது. (வ)

## பஸ் விபத்தில் 5 பேர் சாவு

பெரம்பலூர் அருகே வீதியோரம் நின்று கொண்டிருந்த பஸ். மீது பின்னால் வந்த மற்றொரு பஸ் மோதிய விபத்தில் ஆணையாளர் உள்பட 5 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர்.

பெரம்பலூர் மாவட்டம் அருகே நாராணமங்கலத்தில் இருந்து சென்ற பஸ் ஒன்று நேற்றுக்காலை ஆலத்தூர் அருகே தேசிய நெடுஞ்சாலையில் வீதியோரம் நின்றிருந்தது. அப்போது சென்னையில் இருந்து திருச்சி சென்ற பஸ் நின்று கொண்டிருந்த பஸ் மீது பின்னால் வேகமாக மோதியது.இந்த விபத்தில்5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இறந்தவர்களில் திருச்சி மாநகராட்சி 15 ஆவது வார்டு ஆணையாளர் அமுதா மற்றும் அவருடைய மகன் ஆனந்த் ஆகியோரும் உயிரிழந்தனர். மேலும் 10 பேர் படுகாயம் அடைந்தனர். காயமடைந்தவரகள் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ)

## மதுரை ஆதீன சுவாமிக்கு திடீர் உடல் நலத்தில் குறைவு

### நித்தியின் விவகாரம் காரணமாம்

மதுரை ஆதீனம் அருணகிரி சுவாமிக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டதன் காரணமாக அவர் சென்னையில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மதுரை ஆதீன மடத்தின் மூத்த ஆதீனம் அருணாகிரி சுவாமிகள் அண்மையில் கொடைக்கானல் சென்று திரும்பினார்.

இளைய ஆதீனம் நித்தியானந்தாவின் அழைப்பின் பேரில் கொடைக்கானல் சென்று திரும்பிய பின்னரே அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் மடத்திலேயே சிகிச்சை அளிக்கப் பட்டது. ஆனால் இந்தச் சிகிச்சையால் குணமடையாத நிலையில் அவர் சென்னை கொண்டு செல்



லப்பட்டிருக்கிறார்.

திடீரென ஏற்பட்ட இந்த சுகவீனத்துக்குக் காரணம், நித்தியானந்தா தொடர்பான ஏதோ ஒரு மனக்கசப்பில் மூத்த ஆதீனம் சிக்கியுள்ளார் என்று அவருடன் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.

அண்மையில், ஆதீன மடத்திலிருந்து நித்தியானந்தாவின் சீடர்கள் இருவரை அருணாகிரி சுவாமிகள் வெளியேற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## குஜராத் நிர்வாகத்தை பின்பற்றுங்கள்

### பிரதமருக்கு மோடி யோசனை

குஜராத் மாநில நிர்வாகத்தைப் பார்த்து,பிரதமர் மன்மோகன்சிங் நாட்டை நிர்வகிக்கக் கற்று கொள்ள வேண்டும் என்று முதல்வர் நரேந்திமோடி தெரிவித்தார்.

குஜராத் மாநிலத்தில் காங். கட்சியினர் முதல்வர் மோடியின் ஆட்சியை விமர்சித்து விளம்பரம் செய்து வருகின்றனர். இந்த நிலையில் மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடந்த செஸ் போட்டியை ஆரம்பித்து வைத்து நரேந்திர மோடி பேசுகையில்,

எதிர்க்கட்சியின் விளம்பரத்தைப் பார்த்தேன் சமுதாயத்தில் மாற்றம் காண வேண்டுமெனில், நாட்டின் நிலை மாற வேண்டும். குஜராத் மாநிலம் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. எனது அரசின் நிர்வாகத்தைப் பார்த்து பிரதமர் மன்மோகன் நாட்டை நிர்வகிப்பது என்பது பற்றி பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் - என்றார்.

## நாடாளுமன்றை முடக்க பாரதீய ஜனதா முயற்சி

### பதிலடி கொடுப்போம் என்கிறார் சோனியா

டில்லி,ஒக.29

பாரதீய ஜனதாக் கட்சி நாடாளுமன்றத்தை முடக்கி ஜனநாயகத்தை கேலிக்கூத் தாக்கி வருவதாக சோனியா காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

டில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசிய சோனியா மேலும் தெரிவித்திருப்பதாவது:

நாடாளுமன்ற செயற்பாடுகளை முடக்கி ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கும் பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு, தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும். மேலும் நிலக்கரி ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்திருப்பதாக கூறும் பா.ஜ.க. உட்பட எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டைவிவாதிக்க, மத்தியரசு தயாராக இருக்கின்றது. ஆனால், பா.ஜ.க.



விவாதத்திற்கு வர மறுப்பது ஏன்?

மத்திய அரசை மிரட்டுவது பா.ஜ.கவிற்கு பட்டர், ரொட்டி சாப்பிடுவது போல வழக்கமான ஒன்றாகி விட்டதாகவும், நாடாளுமன்றத்தை மதிக்காமல் செயற்படும் பா.ஜ.க. மக்களையும் அவமதிக்கின்றது. மத்திய அரசு மீது தவறான பிரசாரத்தை பரப்பும் பா.ஜ.கவுக்கு தகுந்த பதிலடி கொடுத்து, நாம் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிப்போம்-என்றார். (வ)

## கச்சதீவை மீட்க வேண்டும்

### அ.தி.மு.க. தீர்மானம்

தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும், கச்சதீவை மீட்க வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா தலைமையில் கூடிய அ.தி.மு.க. செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

அ.தி.மு.க. செயற்குழு கூட்டம் சென்னையில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்துக்கு அமைச்சர்கள், சட்டசபை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்களாவன,

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை நடத்திவரும் தாக்குதலை நிறுத்துவதற்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதை மத்திய அரசு கைவிடவேண்டும். கச்சதீவை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பனவாகும். (வ)

## எலி கடித்து குழந்தை இறந்ததா?

### சென்னையில் பரபரப்பு

சென்னையில் பிறந்து இறந்த குழந்தையின் கன்னத்தில் காயம் இருந்ததால் குழந்தையை எலி கடித்ததாக கூறி உறவினர்கள் மருத்துவமனையை முற்றுகையிட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சென்னையைச் சேர்ந்த ரஞ்சித் குமார், மனைவி மலர் தம்பதிக்கு கடந்த 15 ஆம் திகதி பெண் குழந்தை ஒன்று அறுவைச்சிகிச்சை மூலம் கஸ்தூரிபாய் காந்தி அரசு மருத்துவமனையில் பிறந்தது.

இந்தக்குழந்தை 8 மாதத்தில் பிறந்ததால் குழந்தையின் எடை 2 கிலோ மட்டுமே இருந்தது. இதனால், அதை தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து கண்காணித்து வந்தனர்.

குழந்தைக்கு மஞ்சள் காமாலை நோய் தொற்று



ஏற்பட்டது. அதற்காக வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர். இந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை குழந்தை திடீரென இறந்தது. உடலைப் பெறுவதற்காக ரஞ்சித் குமார் நேற்றுக் காலை உறவினர்களுடன் மருத்துவமனைக்குச் சென்றார்.

அப்போது குழந்தையின் கன்னத்தில் காயம் இருந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இந்தக்காயம் எலி கடித்ததைப்போல இருந்த காரணத்தினால் வைத்தியர்களிடம் வாக்கு வாதத்தில் ஈடுபட்டார். மேலும் உறவினர்கள் அனைவரும் அம்மருத்துவமனையை முற்றுகையிட்டனர்.இதனால்அங்கு பரபரப்பு ஏற்பட்டது. (வ)

## பா.ஜ.க. கூட்டணியில் பிளவு

பாரதீயஜனதாக்கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பிளவு ஏற்பட்டுள்ளது.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான அகாலிதளம் கட்சிக்கும் பா.ஜ.கவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு தொடர்பான விவகாரத்தில் பிரதமர் தனது பதவியை ராஜிநாமா செய்யும் வரை நாடாளுமன்றக் கூட்டத் தொடரை நடத்த அனுமதிக்கப் போவதில்லை என்ற நிலைப்பாட்டில் பா.ஜ.க. உறுதியாக உள்ளது. ஆனால் கூட்டணியில் உள்ள அகாலி தளம் கட்சியோ, இந்த விடயத்தில் பிரதமர் அளிக்கும் விளக்கத்தைக் கேட்ட பின்னர் முடிவு செய்யலாம் என கருதுகிறது.

நாடாளுமன்றத்தை முடக்கினால், பிரதமர் எங்கு போய் பதிலளிப்பார்? அவர்

பிரதான கட்சியான அகாலிதளம் கட்சிக்கும் பா.ஜ.கவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

பதிலை நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர். இந் நிலையில் அவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று அகாலிதளத் தலைவர் ஹர்ஸிம்ரத்கெளர் கருத்துத் தெரிவித் துள்ளார்.

இந்த விடயத்தில் பிரதமர் கூறும் பதிலை நாட்டு மக்கள் கேட்பதற்கு ஆவலுடன் உள்ளனர். ஆனால் அவர் இதுவரை பேசவேயில்லை என்று அவர் கூறினார். ஆனால் இந்த விடயத்தில் பிரதமர் ராஜிநாமாவைத் தவிர வேறு எதையும் ஏற்கப் போவதில்லை என்று பா.ஜ.க. உறுதிபடத் தெரிவித்து விட்டது-என்றார். (வ)


## பங்களாஷ் பிரஜைகள் ஊடுருவல்: மத்திய அரசுக்குக் கேரளா கடிதம்

வட மாநில தொழிலாளர்கள் என்ற போர்வையில் கேரளாவில் ஊடுருவும் பங்களாதேஷ் தேசத்தவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு கேரள அரசு கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

கேரளாவில் வட மாநில தொழிலாளர்கள் என்ற போர்வையில் பங்களாதேஷைச் சேர்ந்தவர்கள் 13 லட்சம் பேர் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர் என்று கேரள உளவுத்துறை தெரிவித்துள்ளது. ஆலப்புழை மாவட்டம், ராமங்கரியில் கடந்த வாரம் பிடிப்பட்ட பங்களாதேஷைச் சேர்ந்த கும்பல் 4 ஆண்டுகளுக்கு முன் கேரளா வந்துள்ளது. நன்றாக மலையாளம் பேசும் அவர்களிடம் இந்திய குடிமக்கள் என்பதற்கு எவ்வித ஆவணங்களோ அடையாள அட்டையோ இல்லை. அவர்கள் வைத்திருந்த கைப்பேசியில் ஐ.எம்.இ.ஐ. எண் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜோர்டான் தலைநகர் அம்மானுக்கு வந்த பஹ்ரைன் மன்னர் ஹமத் பிவ் இசா அல் காலிபா ஜோர்டான் மன்னர் 2 ஆம் மன்னர் அப்துல்லாவை சந்தித்தார்.

# கலிபோர்னியாவில் தொடர் நிலநடுக்கம்

## அதிர்ச்சியில் உறைந்தனர் மக்கள்

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தின் தென்கிழக்கு பகுதியில் அடுத்தடுத்து தொடராக 100 சிறு நிலநடுக்கங்கள் ஏற்பட்டதால், மக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.

கலிபோர்னியாவின் தென்கிழக்கு பகுதியில் எல் சென்ட்ரோ என்ற இடத்தின் வடக்குப் பகுதியில், உள்ளூர் நேரப்படி கடந்த 26ஆம் திகதி காலை 10.02 மணிக்கு முதல் நில நடுக்கம் ஏற்பட்டு ரிக்டர் அளவில் 3.9 என பதிவானது.

இதன்பின் தொடர்ந்து 100 இற்கும் மேற்பட்ட சிறு நில அதிர்வுகள் ஏற்பட்டன.



இதில் 30 நில அதிர்வுகள் ரிச்டர் அளவில் குறைந்த பட்சம் 3.5 என்ற அளவில் பதிவாகின.

பரா வெலி நகரின் வடமேற்குப் பகுதியில் மையம் கொண்டிருந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.5 என பதிவானது.

இந்தத் தொடர் நில அதிர்வுகளால் மக்கள் பெரிதும் பீதியடைந்தனர். நடமாடும் வீடுகளில் வசித்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். உணவகங்கள், கடைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொருள்கள் கீழே விழுந்து சேதம் அடைந்தன.

# காஸ்ட்ரோவும், சாவேஸும் இணைந்து எழுதும் புத்தகம்



கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவும், வெனிசுலா ஜனாதிபதி சாவேஸும் இணைந்து புதிய புத்தகம் ஒன்றை எழுதி வருகின்றனர் என்று தகவல் வெளியாகி உள்ளது.

கியூபா புரட்சியாளரும், முன்னாள் ஜனாதிபதியுமான காஸ்ட்ரோவின் உடல்நிலை படுமோசமடைந்துவிட்டது என்றும், அவர் இறந்தே போய் விட்டதாகவும் அமெரிக்க ஆதரவு குழுவினர் இணையத்தளங்களில் வதந்திகளைப் பரப்பி வந்த நிலையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.


இதேபோல் அசாஞ்சே விவகாரத்தில் ஈக்குவடோரின் நிலைப்பாடு வரை அனைத்து விவகாரங்களையும் காஸ்ட்ரோ உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதியன்று 86 வயதை எட்டிய காஸ்ட்ரோ 1959ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை கியூபாவின் ஜனாதிபதியாக இருந்தார். தற்போது அவரது சகோதரர் ரவுல் காஸ்ட்ரோ கியூபாவின் ஜனாதிபதியாக பதவி வகிக்கிறார்.

# ஆப்கானில் இருந்து 2014 இல் விலகுகிறது நேட்டோ படை

## முதல்கட்டமாக 202 முகாம்கள் மூடப்பட்டன

ஆப்கானிஸ்தானில் முழு பாதுகாப்பு பொறுப்பையும் ஆப்கன் பொலிஸார் மற்றும் இராணுவத்திடம் ஒப்படைத்து விட்டு, 2014 ஆம் ஆண்டுக்குள் படைகளை வாபஸ் பெற நேட்டோ படை திட்டமிட்டுள்ளது. அதன் ஒரு கட்டமாக ஆப்கானில் 202 முகாம்களை முதல் கட்டமாக மூடியுள்ளது.




ஆப்கானிஸ்தானில் தலிபான்கள், அல்குவைதா தீவிரவாதிகளை ஒடுக்கும் பணியில் நேட்டோ படைகள் முகாமிட்டுள்ளன.

இந்தப்படையில்அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி உள்பட பல நாட்டு வீரர்கள் உள்ளனர்.

நாட்டின் முழு பாதுகாப்பு பொறுப்பையும் ஆப்கான் பொலிஸார் மற்றும் இராணுவத்திடம் ஒப்படைத்து விட்டு 2014 ஆம் ஆண்டுக்குள் படைகளை வாபஸ் பெற நேட்டோ படை திட்டமிட்டுள்ளது.

அதன் ஒரு கட்டமாக ஆப்கானில் 202 முகாம்களை முதல் கட்டமாக மூடியுள்ளது. அந்த இடங்களில் ஆப்கான் பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர்.

இதுகுறித்து நேட்டோ படை செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் டேவிட் ஆல்சன் கூறுகையில், ஆப்கானில் தொலைதூரங்களில் தேசிய நெடுஞ்சாலைகளில் அமைக்கப்பட்டிருந்த சிறு சிறு முகாம்களை மூடி விட்டோம். அவற்றில் 300 வீரர்களுக்கு மேல் இருந்தனர். அவர்களை வாபஸ் பெற்று விட்டோம் -என்றார். (வ)

## நிர்வாண படத்தின் எதிரொலி

# ஆபாசப் படத்தில் நடிக்க ஹரிக்கு அழைப்பு



இளவரசர் ஹரி இளம் பெண்களுடன் நிர்வாணமாக இருந்த படங்கள் வெளியானதை அடுத்து, ஆபாசப் படத்தில் நடிக்க அவருக்கு ரூ.55.6 கோடி சம்பளம் தர ஒருவர் தயாராக உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் ஓய்வு எடுத்த பிரிட்டன் இளவரசர் ஹரி தான் தங்கியிருந்த உல்லாச விடுதி அறையில் இளம் பெண்களுடன் நிர்வாணமாக இருந்த புகைப்படங்கள் இணையத்தளத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

இந்தநிலையில் விவிட் எண்டர்டெயின்மென்ட்டைச் சேர்ந்த ஸ்டீவ் ஹிர்ஸ்ச் என்பவர் ஹரிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் தனது ஆபாச படத்தில் நடிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

அதற்காக அவர் ஹரிக்கு ரூ.55.6 கோடி சம்பளம் தரத் தயாராக உள்ளார் என்று கூறப்படுகிறது. படத்துக்கு 'தி டிரபிள் வித் ஹரி' என்று பெயரிடத் திட்டமிட்டுள்ளாராம்.

இந்தநிலையில் ஸ்டீவ் அனுப்பிய கடிதத்தைப் பார்த்துக் கோபமடைந்த அரச குடும்பத்தினர் பொது மன்னிப்புக் கேட்குமாறு ஸ்டீவுக்கு உத்தரவிட்டுள்ளார்களாம்.

இதுதவிர ஹரியின் நிர்வாணப் படங்களைப் பார்த்து கோபமடைந்த அவரது காதலி கிரெஸிடா ஹரியுடனான காதலை முறித்துக் கொண்டுள்ளார் என்று கூறப்படுகிறது. (வ)

# சர்ச்சைக்குரிய அணு விஞ்ஞானி ஆரம்பித்தார் புதிய அரசியல் கட்சி



பாகிஸ்தானில் சர்ச்சைக்குரிய அணு விஞ்ஞானி ஏ.யூ. கான் புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளார்.

இவரது கட்சிக்கு தெஹ்ரிக்- இ- தகாஃஃபஷ் பாகிஸ்தான் என்று பெயரிடப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

இதுபற்றி அணு விஞ்ஞானி ஏ.யூ. கான் கூறியதாவது:-

எதிர்வரும் தேர்தலில் நல்லவர்களைத் தெரிவு செய்ய இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் எங்கள் கட்சி சார்பில் பிரசாரம் மேற்கொள்ளப்படும். யாருக்கு வாக்களிக்கலாம், யாருக்கு வாக்களிக்கக் கூடாது என்பது பற்றி இளைஞர்களுக்கு வழிகாட்டுவோம்.

ஏற்கெனவே உள்ள கட்சிகள் மக்களிடம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறி விட்டன. குறிப்பாக பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சிக்கும் வாக்களிக்க வேண்டாம் என்று இளைஞர்களிடம் வலியுறுத்துவோம் - என்றார். (வ)

# செவ்வாய் கிரகத்தில் மனிதக் குரல்



செவ்வாய் கிரகத்திலிருந்து கியூரியாசிட்டி அனுப்பியுள்ள டிஜிட்டல் ஒலிப்பதிவில், மனிதர்களின் குரல் பதிவாகியுள்ளது தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய நாசா விஞ்ஞானிகள், இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர். நாசா விஞ்ஞானிகளால் செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள, கியூரியாசிட்டி விண்கலம் அங்கு தொடர்ஆய்வில்ஈடுபட்டுள்ளது.

கியூரியாசிட்டி விண்கலம் செவ்வாய்க் கிரகத்தை துளையிட்டும், படம் பிடித்தும் ஆய்வறிக்கையை அனுப்பி வருகிறது. இந்தநிலையில் கியூரியாசிட்டி விண்கலம் கடந்த வாரம் பதிவு செய்து அனுப்பிய ஒலிப்பதிவை, விஞ்ஞானிகள் ஆய்வு செய்த போது, அதில் மனிதர்களின் குரலை ஒத்த பல்வேறு சப்தங்கள் பதிவாகியிருப்பதைக் கண்டறிந்துள்ளனர். செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்களின் குரல் பதிவாகியுள்ளதால், அங்கு மனிதர்கள் வசிப்பது உறுதியாகியுள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

நாசா விஞ்ஞானிகளால் அனுப்பப்பட்ட கியூரியாசிட்டி விண்கலம், செவ்வாயில் மனிதர்கள் வாழுவதற்கு ஏற்ற சூழ்நிலை நிலவுகிறதா என்பதை ஆராய, கடந்த 6 ஆம் திகதி அங்கு தரையிறங்கியது குறிப்பிடத்தக்கது. (வ)

# சிரியாவில் இராணுவ ஹெலிகொப்டர் போராளிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது



சிரியாவில் போராட்டக்காரர்களுக்கும், இராணுவத்துக்கும் இடையே நடந்த கடும் துப்பாக்கி போரில், இராணுவ ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டத்தை ஒடுக்க ஜனாதிபதி அசாத் இராணுவத்தை ஏவி விட்டு, அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றொழித்து வருகின்றனர்.

இந்தநிலையில் சிரியாவின் கிழக்கு மற்றும் வடகிழக்கு மாவட்டங்களிலும், நகரங்களிலும் இராணுவத்தினர் தொடர் தாக்குதல் நடத்தினர். இராணுவ ஹெலிகொப்டர்கள் மூலம் அப்பாவி மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. போராட்டக்காரர்களும் பதில் தாக்குதல் நடத்தினர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் தொடர்ந்த இந்தத் தாக்குதலில் இராணுவ ஹெலிகொப்டர்ஒன்று, போராட்டக்காரர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டு நடுவானில் தீ பிடித்தபடி, கபூன் நகரில் [illegible] தில் தரையில் விழுந்து நொறுங்கியது. (வ)

# காலணி கழன்றதால் தடுமாறிய ஆஸி. பிரதமர்



ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கிலார்ட் மேடையில் நடந்து செல்லும் போது காலணி கழன்று விழுந்ததால் தடுமாறி கீழே விழப்பார்த்தார்.

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் சிட்னி சுங்க வரித்துறையின் சைபர் பாதுகாப்பு நடவடிக்கை குறித்த நிகழ்ச்சியில் பிரதமர் ஜூலியா கிலார்ட் பங்கேற்றார்.

மேடையில் நடந்து சென்ற போது திடீரென அவரது ஒரு காலணி [illegible] கழன்றது. தடுக்கி கீழே விழ இருந்தவரை, அவரது பாதுகாப்பு அதிகாரி காப்பாற்றி காலணியைத் திரும்ப எடுத்துக் கொடுத்தார். இந்தச் சம்பவத்தால் மேடையில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

பிரதமர் காலணியை நழுவவிடுவது இது இரண்டாவது முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஒப்பரேஷன் ஒசாமா' எழுதியவருக்கு ஆபத்து


அல்குவைதா இயக்கத் தலைவராக இருந்த ஒசாமா பின்லேடனை அமெரிக்காவின் சிறப்பு கொமாண்டோ படையினர் கொலை செய்தமை தொடர்பாக 'ஒப்பரேஷன் ஒசாமா' என்ற நூலை எழுதிய அமெரிக்காவின் முன்னாள் இராணுவ அதிகாரியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

அல்குவைதாவின் அதிகார பூர்வ இணையத் தளத்தில் 'ஒப்பரேஷன் ஒசாமா' என்ற புத்தகத்தை எழுதிய அமெரிக்க கடற்படை அதிகாரியின் புகைப்படம் பெயருடன் பிரசுரிக்கப்பட்டு அதன் கீழ், 'மாவீரன் சேக் ஒசாமா பின் லேடனை படுகொலை செய்த நாய்' என்று பகிரங்கமாக விமர்சிக்கப்பட்டிருபதால் அவரது உயிருக்கு தீவிரவாதிகள் குறிவைத்திருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

இதேநேரத்தில் அமெரிக்க இராணுவத் தளபதிகளும் இரகசியங்களை அம்பலப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டுள்ளனர்.

சர்ச்சைக்குரிய அந்த புத்தகத்தில், ஒசாமா பின்லேடனைக் தாக்கும் முயற்சிகளை முன்னெடுக்க அதிபர் ஒபாமா தயாராக இருக்கவில்லை என்றும் மூன்று முறை இத்திட்டத்தை அவர் ஒத்திப்போட்டார் என்றும் விமர்சிக்கப்பட்டிருந்தது. இப்புத்தகம் அமெரிக்காவின் இரட்டை கோபுர தகர்ப்பு நாளான செப்ரெம்பர் 11 ஆம் திகதி வெளியிடப்பட உள்ளது. (வ)

# விமானம் வீழ்ந்து நொருங்கியது பயணிகள் நால்வர் கருகிச் சாவு



கனடாவில் குட்டி விமானமொன்று விபத்துக்குள்ளானதில் விமானி உட்பட நால்வர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர்.

தென்மேற்கு ஒன்டாரியோவில் இந்த விபத்து நடந்தது. விபத்துக்கான காரணம் குறித்து மாநிலப் பொலிஸாரும், போக்குவரத்துப் பாதுகாப்பு பிரிவினரும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 24ஆம் திகதி காலை 8.30 மணிக்கு செஸ்னா 72 என்ற விமானத்தை வாட்டர்லூ வெலிங்டன் ஃபிளைட் சென்ட்டரில் இருந்து வாடகைக்கு எடுத்துச் சென்றனர்.

இதில் டொரொண்டோவைச் சேர்ந்த முகம்மது ஷான்வாஸ் ஜியா(வயது 23), வசாய் ரிஸ்வான் (வயது 27) மற்றும் மிஸ்ஸிஸ்ஸாகாவைச் சேர்ந்த விக்டோரியா மார்கரெட் லூக்(வயது 19) என்ற பெண்ணும், மார்கோ மிஸிச்(வயது-20) என்ற விமானி யுடன் புறப்பட்டனர்.

போகும் வழியில் ஒரு சோளக்கொல்லை மீது விமானம் மோதி விழுந்து விபத்துக்குள்ளானதில் நால்வரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஹேமில்ட்டன் மருத்துவ மனையில் நால்வரது உடல்களும் பிரேதப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து பாதுகாப்புப் பிரிவின் மாநில அதிகாரி கெம் வெப்ஸ்டெர் கூறுகையில், விமானம் நல்ல நிலையில் இருந்ததாகத்தான் தெரிகிறது. ஆனால் விபத் தின் போது அதிக சேதம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து விசாரணை நடை பெற்று வருகிறது- என்றார். (வ)

## சடலம் மீது சிறுநீர்:

# அமெ. வீரர்களுக்கு விரைவில் தண்டனை

ஆப்கனில் தலிபான்கள் சடலத்தின் மீது சிறுநீர் கழித்த அமெரிக்க படை வீரர்களுக்கு அபராதம் அல்லது தண்டனை விதிக்கப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி அன்று ஆப்கனின் ஹெல் மாண்ட் மாகாணத்தின் மூஸாகூலா மாவட்டத்தில் தலிபான்கள் மீது அமெரிக்க படையினர் தாக்குதல் நடத்தினர்.

இதில் தலிபான்கள் உயிரிழந்தனர். உயிரிழந்த இவர்களின் உடல்கள் மீது சிறுநீரைக் கழித்து மகிழ்ச்சியை தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் காணொலியாகக் கடந்த ஜனவரி மாதம் வெளியான போது ஆப்கன் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் கண்டனம் தெரிவித்தார். சில தலிபான் அமைப்பு தலைவர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித் தனர்.

இதுதொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில் மூன்று படையினர் நீதித்துறை சாராத குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா இராணுவ சீருடையில் சிறுநீர் கழித்து கேவலமாக நடந்து கொண்டது அந்தநாட்டின் இராணுவ நன்னடத்தை விதிமுறைகளை மீறிய செயல் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுநீர் கழித்த குற்றத்துக்காக விரைவில் அவர்களுக்கு அபராதம் அல்லது தண்டனை அறிவிக்கப்பட உள்ளது. (வ)

# தென்கொரியாவில் கடும் சூறாவளி சீன மீனவர்கள் 30 பேர் மாயம்



தென்கொரிய நாட்டில் பயங்கர சூறாவளி வீசியதில் 30 சீன மீனவர்கள் மாயமாகியுள்ளனர்.

தென்கொரியாவின் தென்பகுதியில் உள்ள தீவு நகரமான ஜெஜூ பகுதியில் பயங்கர சூறாவளி வீசியது.

இந்த சூறாவளியில் சிக்கி, அப்பகுதியில் பயணம் செய்த இரு படகுகள் தூக்கி வீசப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் 30 இற்கும் மேற்பட்ட சீன மீனவர்கள் மாயமாகி உள்ளனர்.

இந்தப்பகுதியில் வீசிய கடும் சூறாவளியால் அந்தப் பகுதியில் கடும் மின்தடை ஏற்பட்டுள்ளது.

பாடசாலைகள், அரச அலுவலகங்கள் உள்ளிட்டவைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

சூறாவளி காரணமாக அமெரிக்க- தென்கொரிய நாடுகளுக்கு இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சி நிறுத்தப்பட்டுள்ளது. (வ)

# தலிபான் அமைப்பின் தலைவர் முல்லா ஓமர் பாகிஸ்தானில்

வோஷிங்டன், ஓக.29



தலிபான் அமைப்பின் தலைவரான முல்லா ஒமரும் அவரது முக்கிய தளபதிகளும் பாகிஸ்தானில்தான் உள்ளனர் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அல் குவைதா தலைவர் பின்லேடன் பாகிஸ்தானில் தான் உள்ளனர் என அமெரிக்கா கூறி வந்ததை பாகிஸ்தான் மறுத்து வந்த நிலையில், அந்த நாட்டின் அபோ பாத் நகரில் வைத்து பின் லேடனைக் கொன்றது அமெரிக்கா.

இந்த நிலையில் முல்லா ஒமரும் அங்குதான் இருப்பதாக அமெரிக்கா திட்ட வட்டமாகக் கூறியுள்ளது. ஆனால், அவர் ஆப்கானிஸ் தானுக்குள் தான் இருக்கிறார் என்று பாகிஸ்தான் கூறி வருகிறது.

இது குறித்து ஆப்கானிஸ் தானில் உள்ள நேட்டோ படையின் தலைவரும் அமெரிக்க இராணுவ மூத்த அதிகாரியுமான ஜெனரல் ஜோன் அலென் 'வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில்,

"முல்லா ஒமரும் அவரது முக்கிய குழுவினரும் எல்லை தாண்டி பாகிஸ்தானுக்குள் தான் உள்ளனர்.

பாகிஸ்தானில் இருந்தபடி இன்னும் ஆப்கானிஸ் தானுக்குள் அப்பாவி இளைஞர்களை, மதரீதியில் மூளைச் சலவை செய்து ஆயுதம் ஏந்தி போராட அனுப்பி வருகின்றனர். அவர்கள் நேட்டோ படையினரைத் தாக்கி வருகின்றனர். பதில் தாக்குதலில் அவர்கள் கூட்டம் கூட்டமாக அழிக்கப்பட்டு வருகின்றனர்.

முல்லா ஒமர் அனுப் [illegible] தலிபான்கள் எங்களை மட்டுமல்ல, அப்பாவி மக்களையும் கொன்று குவித்து வருகின்றனர். ஆனால், பொது மக்களைத் தாக்கக் கூடாது என்று பெயரளவுக்கு முல்லா ஒமரிடமிருந்து அறிக்கைகள் வருகின்றன.

எனினும் தலிபான்கள் அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதை நிறுத்தவில்லை. இதைப் பார்க்கும் போது தலிபான்கள் ஒமரின் கட்டுப்பாட்டில் இல்லை என்று கூட நினைக்கத் தோன்றுகிறது"-என்றுள்ளது. (வ)


## சேவை நலன் பாராட்டு

திருமதி ரஞ்சனி கிறிஸ்தோபர் (SLTS-I)

யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை



யா/சிறுப்பிட்டி அ.த.க பாடசாலையில் கடந்த எட்டு வருடங்கள் சங்கீத ஆசிரியையாகக் கடமையாற்றி இன்று 29.08.2012 55ஆவது வயதில் இளைப்பாறும் எமது ஆசிரியை திருமதி ரஞ்சனி கிறிஸ்தோபர் அவர்களை அவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சி யாகவும் சிறப்பாகவும் அமைந்து அவரது குடும்பத்துடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிசங்கம்
யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை,
நீர்வேலி.

(22251)(5-6-7)

## குறைவிலா நிறைவாய் வாழ வாழ்த்தும் சேவை நலன் பாராட்டு

கந்தையா ஸ்ரீஸ்கந்தராஜா

(கிராம சேவையாளர்-சிறுப்பிட்டி கிழக்கு)



தன்னலம் கருதாத வீரனாய்
தரணி போற்றும் தீரனாய்
மக்கள் நலனில் மண்பினனாய்
மனிதனுள் மாணிக்கமாய் திகழ்ந்து
சேவையில் ஒய்வுபெறும் உயர்திரு
கந்தையா ஸ்ரீஸ்கந்தராஜா
அவர்கள் என்றும் நல்லவண்ணம்
வாழ நற்பணிகள் ஓங்க இறையருள்
கிடைப்பதாக

உவகையுடன் வாழ்த்தும்
இராமச்சந்திரன் குடும்பம்

(22267)



## பிரான்பற்று அருள்மிகு பெரியவளவு முருகமூர்த்தி தேவஸ்தானம் சரவணப்பொய்கைப் பிரவேஷப் பெருவிழா

காலம் : 30.08.2012 வியாழக்கிழமை காலை 8:30 மணி

### நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. இறைவணக்கம்
3. தலைமையுரை : பேராசிரியர் (கலாநிதி) பொன். நவரட்ணம்
4. வரவேற்புரை : திரு. நா. ஸ்ரீஸ்கந்தராசா
5. ஆசியுரை : நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சிவஸ்ரீ . இ. உலகேஸ்வரக்குருக்கள் ஆலய பிரதமகுரு
6. தீர்த்தத்தடாகப் பிரவேஷ நிகழ்வு : நல்லை ஆதீன குரு முதல்வர்
7. பெயர்ப்பலகை திரைநீக்கம் : தேர்த்திருவிழா உபயகாரர்
8. சிறப்புரை : கலாநிதி ஆறு.திருமுருகன் (தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானம்)
   வைத்திய கலாநிதி சி. சிவகுமார்
   திருமதி உ. இராஜேஸ்வரி (பிரதம கணக்காளர் - பிரதேச செயலகம், சங்கானை)
   திரு .கு. வரதராசா சமாதானநீதிவான் (தேவஸ்தான பரிபாலன சபைப் பொருளாளர்)
9. உபயகாரர் உரை
10. வாழ்த்துரை : திரு. ந. கனகதாஸ்
11. நன்றியுரை : திரு. அ. சின்னராசா

தேர்த்திருவிழா உபயகாரர்
திரு . சு . சின்னராசா குடும்பம்

[22213][6.7.8]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(24)



நம்மிடம் உள்ள விலைமதிக்க முடியாத ஒன்று நம்முடைய மனம்தான். மனித உடலில் அது எங்கே இருக்கிறது. எப்படிச் செயற்படுகிறது என்று இதுவரை எவராலும் கண்டுபிடித்துச் சொல்லமுடியவில்லை.

அந்த மனம் மகத்தான வலிமை படைத்தது என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்கிறார்கள். ஒவ்வொரு மனிதனையும் அவனுடைய மனம்தான் உருவாக்குகிறது. எண்ணங்களுக்கேற்ப மனிதன் உருவாகுகிறான். ஆக ஒரு காரியத்தைச் சாதிக்க முடியுமென்று நீங்கள் உறுதியாக நம்பினால் அதைச் சாதித்து விடலாம். மன வலிமையைக் கொண்டு சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. அதனால் சாதனைகள் அனைத்தும் உங்கள் அருகிலேயே இருக்கின்றன.

சோதனைகள் என்பது உங்களுக்கு அருகில் இருக்கவழியில்லை. வெளியிலிருந்து உருவாகின்றன. உங்கள் செயல்களிலிருந்து உருவாகின்றன. சோதனைகள் உங்களுக்கு அருகில் இருப்பதும் உங்களுக்குத் தூரத்தில் இருப்பதும் உங்களுடைய மனதைப் பொறுத்தவிடயமல்ல.

எதையும் செய்ய முடியும் என்று நம்புங்கள். செய்து முடிக்கின்ற ஆற்றல் உங்களுக்குத் தானாகவே வந்துவிடும்.

மனம் என்பது உடலைத் தாண்டி வெகுதூரம் பல்லாயிரம் மைல்கள் கூட பரவிச் செல்லக்கூடிய ஆற்றல் படைத்தது. நீங்கள் இடுகின்ற கட்டளைகளைச் செய்து முடிக்க உங்கள் மனம் எப்போதும் தயாராக காத்து இருக்கவேண்டும். இந்த வேளையில் முடித்தே ஆகவேண்டும் என்று மனதுக்குக் கட்டளையிடுங்கள். முடிக்கின்ற வழிவகைகள் என்ன என்று அது உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கும்.

நுட்பமான கருவிகள் எதுவும் இல்லாதிருந்த காலத்தில்தான் நம்முடைய ஞானிகள் கிரகங்களை ஆராய்ந்து அவற்றின் போக்குகளைத் தெளிவாக கணித்து வான சாஸ்திரத்தை நமக்கு வழங்கினார்கள். இது எப்படி அவர்களுக்குச் சாத்தியமாயிற்று? பிரபஞ்சம் யாவும் வியாபித்து உண்மைகளை அறிகின்ற மனதை அவர்கள் பெற்றிருந்தார்கள்.

மெய்யறிவை நம்முடைய மனதின் துணையுடன் தான் அறியமுடியும். ஒவ்வொருவர் மனத்துக்கும் இந்தச் சக்தி இருக்கிறது. உணர்ந்து கொண்டவர்கள் பயன்படுத்துகிறார்கள். உணராதவர்கள் மனதை முடக்கிப் போட்டுவைத்து விடுகிறார்கள். மனதின் துணை கொண்டு மகத்தான காரியங்களை நீங்கள் சாதிக்க முடியும். நம்புங்கள். அதனால்தான் நம்பிக்கை மிகப் பெரிய பலமாக கருதப்படுகிறது. பெரிய சாதனையாளர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பார்த்தால் மேலே சொன்ன உண்மை தெளிவாக விளங்கும்.

ஒரேயொரு சாதனையாளரின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தாமஸ் ஆல்வா எடிசன் மிகப் பெரிய விஞ்ஞானி என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். மனித வாழ்க்கைக்குப் பயன்படும் நூற்றுக்கணக்கான சாதனங்களைக் கண்டுபிடித்தவர் அவர்.

அவருடைய அறுபத்தி ஏழாவது வயதில் நடந்த சம்பவம் இது. அப்போது அவர் பெரிய தொழிற்சாலைக்கு முதலாளியாக இருந்தார். அவருடைய மகனுக்கு அப்போது இருபத்தி நான்கு வயது. ஒருநாள் அவருடைய தொழிற்சாலை திடீரென்று தீப்பிடித்துக் கொண்டது. தீயை அணைக்க முடியவில்லை. தீ வேகமாகப் பரவி தொழிற்சாலை முழுவதும் சாம்பலாகிக் கொண்டிருந்தது. தொழிற்சாலை தீப்பிடித்து எரிவதைக் கேள்விப்பட்ட அவருடைய மகன் பதறிப் போனான். தந்தையைத் தேடிக் கொண்டு ஓடினான். அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. முடிவில் எரிந்து கொண்டிருக்கின்ற தொழிற்சாலையை அவன் அடைந்தபோது அங்கே தாமஸ் அல்வா எடிசன் வான்நோக்கிச் செல்லும் அக்னி நாக்குகளைப் பார்த்தபடியே நின்று கொண்டிருக்கிறார்.

எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்று தந்தையிடம் மகன் கதறி அழுதான். அவரோ கொஞ்சமும் சலனமின்றி "உடனே போய் உன் அம்மாவை அழைத்துக்கொண்டு வா. இவ்வளவு பெரிய கட்டடம் தீப்பிடித்து எரிவதைப் பார்க்கின்ற சந்தர்ப்பம் அவளுக்கு இனி கிடைக்காது" என்று சொன்னார்.

பொறுப்பில்லாமல் தாமஸ் அல்வா எடிசன் இப்படிப் பேசியதாக நாம் எண்ணிவிடக் கூடாது. தொழிற்சாலை நாசமாகிவிட்டதை இனி தடுக்க முடியாது என்பது அவருக்குத் தெரியும். அதற்காக இனி கவலைப்பட்டு பயன் இல்லை. எரிகின்ற காட்சியை மனைவி பார்த்து ரசிக்கட்டும் என்றே அவர் அப்படிச் சொன்னார். இந்தச் சந்தர்ப்பம் ஒரு பெரிய உண்மையை உணர்த்துகின்றது. இதைவிடப் பெரிய சோதனை ஒரு மனிதனுக்கு ஏற்பட முடியாது. ஆனால் நடந்துவிட்டதை இனி மாற்றியமைக்க முடியாது என்பதை எடிசன் தெளிவாகப் புரிந்துகொண்டார்.

-பி.சி.கணேசன்- (தொடரும்)

# வாழ்க்கைக்கு அர்த்தம் தருவது தேடலோடு கூடிய வாசிப்பாகும்

## மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் தெரிவிப்பு

வடமராட்சி, ஓக.29

நமது வாழ்க்கைக்கு அர்த்தமும், ஆழமும் தருவது தொடர்ச்சியான தேடலோடு கூடிய வாசிப்பாகும். வாழ்க்கையை நாம் முழுமையாக வாழ்வதில்லை. வாழ்க்கை என்னும் கலையைக் கற்றுக்கொள்வதிலேயே நம் ஆயுள் முடிந்து விடுகின்றது. அதற்குள் தேடலைத்தேடி வாழ்க்கையை அர்த்தமும் ஆழமும் உள்ளதாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் தெரிவித்தார்.

சீனா உதயகுமார் எழுதிய "பகிர்வு" என்னும் கட்டுரைத் தொகுதி நூல் அறிமுக விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தமிழ்நேசன் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் அதிபர் ச. செல்வானந்தம் தலைமையில் பாடசாலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்நேசன் அடிகளார் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய கணினி யுகத்தில் வாசிப்புப் பண்பாடு அருகிவருகின்றது. இதனைக் கண்கூடாக காண்கிறோம். தொலைக்காட்சி, வானொலி, கணினி, கைபேசி போன்ற நவீன தொழில்நுட்ப வசதிகள் இன்றைய இளைய தலைமுறையினரின் வாசிப்புப் பழக்கத்தைப் பின்நோக்கி இழுத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது

வாசிப்புப் பழக்கம் குறைந்து விட்டது என்பதை விட வாசிப்பு முறைமை மாறிவிட்டது என்று சொல்வதே பொருத்தமானது. அச்சில் வந்த நூல்களை வாசிப்பதை விட, கணினித்திரையில் வாசிக்கின்ற நிலைமைக்கு வாசிப்பு முறைமை மாறிவிட்டது.

E.-LEARNING என்று சொல்லப்படுகின்ற இந்த வாசிப்பு முறை மூலம் வாசிக்கத்தெரிந்தவர்கள் எவ்வளவோ விடயங்களைக் கற்றுக்கொள்ளலாம். இதற்குத் தேடல் மனம் வேண்டும். தொடர்ச்சியாக வாசிக்கின்ற ஆர்வம் வேண்டும்.

உனக்குத் தெரிந்தது எது என்பதைத் தெரிந்து கொள்வதும், உனக்குத்தெரியாது என்ன என்பதை அறிந்து கொள்வதுமே வாழ்வின் உண்மைத்தேடல் என சீனத் தத்துவ ஞானி கன்பூசியஸ் கூறியுள்ளார். சிந்தனை இல்லாத படிப்பு, படிப்பு இல்லாத சிந்தனை இவை இரண்டுமே நடைமுறை வாழ்வுக்கு உதவாமல் தீமையை விளைவிக்கவல்லன.

இந்த நூலாசிரியர் சிந்தனையோடு படிக்கின்றார். படிப்பதோடு சிந்திக்கின்றார். அதையே இந்த நூலின் வழியாக நம்மோடு பகிருகின்றார். ஆழமான தேடலினால் வெளிக்கொணரப்பட்டுள்ள கனதியான கருத்துக்கள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும் தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் ருசியிருக்கும் என்ற இக்கால கவிஞனின் பாடலில் உள்ள தத்துவத்தை நூலாசிரியர் நன்கு தெரிந்து வைத்திருக்கின்றார் போலும். அதனால் தான் அவர் தொடர்ந்து தேடுகின்றார். அவருடைய தேடலின் விளைவே இந்த நூல்.

மனிதனுக்கு அனுபவிக்கக் கிடைத்த எத்தனையோ இன்பங்களில் வாசிப்பு இன்பம் மேலானது; எவ்வளவு வாசித்தாலும் தெவிட்டுவதில்லை; ஒன்றுக்குப் பின் ஒன்றாக பிரமிக்க வைக்கும் புத்தகங்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன எனக்கூறுகின்றார் ஈழத்து எழுத்தாளர் அ.முத்துலிங்கம்

பல்வேறு மனிதர்களுடைய வாழ்க்கையில் பல மாற்றங்களையும் ஏற்றங்களையும் ஏற்படுத்தியவை நூல்களே என்பதை அவர்கள் வரலாறுகள் நமக்குச் சொல்கின்றன. நாட்டவரின் வெற்றிக்கு காரணம் மொக்கியவல்லி எழுதிய "இளவரசன்" என்ற நூல். ஆபிரகாம் லிங்கனின் எண்ணங்களை உயர்த்தியது "வொஷிங்டன் வரலாறு" என்ற நூல். பிரெஞ்சுப்புரட்சிக்கு வித்திட்டது ரூசோவின் "சமுதாய ஒப்பந்தம்" என்ற நூல் ஆகும்.

ஒருமனிதனின் வாழ்வின் அர்த்தங்களையும், ஆழத்தையும் மேம்படுத்த உதவுவது வாசிப்பு என்ற தேடல் தான். ஆகவே வாழ்க்கையை ஆழப்படுத்த, வாசிக்கக் கற்றுக்கொள்வோம். வாசிப்பினால் வாழ்க்கை வசப்படும் - என்றார். (எ-8)

# கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, ஓக.29

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க வன்னிக் கிளையின் மாதாந்தக் கூட்டம் எந்திரி எஸ்.எஸ்.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஹாட்லிக் கல்லூரியின் உயர்தர மாணவர்களில் விசேட சித்திகளைப் பெற்றவர்களுக்கு பெறுமதி மிக்க சின்னங்கள் வழங்கிக் கௌரவித்தல், பாடசாலை விரிவாக்கத்துக்கான காணிக் கொள்வனவுக்கு ஏற்ற வகையில் நிதிப்பங்களிப்பு, கல்வி மேம்பாட்டுக்கும் விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (எ-402)

# பெரும்பான்மை இன சாரதிகள் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக.29

வடமாகாணத்தில் உள்ள மூன்று தொழில் திணைக்களங்களுக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மூன்று சாரதிகள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் அலுவலகம் போன்றவற்றுக்கே இந்தச் சாரதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அலுவலகங்களின் பாவனைக்கென வழங்கப்பட்ட வாகனங்கள் சாரதிகள் இன்மையால் அவற்றை சேவைக்கு அமர்த்த முடியாது சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் பெரும் சிரமப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்த மூன்று அலுவலகங்களுக்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சாரதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். (எ-17)



திருகோணமலை மறைமாவட்டப் பேராலய பங்கில் அண்மையில் இந்திய நிறுவனமான அக்கடமி ஒவ் யூனிவேசல் குளோபலின் துணைவேந்தர் பேராசிரியர் மருகு கிருஷான் சமய சமூக பணிகளுக்காக கலாபூஷணம் அ.வெ.அரியநாயகத்துக்கு கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவிப்பதையும் அருகில் திருமலை மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.பாலேந்திராவையும் காணலாம். (7)

# கடமையைப் பொறுப்பேற்றனர் ஆரம்ப தர வைத்தியர்கள்

யாழ்ப்பாணம், ஓக.29

கொழும்பு சுகாதார அமைச்சின் செயலாளரால் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்ட ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் 18 பேர் உரிய வைத்தியசாலைகளில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

டாக்டர் ரி.ஆர்.நிஷாந்தன், டாக்டர் ஆர்.ஜெகன், டாக்டர் செல்வி ஜி.காயத்திரி, டாக்டர் செல்வி பி.கயல்விழி, டாக்டர் ஆர். ஜெனிபர் கார்த்திகா, டாக்டர் திருமதி எல்.ஜனோஜினி, டாக்டர் செல்வி டபிள்யு.டி.சி.பெரேரா ஆகியோர் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறையிலும், டாக்டர் கே.கஜேந்திரன் ஆதார வைத்தியசாலை ஊர்காவற்றுறையிலும், டாக்டர் செல்வி ஏ.எஸ். சுரனுதா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் கோப்பாயிலும், டாக்டர் செல்வி எம். ஜெயந்தினி, டாக்டர் செல்வி எஸ்.சுகர்த்திகா, டாக்டர் செல்வி எஸ்.தட்சாயினி, டாக்டர் எஸ். பிரணவன், டாக்டர் கே.சமரநாயக்க ஆகியோர் ஆதார வைத்தியசாலை சாவகச்சேரியிலும், டாக்டர் பி.என்.ஆனந்தராஜா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஊர்காவற்றுறையிலும், டாக்டர் ரி.ரஜீவன், டாக்டர் செல்வி எம்.ஹன்சாந்தினி, டாக்டர் செல்வி கே.கருணாயோகினி ஆகியோர் ஆதார வைத்தியசாலை தெல்லிப்பழையிலும் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்கள். (எ-300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## தமிழர் மனங்களை வெல்லும் மந்திரம்தான் என்னவோ?

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத்தின் வன்னிக் கட்டளைத் தலைமையகத்திற்கு கடந்த வாரம் வருகை தந்திருந்தார். அங்கு உரையாற்றிய அவர், இராணுவத்தினரின் தற்போதைய அதிமுக்கிய கடமை பற்றி விளக்கினார்.

''தீவிரவாதம் மீண்டும் தலைதூக்காத வண்ணமும் வடக்கு மக்கள் மீண்டும் விடுதலைப் புலிகளை நோக்கிச் செல்லாத வண்ணமும் அவர்களின் இதயங்களையும் எண்ணங்களையும் வெல்வதற்கான செயற்பாடுகளை நாம் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே எம் முன்னுள்ள முக்கியமான கடமை'' என்று கோத்தபாய அந்த உரையில் தெரிவித்தார். அவர் மட்டுமல்ல அரசும் இதனையே திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறது. தமிழர்களின் மனங்களை வெல்வதே இன்றைய தேவை என்று உலக நாடுகளும் இலங்கை அரசுக்குச் சொல்லி வருகின்றன.

நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்திட்டம், மும்மொழிக் கொள்கைத் திட்டம், அபிவிருத்திப் பணிகள் என்று எல்லாமே தமிழர்களின் மனங்களை வெல்வதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியே.

இவற்றில் மும்மொழிக் கொள்கை கவனத்துக்குரியது. அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மொழிப் பிரச்சினையைத் தீர்த்து விட்டால் இனப் பிரச்சினையை இலகுவாக முடித்துவிடலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. ஒரேயொரு தமிழரையும் உள்ளடக்கிக் கொண்டு இந்தத் திட்டம் தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது.

வாகனங்களில் மும்மொழிகளிலும் அறிவித்தல் பலகைகள் இடப்படவேண்டும், அரச அலுவலகங்களில் சுற்றறிக்கைகள் கடிதங்கள் மும்மொழிகளிலும் அனுப்பப்படவேண்டும், பொது இடங்களிலும் அரச அலுவலகங்களிலும் மும்மொழிகளிலும் அறிவித்தல்கள் இடப்படவேண்டும் என பல்வேறு விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு அமைச்சு நிர்ப்பந்திக்கிறது.

இது ஒரு நல்ல திட்டம். பல பிரச்சினைகளுக்கும் மொழியே ஒரு காரணமாக இருக்கிறது. தமிழர்களின் பிரச்சினைகள் சிங்களவர்களுக்குப் புரியாமல் இருப்பதற்கும் மொழியே தடையாகவும் இருக்கின்றது. இவை ஏற்றுக்கொள்ளக்கூடியவையே! ஆனால், இந்த நல்லிணக்கம் பற்றிப் பேசுபவர்கள், அதற்காகச் செயற்படுபவர்கள், மனங்களை வெல்ல முயல்பவர்கள் எல்லோரும் ஒரு விடயத்தைக் கவனிக்காமலே விடப்பார்க்கிறார்கள். அது இலங்கையின் முப்படைகளும் சிங்களவர்களைக் கொண்டு மட்டுமே இருக்கின்றன என்பது.

தமிழர்களின் மனங்களை வெல்லவேண்டியதே இராணுவத்தினரின் தலையாய பணி என்று கிளிநொச்சியில் உரையாற்றுவதற்கு முன்பதாக, சாலியபுர என்ற சிங்களக் கிராமத்தில் கஜபாகு படையணியின் தலைமையிடத்தில் இராணுவத்தினருக்கான மருத்துவ மற்றும் வர்த்தகத் தொகுதி ஒன்றைக் கோத்தபாய ராஜபக்ஷ திறந்து வைத்தார். அது தொடர்பான நினைவுக் கல்லில் மருந்துக்குக்கூட தமிழ் அல்லது ஆங்கிலம் இல்லை.

அதாவது இங்கே இராணுவம் மற்றும் படைகள் அனைத்தும் சிங்களவர்களுக்கு மட்டுமே உரியது என்பதைத்தானே இது காட்டுகிறது. அதில் தமிழுக்கோ தமிழர்களுக்கோ இடமில்லை. இத்தகு நிலையில் தமிழர்களின் மனங்களை வெல்வதற்காக கோத்தபாய கூறும் அந்த மந்திரம்தான் என்னவோ?

# ஐயோ என்று அலற மட்டும்தானே தமிழ்

■ செந்தூரி

பெரியவர்களின் பொய்கள்' என்று தலைப்பிட்ட அந்தக் குறுங் கவிதை, அசையவிடாமல் விழிகளை பிடித்திழுத்தது சில நிமிடங்கள் வரை. 'இளையநிலா ஜோன் சுந்தரின்' யதார்த்தம் சொல்லும் வரிகள் எம் அயலிலுள்ள நிறையப் பெரியவர்க ளின் பெயர்களுடன் பொருந்துகையில் 'செம' துல்லியமாக இருந்தமையினால் நீங்களும் ஒரு முறை படித்தேயாக வேண்டும் தவறாமல்!

''ஆளாளுக்கு மூன்று விழிகள் வைத்துக் கொண்டனராம்
பூச்சாண்டியும் கடவுளும்
கொக்குப் போகும் பருத்திப்பூக்கள், நகங்களில் விழுந்தால்
உடைகளாய் மலர்வதைப் போலொரு சுவாரசியம், பெரியவர்களின் பொய்களில்
'சாமி கிட்ட இருக்கா உன் அம்மா'
என்பதை மட்டும் மறுக்கிறது குழந்தை
'அம்மாவுக்கு முன்னாடியே சாமி செத்துரிச்சா?
எனும் எதிர்க் கேள்வியுடன்!''

உன்னிப்பின் உச்சமாய் எம்மை நாமே திருத்தி எழுதிக்கொள்கின்றபோது, நடுத்தரம் கடந்துவிட்ட வயது, அனுபவம், ஆளுமை, அதிகாரம் போன்ற பெயரிலுள்ள யாவையுமே சுலபமாக எம்மை ஏய்த்துவிடும் வழக்கத்தை தொடர்வது கடிதினும் கடிது. ஆனால் சுதாகரிக்க மறக்கின்ற ஒவ்வொரு நிமிடத்துளிகளிலும், பின்னந்தலை தொடங்கி பிட்டமூடாக புறக்குதிக்கால் வரையிலும் ''மூட்டாள்கள் நீங்கள் '' என்று கண் தேடா இடங்களில் முத்திரை குத்துவது சில பெரியோர்களின் பீடுடைத்த இயல்புகளில் ஒன்று!

ஈழத்தின் இசைப் பாரம்பரியம் கொஞ்சம் 'தனிமைகளுடன்' கூடிய தவத்துவமானது. போரும், தொடர்பாடல் குறைவும் எம்மூரின் கலைஞர்களையும், கலைப் பண்புகளையும் தனித்துவமானதாகவும், விளம்பரக் குறைவுடன் கூடிய கேள்வி நிரம்பலுடையதாகவும் வைத்திருந்தது எனவும் ஊகிக்கலாம். ஆனால் அவர்கள் எல்லோருமே ''ஆலையில்லா ஊரின் சர்க்கரைக்கு-பிரதியிடும் இலுப்பைப் பூக்கள்'' அல்ல என்பதும் உறுதி.

சர்வதேச தரம், புதுமை விருப்பம், புத்தாக்க நுணுக்கம், கடும்பிரயோக பயிற்சி என்பன மூலம் மேடையாற்றுகைகளும் இணைக்கலைகளும் சற்றும் 'சோடை' போகாமல் சுற்று வேலிகளுக்குள் வீற்றிருந்தன என்பதை எடுத்த எடுப்பில் எவருமே வெட்டிப் பேசிவிட முடியாது. ஆனால் இன்றைய வடபுலத் தமிழர்களினால் உட்படும் ரசிகர்கள் என்கின்ற அவதானிகளை எம் பெரியோர்கள் அந்தக் கவிதைக் குழந்தையின் எத்தனத்தில் ஏமாற்றத் துணிந்தது எங்ஙனம் நியாயமாகும்?

இவ்வருடத்துத் தைப்பொங்கல் திருநாளின் அதிகாலை ஆறுமணி தொடக்கமான அரைமணிநேரத்துக்கு, இந்தியத் தொலைக்காட்சியும், உலகத்தமிழர்களின் 'ரிமோட்' விரல்களில் அதிகம் அடிபடும் அலைவரிசையுமான 'சன் ரீவி' யில் நாதஸ்வர இசை பொழியும் அற்புதமான வாய்ப்பை அநாயாசமாக பெற்ற ஈழத்து இளம் மேதை ஒருவனின் அறச்சீற்றத்தை ''அட!அதுக்கென்ன'' வென்று பூசிப் பொய் மெழுகியிருக்கின்றது எம் கலையுலகம்!

துள்ளிசைப் பண்ணும், உச்ச தாளக் கூட்டமும், சாந்தத்தை மீறிய ஆரவாரமும் கொண்ட கேரளத்துச் செண்டை மேளமும், போர்முனையில் பயன்படும் பேரிகைக் குழல்களும், 'போ' புறமென்று தள்ளி [illegible] வேடிக்கை பார்த்தான் நல்லை நாயகனும் தன் வீதிகளில்!

'நாம சகஜம் ' கொண்ட எமக்கேயான கடல்கடந்த பெருமைகளை தன் விரல்களிலும், குரல்வளையிலும் சிறுகச் சிறுகச் சேமித்து இசைஞானம் பெற்ற மண்ணின் 'பாலகனை' ஒதுங்கிநில் ஓரமாய் என்று சொல்ல எவ்வளவு துணிச்சல் எம் பண்பாட்டுப் பொரி வாய்களுக்கு?

'சிங்காரி மேளம்' என்கின்ற புறப் பெயரினால் சுட்டப்படுகின்ற அவ்வகை வாத்தியங்கள் தமிழிசைக் கேற்ற சாந்த இயல்புடையவை அல்ல என்பதும், திருமுறை போற்றுகின்ற சைவப் பாரம்பரியத்திற்கு நேரெதிர்ப் பண்புள்ள ஆரியப் பழமைக்குரியவை என்பதும் தெரியாதவர்களா எம் பெரியவர்கள்?

தென்னிந்தியாவில் தமிழக இந்துக் கோயில்களின் மூன்றாம் வெளி வீதிகளுக்கு கூட அனுமதிக்கப்படாதவர்களை ஆரத்தழுவி ஆராதித்ததில் என்னென்ன 'உள்குத்துகள்' என்பது ஆறுபடையப்பனின் பன்னிரு விழிகளின் மூடிய இமைகளுக்கும் சமர்ப்பணம். சுற்றுப்பிரகாரம் முழுவதும் சற்றுக் கவனித்தவர்கள் நிச்சயம் இனங்கண்டிருக்க முடியும், செண்டை மேள இசையினது ஆரோகணமும், கலைஞர்களினது அசைவும் உடல் மொழியும், கண்டியச் சிங்கள நடன மற்றும் இசைக்கலைஞர்களினது இசையையும் அசைவையும் இறுக ஒட்டியிருந்தமையை!

சென்னை விமான நிலையம் வரை வந்த மனோ - ''ஈழத் தமிழச் சகோதரர்களே! மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்றபடி திரும்பியிருக்கின்றார். ஹரிகரனின் இசைநிகழ்வுக்கான மெகா விளம்பரங்கள், தவிர்க்க முடியாத காரணமென திருத்தி எழுதி நிறுத்தப்பட்டது. தமிழ்த் திரையுலகுடன் தொடர்புடைய எவரையும் இலங்கை அரசாணைக்குள்ளான நிகழ்வுகளுக்கு இலகுவில் அனுமதித்து விடாமல், கண்ணுக்குள் எண்ணையூற்றிய தமிழக உறவுகளையும் மீறி, 'உன்னி' எப்படி ஓரமாய் பாய்ந்து திரும்பியது? 'நல்லூரின் ஆன்மிகப் பெருவிழா' என்கிற ஒற்றைச்சொல், எதிர்ப்புக் குரல்களை அடக்கியிருக்கும், அனுமதித்திருக்கும் என்பதே எம் எண்ணம்! உண்மையும் அதுதான்!

ஆனால் நல்லூரானின் பெயர் சொல்லி நடத்தப்பட்ட இசைநிகழ்ச்சியின் தனித்த ஏற்பாட்டாளர்கள் 'வடமாகாண சபையினர்' என்பதும், நல்லூர் திருவிழாவை காரணம் காட்டி அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தியக்கலை விழாவொன்றின் அங்கமே, இது எம்மில் பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லையே. ''DIVINE ECSTASY''என்ற தலைப்புடன் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த இந்த நிகழ்வுக்கான அழைப்பிதழ் முழுக்க முழுக்க ஆங்கிலத்திலேயே காணப்பட்டது.

திணைக்களத் தலைவர்கள் ஊடாக இதனை விநியோகிப்பதை கருத்தில் கொண்டு அச்சிடப்பட்டதே தவிர சாதாரண இசை ரசிகர்கள் குறித்து கவனத்தில் எடுக்கப்படவில்லை.

''நிச்சயம் வருவார்கள்'' என்ற துணிச்சலுடன் அலர் மேல் வள்ளியையும், உன்னி கிருஷ்ணனையும், ரி.எம். கிருஷ்ணாவையும் அழகுறு புகைப்பட அழைப்பிதழில் அச்சிட்டவர்கள் வாய்ப்பாட்டுக் கச்சேரி நடைபெறுவதாக குறிப்பிட்டிருந்த இடம் - நல்லூரின் 'சங்கிலியன் தோப்பு '

''புதிதாக ஏதாவது உருவாக்கி வைத்திருப்பார்களோ'' எனும் பிரமை பிடரியில் அறைய ஆர்வத்தோடு காத்திருந்தால், ஏற்பாடுகளின் போதே தெரிந்தது- ''கிட்டுப்பூங்கா'' என்று அழைப்பதில் அவர்களுக்கு தொடரும் 'தீட்டு'. அவ்விடத்தை 'சங்கிலியன் தோப்பு ' என்று சிலாகிக்க வைத்திருக்கின்றது . எவனாவது [illegible] கேள்வி கேட்டாலும் கூட, ''பாருங்கள் தமிழ் மன்னனான சங்கிலியனை மறுதலிக்கின்றார்கள்'' என்று மூகாரியில் முடித்து நாவடக்கம் செய்யும் முன்னேற்பாட்டுடன் எம் தமிழ்த் தேசிய மூக்கில் குத்தியிருந்தார்கள்.

துப்புரவாக்குதல் என்கின்ற பெயரில் 'இடித்துத் துடைத்தழிக்கப்பட்ட' கொவ்வைச் செவ்வாயும் குழந்தை மனமும் கொண்ட போராளியொருவனின் நினைவிடத்தையும், பூங்காவையும் நீளமறந்துவிட்டு நிலத்தில் அமர்ந்திருந்தோமா இல்லையா? கொஞ்சம் உண்மை சொல்லுங்கள் அன்பர்களே!

அன்றைக்கு உங்களை விழிமூடி வாய்திறக்க வைத்த ''குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா !'' என்கின்ற வரிகள் அட்சர சுத்தப் பொய் இல்லையா?

யாழ்ப்பாணத்தின் சுவாசமாய், பல்லின உயிர்ப்பரம்பலோடிருந்த பழைய பூங்காவினை, இயற்கைச் சிதைவினுக்குள்ளாக்கி மனித நடமாட்டம் மிகுந்த 'கொங்கிறீட் கல்லறையாக வர்ணம் பூசி வைத்த ஏமரா மன்னனும், எடுப்பார் பாவை அமைச்சர்களும் , ''உள்நோக்கம் எதுவுமே இல்லாத நல்லெண்ணத்துடனேயே, முத்திரைச் சந்தியில் இருந்த பூங்காவைத் துப்புரவுபடுத்தி கச்சேரி வைத்து எம் கலையார்வத்தை வளர்க்கப் பாடுபடுகின்றார்கள்'' என்பதை எத்துணை சுலபமாய் நம்பிவிட்டோம் நாம்.

பம்பாய் வெங்காயம் பாய்ந்திறங்கி உள்ளூர்க் காய்களை ஊசிப்போக வைத்தால், எதிர்க் கேள்வி கேட்கச் சம்மேளனம் இருக்கின்றது. ரம்புட்டானோ, மங்குஸ்தானோ வீதிகளில் நிறைந்து தேன் கதலியையும் ஊர் முந்திரிகையையும் விளைநிலத்திலேயே வெட்டிப்புதைக்க வைத்தால், மனுப்போட சங்கம் இருக்கின்றது. ஆனால் 'பாலக்காடுகளின் படையெடுப்பினால் இம்முறை மண்மூடிப் போன ஈழநல்லூரின் பண்டைத் தனித்துவத்தைப் பாதுகாக்க கலைக் குடும்பத்தின் எந்தச் சங்கமும் கதவைத் திறக்காத மர்மத்துக்குப் பதிலென்ன?

அளவுப் பிரமாணக் குறைவினால் ஐந்து மாதக் குதிரைக் குட்டியில் சங்கிலியனை ஏற்றி உட்கார வைத்து ''செத்தும் மிருகவதை செய்யும் மாண்புறு மன்னனாய்' எம்முன்னோனை பழி சுமக்க வைத்த ஆர்வக் கோளாறுகளே நயினையின் கோபுர வாயிலில் கற்பனைக்கு மீறிய தொந்தி சுமக்கும் காவற் பெண்களின் தோற்றத்தால் திராவிடரெல்லோரும் அரக்கர்கள் என்று பூடகம் பேசும் கற்சிலைகள் இன்னும் பல கோயில்களில் இடம்பிடிக்கத் தொடங்கியிருப்பது, கண்ணிருக்குமிடத்தில் இரு புண்களை நீவிர் சூடியதால் வந்த வினைப் பயனே!

''இறக்குமதிச் சரக்கு'' எதுவுமே இல்லாமல் ஈழத்து இளைஞர்களின் தனி முனைப்புடன் உருவாகிக் கொண்டிருக்கும் எண்கோண நீர்த் தடாகத்தை நோக்கி இன்னமும் பத்திரிகை வெளிச்சங்கள் பாயாதிருப்பது துர்ப்பயன்!

'யுனெஸ்கோ' வெளியிட்டுள்ள பண்பாடு, கலாசாரம், மரபுரிமை போன்றவற்றுக்கான வரைவிலக்கணங்களில் உள்ள 'தேசிய இனம் ஒன்றினது' என்கின்ற சொற்களை எடுத்தெறிந்து விடுங்கள் தயவுடன். அர்ச்சனைக்கு சமஸ்கிருதம், ஆடலுக்கு மராட்டியம், பாடலுக்கு கர்நாடகம், பின்னணிக்கு மலையாளம் , தொழிலுக்கு ஆங்கிலம், ஆட்சிக்கு சிங்களம், அவலத்தில் 'ஐயோ' வென்று அலற மட்டும் தானே ''தமிழ்'' எமக்கு?

மிக்க நன்றிகள் கவிஞர் இளையநிலா - ''அம்மாவுக்கு முன்னாடியே சாமி செத்துரிச்சா? '' என்று உற்றுக் கவனித்து கேள்வி கேட்காத ஈழத்தமிழனின் ஊமைக் குளத்தில் நீங்கள் தூக்கிப் போட்ட ஒற்றைக் கல்லுக்கு! அறுதுயில் கலையாயோ ஆண்ட என்னினமே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ക.வெங்கடேஸ்வரன்**

# உருகும் இரும்பு மனிதன்

ரஷ்யாவில் ஜோசப் ஸ்டாலினுக்கு அடுத்தபடியாக, அசைக்க முடியாத தலைவராக உருவெடுத்தவர் விளாடிமிர் புடின். 1999ஆம் ஆண்டில் முதல்முறையாக ரஷ்யப் பிரதமராகப் பதவியேற்றதிலிருந்து இப்போதுவரை சுமார் 13 ஆண்டுகளுக்கு மேலாகப் பிரதமர், ஜனாதிபதி எனப் பதவியை மாற்றி மாற்றி அதிகாரத்தைத் தொடர்ந்து தன் கையில் வைத்துள்ளார்.

ரஷ்ய உளவுத்துறையான கேஜிபியில் 16 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவமும், அப்போது கிடைத்த அரசியல் தொடர்புகளுமே புடினின் இப்போதைய அரசியல் பலம். கேஜிபியில் தன்னுடன் பணியாற்றிய மெத்வதேவ் உள்ளிட்டோரைத்தான் தனது நம்பிக்கைக்குரியவர்களாக அரசியலில் வைத்துள்ளார் புடின்.

எப்போதும் மக்களிடம் நேரடியாகத் தொடர்பில் இருக்க விரும்பும் புடின், தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்று, பொது மக்களின் கேள்விகளுக்கு மட்டுமன்றி தொலைபேசி மூலம் கேட்கப்படும் கேள்விகளுக்கும் எவ்விதத் தயக்கமுமின்றி நேரடியாக உடனுக்குடன் பதிலளித்து 'புதின் இஸம்' என்ற புதிய வழிமுறையை உருவாக்கினார்.

1991இல் அரசியலில் நுழைந்தது முதல் சுமார் 20 ஆண்டுகளாக ரஷ்யாவில் மக்கள் செல்வாக்குள்ள தலைவராக இருந்தார். சர்வதேச அளவில் பிரபலமான ரஷ்யத் தலைவராகவும் விளங்கினார். ஆனால், இந்த ஆண்டு தொடக்கத்தில் அவர் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது, மக்கள் மத்தியில் அவருக்கு எதிரான அதிருப்தி அப்பட்டமாக வெளிப்பட்டது. ஜனாதிபதி, பிரதமர் நாற்காலிகளில் புடினும், அவருக்கு நெருக்கமான திமித்ரி மெத்வதேவும் மாறி மாறி அமர்ந்து விளையாடியது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

நாட்டில் தலைவிரித்தாடும் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவற்றைப் போக்க புடின் எதுவுமே செய்யவில்லை என்பதே மக்களின் அதிருப்திக்கு முக்கிய காரணம்.

ரஷ்ய சட்டப்படி ஒருவர் இரு முறைக்கு மேல் தொடர்ந்து ஜனாதிபதியாக இருக்கக் கூடாது. 2000ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டுவரை அதிபராக இருந்த புடின், அடுத்த 4 ஆண்டுகளுக்குத் தனது நம்பிக்கைக்குரிய மெத்வதேவை ஜனாதிபதியாக்கினார்.

மெத்வதேவ் வகித்து வந்த பிரதமர் பதவியை, தான் பெற்றுக் கொண்டார். 2012இல் மீண்டும் புடின் அதிபராகிவிட்டு, மெத்வதேவைப் பிரதமராக்கினார். இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே புடின் மீதான மக்களின் அதிருப்தி அப்பட்டமாக வெளிப்படத் தொடங்கியது. கருத்துக் கணிப்புகளும் புடினுக்கு எதிராக அமைந்தன.

இதனால் ரஷ்ய அதிபர் தேர்தல் சர்வதேச அளவில் பெரிய எதிர்பார்ப்புக்குள்ளானது. ஆனால் யாரும் எதிர்பாராதவிதமாக 63 சதவீத வாக்குகளைப் பெற்று புடின் வென்றார். புடினும், மெத்வதேவும் இணைந்து முறைகேடு செய்து தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி பொதுமக்களும் புடினுக்கு எதிராகப் போராட்டக் களத்தில் குதித்தனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் தெருவில் இறங்கிப் போராடினாலும் சிறிதும் அசைந்து கொடுக்காத புடின், 4 ஆண்டு இடைவெளிக்குப்பின் மீண்டும் கிரெம்ளின் மாளிகைவாசியானார்.

அதேநேரத்தில் தலைநகர் மொஸ்கோவில் போராட்டத்தில் ஈடுபட்ட 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை பொலிஸார் விரட்டியடித்தனர். அடுத்த சில நாள்கள் எதிர்க்கட்சியினர் கைது, போராட்டத்தில் தடியடி என அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டு தன்னை நிலைநிறுத்திக் கொண்டார் புடின். எனினும் 2000ஆம் ஆண்டில் முதல்முறையாக ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டபோது ரஷ்யாவின் நம்பிக்கை நாயகனாக அறியப்பட்ட புடின், இப்போது செல்வாக்குச் சரிந்த தலைவராகிவிட்டார்.

அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொண்டாலும், மக்கள் மனதில் உள்ள அதிருப்தியை நீக்கும் சந்தர்ப்பம் புடினுக்கு விரைவில் கிடைக்கப்போவதில்லை. அது அவரது துரதிர்ஷ்டம்.

அதேநேரத்தில் இப்போது புரட்சிகர இசைக்குழு ஒன்றாலும் மீண்டும் பிரச்னையில் சிக்கியுள்ளார் புடின். மொஸ்கோவில் உள்ள தேவாலயத்தில் 'புஸ்ஸி ரயட்' என்ற இசைக்குழுவைச் சேர்ந்த இளம் பெண்கள் மூவர், அதிபர் புடினுக்கு எதிரான கருத்துகள் அடங்கிய பாடலைப் பாடினர்.

இதற்காக அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. 5 மாத வழக்கு விசாரணைக்குப்பின் சில நாள்களுக்கு முன்பு வழங்கப்பட்ட தீர்ப்புதான் பூதாகரமான பிரச்சினையைக் கிளப்பியுள்ளது.


இளம் பெண்கள் மூவருக்கும் தலா 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது ரஷ்ய நீதிமன்றம். தேவாலயத்தில் வன்முறையைத் தூண்டும் வகையிலான பாடலைப் பாடினார்கள் என்பதற்காகவே இந்தத் தண்டனை என்று நீதிமன்றத்தால் விளக்கமளிக்கப்பட்டது. எனினும் புடினுக்கு எதிராகப் பாடினார்கள் என்பதற்காகவே அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

புடின் மேற்கொண்ட பழிவாங்கும் நடவடிக்கை இது என்று ரஷ்ய எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின. இத்தீர்ப்பு குறித்து கவலை தெரிவித்த பிரிட்டன் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும், தண்டனையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமெனக் கோரின. எனினும் தண்டனை உறுதி செய்யப்பட்டு, இளம்பெண்கள் மூவரும் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு, ரஷ்யாவில் மட்டுமே புடினுக்கு எதிரான போராட்டம் நடைபெற்றது. இப்போது இசைக் குழுவுக்கு ஆதரவாக, பல்வேறு இசைக்குழுவினர், சமூக அமைப்பினர் எனப் பல்வேறு நாடுகளில் புடினுக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. வெளி நாடுகளிலேயே இவ்வளவு எதிர்ப்பு என்றால் ரஷ்ய எதிர்க் கட்சிகள் சும்மா இருக்குமா? தீர்ப்பு வெளியான உடன் நீதிமன்றத்துக்கு வெளியிலேயே போராட்டம் தொடங்கியது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவரும், செஸ் சாம்பியனுமான கேரி காஸ்பரோவ் உள்ளிட்ட ஏராளமான எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்தத் தொடர் போராட்டங்களால் அல்லோல கல்லோலமாகிவிட்டது ரஷ்யா.

ரஷ்யாவின் இரும்பு மனிதராகத் தன்னைத்தானே வடிவமைத்துக் கொண்ட புடின், இப்போது மக்களின் எதிர்ப்பு என்ற வெப்பத்தில் உருகத் தொடங்கியுள்ளார்.













பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சாலியபுர கஜபா படையணி தலைமையகத்துக்கு கடந்த 23ஆம் திகதி வருகை தந்த போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கீழ் மூலையில் இருப்பது தர்மபுரம் மகா வித்தியாலயத்தின் இன்றைய தோற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதியில்லாத கௌரவம்

பௌத்த மத நூல்களில் ஒன்று அபிதர்ம பீடகம். அதில் காணப்படும் புத்தரின் முற்பிறவி பற்றிய கதைகளில் ஒன்று இது. ஒரு சமயம் காசி மாநகரத்தை பிரம்மதத்தன் என்ற அரசர் ஆட்சி செய்து வந்தார். அவர் ஒவ்வொரு வருடமும் ஒரு திருவிழா நடத்துவது வழக்கம். இந்த விழாவுக்கு எல்லா தேசங்களிலிருந்தும் எல்லா வகையான மக்களும் வந்து கலந்துகொள்வார்கள்.

ஒரு சமயம் அது போன்ற விழா காசியில் நடைபெற்றது. அப்போது அதில் கலந்து கொள்ளும் பொருட்டு, வைகுண்டத்திலிருந்தும், தேவலோகத்திலிருந்தும் நிறைய தேவகுமாரர்கள் காசிக்கு வந்தார்கள். அவர்களில் முக்கியமாக நான்கு தேவகுமாரர்கள் இருந்தனர்.

அந்த நான்கு பேரையும் சுற்றி ஏகக் கூட்டம் குழுமியிருந்தது. அப்படி அவர்களிடம் விசேஷமாக என்னதான் இருந்தது? மற்றவர்களை விட அவர்களின் முகம் அழகாக இருந்ததா? அப்படி இல்லை. அவர்கள் அணிந்திருந்த அபூர்வமான மலர்மாலைகள் காரணமாகத்தான் அவர்களைச் சுற்றி அப்படியொரு கூட்டம் கூடியிருந்தது. அந்த மாலையில் இருந்த மலர்களிருந்து ஓர் அபூர்வமான நறுமணம் கமழ்ந்தது. அதற்கு முன்னால் இது போன்ற ஒரு அரிய நறுமணத்தை காசியில் இருந்தவர்கள் அனுபவித்ததே இல்லை. குழுமியிருந்த மக்கள் அந்த நான்கு தேவகுமாரர்களை நோக்கி கேள்விமேல் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள். எனவே அந்த தேவகுமாரர்களும் எல்லோரது கண்களுக்கும் தெரியும் வகையில் வானத்தில் எழும்பி கொஞ்சம் உயரமாக நின்று கொண்டார்கள். கீழே நின்று கொண்டிருந்த அரசன் முதல் ஆண்டி வரை உள்ள ஒருவர் பாக்கியில்லாமல் ஒரே குரலில் அவர்களைப் பார்த்து, ''நாங்களும் இது போன்று நறுமணம் மிக்க மாலையை அணிந்து கொள்ள விரும்புகிறோம் .... அதற்கு நீங்கள் தான் அருள் புரிய வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்கள்.

அந்த நான்கு தேவகுமாரர்களில் ஒருவர் புத்த பிரான். அவர்கூடியிருந்த மக்களைப் பார்த்து, 'பூலோகவாசிகளே! நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகவும் கவனமாகவும் கேளுங்கள்! இந்த மாலை 'கக்காரு' எனப்படும் கற்பகமரத்தின் மலர்களினால் தொடுக்கப்பட்டது ஆகும். இதற்கு அபூர்வ சக்திகள் பல உண்டு. எப்போதும் எந்தக்காலத்திலும் இந்த மலர்கள் வாடவே வாடாது! இதன் வாசனையும் குறையாது. ஆனால் இதை அணிந்து கொள்பவர்களுக்கு சில தகுதிகள் இருக்க வேண்டும்!'' என்று தெரிவித்தார்.

உடனே மக்கள் எல்லோரும், ''என்ன தகுதி அது? சொல்லுங்கள்!'' என்று கூவினார்கள். அதற்கு அவர், தீய இயல்பு கொண்டவர்கள்- இழிந்த செயல்கள் உடையவர்கள் இந்த மாலையை அணிய முடியாது!'' என்றார். அவ்வளவு தான். இப்படி அவர் சொன்னாரோ இல்லையோ, கூட்டத்தில் அது வரையில் சத்தம் போட்டுக் கொண்டிருந்த எல்லோரும் அடங்கி விட்டார்கள். அப்போது மேலும் தொடர்ந்து புத்தபிரானாகிய அந்த தேவகுமாரன் பின்வருமாறு கூறினார்:

''மற்றவர்கள் பொருளை அபகரிக்காதவன்- மற்றவர்களுக்குத் தீமை விளைவிக்கக் கூடிய பொய் பேசாதவன் - பேராசை காரணமாக கெட்ட வழியில் பணம் சேர்க்க நினைக்காதவன் எவனோஅவன் இந்த மாலையைப் போட்டுக் கொள்ளலாம்!''- இப்படி அவர் சொன்னதும் கூட்டத்தில் இருந்த யாருமே மாலை அணிந்து கொள்ள முன்வரவில்லை.

அத்தகைய ஒரு சூழ்நிலையில் மக்கள் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு ஒருவர் முன்வந்தார். அவர் அந்நாட்டின் ராஜகுரு, படித்தவரும் கூட. அவர், ''எனக்கு அந்த மாலையை அணிவதற்கு தகுதி இருக்கிறது ...!'' என்று கூறினார். அப்படி அவர் சொன்னதற்கு 'பொய் சொல்லியாவது அந்த மாலையை வாங்கிக் கொள்ளலாம்' என்று அவர் நினைத்தது தான் காரணம். இந்த முடிவோடு அவர் மாலையை வாங்கிக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து இன்னொரு தேவகுமாரன் சொன்னார்:

'யாருக்கு உறுதியான அறிவும் மனமும் இருக்கிறதோ, யாருக்கு நல்ல காரியங்களில் அசையாத ஈடுபாடு இருக்கிறதோ, நல்ல... அரிய ... பொருள்களைத் தனியாக தான் மட்டும் அனுபவிக்க விரும்பாதவர் யாரோ - அவர் முன்னால் வந்து இந்த மாலையைப் பெற்றுக்கொள்ளலாம்!'' என்றார். உடனே ராஜகுரு, ''அந்தத் தகுதியும் எனக்கு இருக்கிறது!'' என்று சொல்லி விட்டு அந்த மாலையையும் வாங்கி அணிந்து கொண்டார். இப்போது மூன்றாவது தேவகுமாரன் பேசினார்: ''அறநெறியில் செல்வம் சேர்க்க வேண்டும்- ஆடம்பரப் பொருள்களுக்கு அடிமையாகக் கூடாது - வெற்றி பெற்றாலும் கர்வம் கொள்ளாமல் இருக்க வேண்டும் - இப்படிப்பட்டவர்கள் இந்த மாலையை வாங்கிக் கொள்ளலாம்'' என்றார். இப்போதும் ராஜகுரு துணிந்து பொய் சொல்லி அந்த மாலையையும் வாங்கி கழுத்தில் போட்டுக் கொண்டார்.

நான்காவது தேவகுமாரன் பின்வருமாறு தெரிவித்தார்:

''சான்றோர்களை நிந்திக்காதவர்கள் - புறம் பேசாதவர்கள் யாரோ அவர் இந்த மாலையை என்னிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம்!'' என்றார். ராஜகுரு இப்போதும் அந்தத் தகுதிகள் தனக்கு உண்டு என்று சொல்லி அந்த மாலையையும் வாங்கி அணிந்து கொண்டார்.

திருவிழா முடிந்து எல்லோரும் அவரவர்களுக்குரிய இடங்களுக்குத் திரும்பிச் சென்றார்கள். மறுநாள் ராஜகுரு நான்கு மாலைகளையும் போட்டுக் கொண்டு ராஜ்யசபைக்கு வந்தார். வந்தவர் மிகவும் துன்பப்பட்டுக்கொண்டே வந்தார். நான்கு மாலைகளும் வாடிப் போயிருந்தன. அவற்றில் வாசனை எதுவுமே இல்லை. அது மட்டுமல்ல, அவருக்கு கடுமையான தலைவலி; துடித்துப் போய்விட்டார். அவரால் மாலையைக் கழற்றவும் முடியவில்லை.

அவரைப் பார்த்து மக்கள் எல்லோரும் சிரிக்க ஆரம்பித்தார்கள். ''எதற்காக நீங்கள் இந்த மாலைகளுக்கு ஆசைப்பட வேண்டும்? பிறகு ஏன் இப்படிக் கஷ்டப்படவேண்டும் ?'' என்று கேலியாகக் கேட்டார்கள். அரசர் ராஜகுருவின் நிலையைப் புரிந்து கொண்டார். ஆதலால் அவர் மறுபடியும் விழாவிற்கு ஏற்பாடு செய்தார். விழாவில் கலந்து கொள்ள முன்பு வந்த தேவகுமாரர்கள் நால்வரும் வந்தார்கள். ராஜகுருவும் வந்தார். அவர் மக்கள் முன்னிலையில் தேவகுமாரனின் கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்டார்.

''இந்த மாலையைப் போட்டுக் கொள்ள எனக்கு எந்தத் தகுதியும் இல்லை. அந்நிலையில், தகாத தகுதியை பொய் மூலம் பெறவேண்டும் என்று ஆசைப்படுகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் எனக்குக் கிடைத்த தண்டனையும் துன்பமும் ஒரு பாடமாக வும் ஒரு எச்சரிக்கையாகவும் இருக்கட்டும்!'' என்று கூறினார். அதன் பிறகு தேவகுமாரர்கள் ராஜகுருவின் கழுத்திலிருந்து மாலைகளைக் கழற்றச் சொன்னார்கள். உடனே அந்த மாலைகளும் பழையபடி புத்தம் புதிய மலர்களாக மாறி முன்பு போலவே நறுமணம் கமழ ஆரம்பித்தன. மேலே தழுவி சொல்லப்பட்ட கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டிய உண்மை என்ன தெரியுமா? நமக்குத் தகுதியில்லாத ஒரு கௌரவம் நம்மைத் தேடி தானாகவே வந்தாலும் கூட, அதைத் தவிர்த்து விடுவதுதான் புத்திசாலித்தனமாகும். விவேகமும் கூட.



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பாலர் கல்வி நிலையத்தை ஆரம்பித்து செயற்படுத்தும் தென்புலோலி பெரிய தேவனத்தாய் சன.சமூக நிலையம்



*(கடந்தவாரத் தொடர்ச்சி...)*

தென்புலோலி உபய கதிர்காமம் பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையம் வாசகர்களுக்கு பத்திரிகைகளை வழங்குவதுடன் நின்று விடாது நூலக சேவையினையும் ஆரம்பித்து வாசகர்களுக்கு சிறந்த இலக்கியப் படைப்புகளைக் கொண்ட நூல்களையும் வழங்கியது. இது தவிர காலத்துக்குக் காலம் மக்களுக்கு சுகாதாரக் கல்வியை அளிக்கும் பொருட்டு சுகாதாரத்திணைக்களத்தின் அனுசரணையுடன் சுகாதாரப் படக்காட்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டன. சனசமூக நிலையத்தின் அமைப்பாளர் அமரர் பொன்.சின்னத்துரை தலைமையில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பெரிய தேவனத்தாய்ப் பிள்ளையார் கோயிலில் கூட்டுப் பிரார்த்தனையும் நடத்தப்பட்டது. நவராத்திரி காலங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் புலோலி இளைஞர்கள் விளையாட்டுக் கழகத்தின் பிரபல அமைப்பாகவும் இந்தச் சனசமூக நிலையம் விளங்கியது. ஆண்டுதோறும் தைப் பொங்கல் தினத்தன்று மாலைப் பொழுதில் சனசமூக நிலையத்தின் சார்பாக அறிஞர் விழா நடத்தப்பட்டு வருகின்றது. இந்தச் சனசமூக நிலையத்தின் முன்னோடியான அமரர் ஆசிரியர் பொன்.சின்னத்துரை, தென்புலோலி தந்த தமிழ்ப்பேரறிஞர் கந்தமுருகேசனார், புராணபடன மணி என்று பெயர் பெற்ற அறிஞர் க.முருகேசம்பிள்ளை ஆகிய மூவரையும் நினைவு கூருமுகமாக அறிஞர்விழா நடத்தப்படுகின்றது. இந்த விழாவின் ஓர் அம்சமாக பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, விளையாட்டுப் போட்டி என்பன நடத்தப்பட்டு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

கிரிக்கெட் போட்டி, கரப்பந்தாட்டப்போட்டி, சதுரங்கப் போட்டி ஆகியவற்றில் பங்கு பற்றிய வாண்மை இந்தச் சனசமூக நிலையத்தாருக்குண்டு. இங்குள்ள கல்லூரி ஒன்றில் கிரிக்கெட் குழுவில் இடம்பெறும். அறுவர் இந்த நிலையத்தின் உறுப்பினராகவே உள்ளனர். இந்தச் சனசமூக நிலையம் ஆண்டு முழுவதும் இளைஞர்களை வீணே அலைய விடாது ஏதாவது ஒரு விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபடுத்தி வருகின்ற மாண்பினைக் கொண்டுள்ளது.

பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையத்தில் நூல்நிலையம் அமைக்கப்பட்டு, அதற்கான புத்தகங்கள் சேகரிக்கப்பட்டு, புதிய புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு இல்லத்தலைவிகளுக்கும், பாடசாலை விட்டு நீங்கிய யுவதிகளுக்கும் பயன்படும் வகையில் நூல்கள் இரவல் கொடுக்கப்பட்டு ஓய்வு நேரத்தைப் பயன்பெறச் செய்கின்ற நிலையமுமாக இது விளங்குகிறது.

பெரிய தேவனத்தாய் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பலர் வெளிநாடுகளில் இருந்தாலும், சனசமூக நிலைய நிர்வாகத்தில் சிறிது தொய்வு ஏற்பட்டாலும் பற்றுணர்வுடன் நிதி உதவிகளையும் மற்றும் பொருள்களையும் விரும்பி அளித்துவிடுகின்றனர். இடைக்காலங்களில் ஏற்பட்ட கால பரிணாம வளர்ச்சிக் குறைவினால் அவணப்படுத்த முடியாத நிலையும் தோவைகள் விடுவிக்கப்பட்டுப்போனதாலும் இந்தக் கடமையை முற்றுமுழுதாகச் செய்து முடிக்க முடியாத தடங்கலை ஏற்படுத்தியுள்ளது.

## கர்ணன்

ஆரம்ப காலத்தில் இந்தக் கிராம இளைஞர்கள் முழுவதுமாக உடல் உழைப்பை நல்கி காடாய்க் கிடந்த நிலத்தைத் துப்புரவு செய்வதில் அமரர் பொன்.சின்னத்துரையுடன் ஒத்துணர்வு நல்கிய போது, இரண்டாயிரத்துக்கு சிறிது மேற்பட்ட தொகையைச் செலவுகள் ஏற்பட்ட போது அதன் பெரும் பகுதியை வழங்கிய அமரர்கள் அ.வேல்முருகு, மு.கணபதிப்பிள்ளை, ஆலய முகாமையாளராக இருந்த அமரர் சாஸ்திரியார் வீ.கணபதிப்பிள்ளை ஆகியோருக்கு பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையம் நன்றி உடையதாக இருந்து வருகின்றது.

புலோலியூர் இளைஞர்கள் ஒன்று திரண்டு வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திருவிழாக் காலத்தில் இந்தச் சனசமூக நிலையத்துக்கு அண்மித்ததாக உள்ள ஆனைவிழுந்தான் சந்தியில் தாகசாந்தி நிலையம் அமைத்து பக்தர்களுக்கு தாக சாந்தி வழங்கி வருகின்றார்கள்.

புலோலியூர் இளைஞர்கள் ஒன்று திரண்டு வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திருவிழாக் காலத்தில் இந்தச் சனசமூக நிலையத்துக்கு அண்மித்ததாக உள்ள ஆனை விழுந்தான் சந்தியில் தாகசாந்தி நிலையம் அமைத்து பக்தர்களுக்கு தாக சாந்தி வழங்கி வருகின்றார்கள்.

தண்ணீர்ப்பந்தல் என அழைக்கப்படும் இந்த தாக சாந்திநிலையம் அமைக்கப்பட்டு இந்த ஆண்டுடன் 49 ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன. அடுத்த ஆண்டு புலோலி இளைஞர்களின் தண்ணீர்ப் பந்தல் 50 ஆண்டுநிறைவான பொன்விழாவைக் கொண்டாடவுள்ளது.

இதே போல இந்தக் கிராமத்துடன் ஒட்டியுள்ள மூச்சம்புலம் சிவன் கோயில் பொன்னையா சாமியார் மடத் தில் வல்லிபுர ஆழ்வார் ஆலய திருவிழாக் காலத்தில் தினமும் அன்ன தானம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்வுகளை பெரியோர்களும், இளைஞர்களும் ஒன்றிணைந்து நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையத்தினர் சிறுவர்களுக்கான பாலர் கல்வி நிலையம் ஒன்றைக் 1998 ஆம் ஆண்டு ஆரம்பித்து நடத்தி வருகின் றனர். இந்தப் பகுதியைச் சேர்ந்த சிறார்கள் இங்கு பாலர் கல்வியைத் தொடர்ந்து வருகின்றார்கள்.

கடந்த காலங்களில் இந்தக் கிராம இளைஞர்களின் ஒத்துழைப்புடன் வீதி திருத்துதல், கால்வாய்கள் புனரமைத்தல், குளம் ஆழமாக்குதல் துப்புரவு செய்தல், கோயில்களின் திருவிழாக் காலங்களில் தாகசாந்தி நிலையங்கள் அமைத்து சேவை செய்தல் போன்ற சிரமதானப் பணிகளில் சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்கள் பெரும் பங்களிப்புச் செய்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் மீண்டும் பிள்ளையான் உறுப்பினராகக்கூட வரமுடியாது

## திருமலையில் செல்வராசா எம்.பி. திட்டவட்டம்

திருகோணமலை,ஓக.29

மீண்டும் தான் முதலமைச்சராக வருவேன் என்று பிள்ளையான் கனவு காண்கின்றார். ஆனால் முதலமைச்சராக ஆவதைவிட ஓர் உறுப்பினராகக்கூட அவரால் வர முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கம், கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நகரசபை மண்டபத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றை நடத்தியது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலை மாவட்டம் ஒரு சிக்கல் நிறைந்த மாவட்டம். தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்த இந்த மாவட்டத்தில் 1948ஆம் ஆண்டுக்குப் பின்னர் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இன்று இன விகிதாசாரத்தில் மூன்று இனமும் சமமாகக் காணப்படும் மாவட்டமாக திருகோணமலை மாவட்டம் காணப்படுகிறது. அன்று தொடக்கம் இன்று வரை திட்டமிட்ட குடியேற்றங்கள் கிழக்கில் நடைபெறுகின்றன.

13ஆவது அரசியலமைப்பு அதிகாரத்தின்படி பொலிஸ், காணி அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு, கிழக்கு இணைந்த தாயகம் அதிகாரம் பெறக்கூடிய வாய்ப்பை கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றுவதன் மூலம் ஏற்படுத்தலாம். அரசு அபிவிருத்தி பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கின்றது.

திருகோணமலை - மட்டக்களப்புக்கிடையே ஐந்து பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. தமிழரசுக் கட்சித் தலைவர் சம்பந்தனால் இவ்வாறான அபிவிருத்திகளை செய்யமுடியுமா என அண்மையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் மாநாட்டில் பஸில் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியிருந்தார். உண்மையில் இந்தப் பாலங்கள் பிரான்ஸ் அரசின் நிதியில் கட்டப்பட்டவை. அவர்களது பணத்தில் செய்த அபிவிருத்தியை பட்டியலிட முடியுமா? என்று பார்த்தால் எந்த அபிவிருத்தியையும் கூற முடியாது.

> தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்த இந்த மாவட்டத்தில் 1948ஆம் ஆண்டுக்குப் பின்னர் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப் பட்டன.



சிறைச்சாலையில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் துன்பங்களை அனுபவித்துவருகின்றனர். இளைஞர்கள் சிறையில் அடித்துக் கொலைசெய்யப்படுகின்றனர். இவ்வாறான செயல்களை மேற்கொள்ளும் அரசுக்கு எப்படி தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள். இன்னும் ஒரு வருடத்துக்குப் பிள்ளையான் முதலமைச்சராக இருக்கமுடியும். கூட்டமைப்பும் பிள்ளையான் முதலமைச்சராக இருப்பதை விரும்பியது. ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்பவில்லை- என்றார். (ச-40)

## குடிதண்ணீரைப் பெற மக்கள் முண்டியடிப்பு



திருகோணமலை,ஓக.29

திருகோணமலை, உவர்மலைப் பிரதேசத்தில் குடி தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

கடந்த இரண்டு வாரங்களாக நீர்வழங்கல் வடிகால மைப்புச் சபையினால் விநியோகிக்கப்படும் குழாய்நீர் மிகக் குறைந்த நேரத்துக்கே வழங்கப்படுகின்றது.

மிகக் குறைந்த அழுத்தத்துடன் குழாய்களில் நீர் வருவதால் நீர்த்தாங்கிகளில் நீரைச் சேமித்து வைத்து பயன்படுத்த முடியாத நிலைமை உள்ளது என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனினும், சில அரசசார்பற்ற நிறுவனங்கள் பவுசர்கள் மூலம் குடிதண்ணீரைப் பிரதேச மக்களுக்கு வழங்குவதால் ஓரளவுக்கு குடிதண்ணீர்த் தேவையை நிறைவேற்றக் கூடியதாகவுள்ளது என்று மக்கள் கூறுகின்றனர். (ச)

## காத்தான்குடியில் வீதிஅபிவிருத்தி

மட்டக்களப்பு,ஓக.29

தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடிப் பிரதேசத்தில் பல்வேறு வீதி அபிவிருத்திப் பணிகளை பிரதி அமைச்சர் எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்துவைத்தார்.

200 லட்சம் ரூபா செலவில் அல்-ஹுதா வீதி, ஹனீபா வீதி, மெத்தைப்பள்ளி வீதி, கமர்தீன் வீதி, ஹக்குப்பள்ளை வீதி, பாம் வீதி உள்ளிட்ட வீதிகளுக்கான அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன என்று பிரதி அமைச்சரின் ஊடக இணைப்பாளர் முகம்மட் சஜி தெரிவித்தார். (ச)



கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலகம் மற்றும் வலயக்கல்வி அலுவலகம் ஆகியவற்றில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. அன்றையதினம் தபால் மூல வாக்காளர்கள் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் முன்னிலையில் வாக்களிப்பில் ஈடுபட்டபோது...

# மலையகம் அரசியல் உரிமையைப் பெற ஜனநாயகப் போராட்டமே ஒரே வழி

## தொழிலாளர் விடுதலை முன்னணி தெரிவிப்பு

நுவரெலியா,ஓக.29

ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலமே மலையக தமிழ் சமூகத்தின் அரசியல் உரிமைகளை முழுமையாகப் பெறுவதற்கு வழிபிறக்கும் என்று தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர் டி.அய்யாத்துரை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தொழிலாளர்களின் சம்பளம், வாழ்க்கைக்குத் தேவையான சம்பளமாக உயரும் போது மலையகத் தமிழ் மக்களின் பொருளாதார வளமும், வாழ்க்கை வசதிகளும் உயரும். மலையகத் தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றம் தொழிலாளர்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். தொழிலாளர்களின் உழைப்பும், வருமானமுமே மலையக மக்களின் மூலதனமாக அமைகின்றன என்ற காரணிகளைக் கருத்திற்கொண்டு செயற்படுவதும், அவற்றை வென்றெடுப்பதும் மலையக, அரசியல் தொழிற்சங்க சிவில் அமைப்புகளின் கடமையாகும்.

மலையகத் தமிழ் மக்களும், தொழிலாளர்களும் செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்திலும், ஏனைய மாவட்டங்களிலும், தமிழ் மொழியில் கடமையாற்றக் கூடிய அரச அதிகாரிகள் இல்லை. நுவரெலியா மாவட்டம் ஐந்து உள்ளூராட்சி சபைகளைக் கொண்டதாகும். தமிழ்மொழி பேசும் அரச, உப அரச அதிகாரிகள் இல்லை. மலையகத் தமிழ்மக்கள் செறிவுக்கேற்ப உள்ளூராட்சி சபைகள் அதிகரிக்கப்படவில்லை.

அதேபோன்று கிராம சேவகர் பிரிவுகளும் அதிகரிக்கவில்லை. இதைச் செய்வது அரசின் கடமை. இவற்றைக் கேட்பதும், குரல் கொடுப்பதும், போராடுவதும் மலையக அரசியல், தொழிற்சங்கம், சிவில் அமைப்புகள் ஆகியவற்றின் ஒன்றுபட்ட கோரிக்கையாக முன்னெடுக்கப்பட வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவையாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# 214 நிலையங்களில் தபால் மூல வாக்களிப்பு

## அம்பாறை உதவித் தேர்தல் ஆணையர் தெரிவிப்பு

அம்பாறை,ஓக.29

அம்பாறை மாவட்டத்தில் 4 தேர்தல் தொகுதிகளிலும், நிறுவப்பட்டுள்ள 214 தபால் மூல வாக்களிப்பு நிலையங்களிலும் சுமுகமாகத் தபால் வாக்களிப்பு நடைபெற்றுள்ளதாக மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.அச்சுதன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தபால் வாக்களிப்பின்போது, தபால் வாக்காளர்கள் பல துன்புறுத்தல்களுக்கு உள்ளானமையைக் கருத்தில் கொண்டு தபால் வாக்களிப்பைக் கண்காணிக்க நிறுவனத் தலைவர்களுக்கு மேலதிகமாக, 38 உதவித் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளும், 120 உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். தபால் வாக்களிப்பு நிலையங்கள் நான்கை இணைத்து ஒரு தெரிவத்தாட்சி அதிகாரியும், ஏனைய உத்தியோகத்தர்களும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் பணியாற்றவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அம்பாறைத் தொகுதியில் 7893 பேரும், சம்மாந்துறையில் 1257 பேரும், கல்முனையில் 1053 பேரும், பொத்துவிலில் 2709 பேருமாக 12,912 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பு நடைபெறும் 214 மத்திய நிலையங்களிலும் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# கிழக்குத் தேர்தல் மூலம் அரசை வீட்டுக்கு அனுப்பலாம்

## காத்தான்குடியில் ரவி கருணாநாயக்க எம்.பி.

மட்டக்களப்பு,ஓக.29

கிழக்குத் தேர்தல் அரசை வீட்டுக்கு அனுப்பும் தேர்தலாக அமைய வேண்டும். இன்று அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக்கட்சி அனைத்து இன மக்களையும் அரவணைக்கும் கட்சியாகும். இங்கு இன, மத, மொழி, சமய வேறுபாடு என்பதில்லை. அனைவருக்கும் இந்தக் கட்சியில் இடமுண்டு.



ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியடையச் செய்வதன் மூலம் இந்த நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ முடிவதுடன், பொருள்களின் விலையேற்றத்திலிருந்தும் விடுபடமுடியும்.

நாளுக்கு நாள் பொருள்களின் விலையேற்றம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இவற்றுக்கெல்லாம் முடிவு கட்டுவதானால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அனைவரும் வாக்களிக்க வேண்டும்.- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிலும் சகிப்புத் தன்மையுடனும், பொறுமையுடனும் செயற்படுவீர்கள். மாமன், மைத்துனர்களை நம்பி பொறுப்பான பணிகளை ஒப்படைக்க வேண்டாம். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். சில வேலைகளை தாமதமாக ஆரம்பித்தாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள்.

**இடபம்:** அலைச்சல் குறைத்து கொள்வீர்கள். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களுக்கு முன்னுரிமை கொடுப்பீர்கள். நண்பர் ஒருவர், கடந்த காலத்தில் செய்த உதவியை நினைத்துப் பார்ப்பீர்கள். உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறலாம்.

**மிதுனம்:** விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்துசேரும். குடும்பப் பெரியவர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வீர்கள். மறக்க முடியாத சம்பவம் ஒன்று நடக்கும். சிலரின் விமர்சனங்களையும், அறிவுரையாக ஏற்று உங்களை மாற்றிக்கொள்ள முற்படுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத விதமாக பழைய நண்பர் ஒருவரைச் சந்திப்பீர்கள். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். உறவினர் ஒருவரின் இரகசியங்களைப் பற்றி அறிந்து கொள்வீர்கள். குடும்ப பிரச்சினைகளில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும்.

**சிங்கம்:** முக்கியமான வேலை ஒன்றுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடும். உறவினர்கள் சிலர், உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். எப்படியும் முடிந்து விடும் என்று நினைத்த காரியம் ஒன்று, முடியாமல் போகலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வகையில் செலவுகளைச் சந்திப்பீர்கள்.

**கன்னி:** நீங்கள் ஆசைப்பட்டது நடக்கும். நண்பர்கள் சிலருடன் கூட்டாகச் சேர்ந்து, சில காரியங்களைச் செய்வீர்கள். வழக்கமான பணிகள், தங்கு தடையின்றி முடிவுக்கு வரும். வியாபாரிகள் புதியவர்களுக்கு கடன் கொடுக்க நேரிடலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம்.

**நாளை**

ஆவணி- 14 வியாழக்கிழமை 30.08.2012
திதி: சதுர்த்தசி மு.ப 08.41 வரை
நட்சத்திரம்: திருவோணம் கா. 06.37 வரை
சுபநேரம்: 07.35- 09.05 வரை
ராகு காலம்: 01.35- 03.05 வரை

**துலாம்:** ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சந்தோஷமாகப் பேசி நீங்கள் மகிழ்வது மட்டுமன்றி, மற்றவர்களையும் மகிழ்விப்பீர்கள். எந்த வேலைகளையும், நாளை என பிற்போட்டு வைக்காமல் இன்றே செய்வீர்கள். எதிர்பாராத பணவரவுகள் கிடைக்கும்

**விருச்சிகம்:** வெறுப்பு, விரக்திக்கு ஆட்படுவீர்கள். சிறிய தவறு ஒன்று, பெரிய பிரச்சினையாகித் தொந்தரவு கொடுக்கும். குடும்ப உறுப்பினர்கள், உங்களின் யோசனைக்கு எதிராகப்பேசி எரிச்சல் உண்டாக்குவார்கள். மற்றவர்களால், உங்களின் சில வேலைகளில் தடை ஏற்படலாம்.

**தனுசு:** விருந்தினர்கள் வருகையால், வீட்டில் சிரமங்கள் ஏற்படும். நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடப்பார்கள். ஓய்வெடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது ஒரு வகையில் வேலை நெருக்கடி ஏற்படும்.

**மகரம்:** எதிலும் பொறுப்புடன் செயற்பட்டு பாராட்டுப் பெறுவீர்கள். சில நல்ல செய்திகளைக் கேட்கலாம். சில வேலைகளை ஆரம்பத்தில் தவறாகச் செய்து விட்டு, பின்னர் திருத்திக் கொள்வீர்கள். தொல்லை கொடுத்தவர்கள், தோள் கொடுக்க முன்வருவர்.

**கும்பம்:** வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் ஓய்வெடுக்கலாம். சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு அடிபணிவீர்கள். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, சிலரிடம் வாக்குவாதங்கள் செய்ய நேரிடும். ஒரு செலவை பற்றி கவலைப்படும் போது, மற்றொரு செலவு உண்டாகும்.

**மீனம்:** எந்தக் காரியமும், இடையூறின்றி வெற்றிகரமாக முடியும். பெரிய மனிதர்கள் சிலரின் உதவி கிடைக்கும். நண்பர்கள் சிலர் மீது, கோபம் வந்தாலும் அதை வெளிக் காட்டாமல் நடந்து கொள்வீர்கள். இளைய உடன் பிறப்புகள் தொடர்பான விடயங்களில் புட்டும்படாமல் நடந்து கொள்வது நல்லது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | 2 | | | | | 9 |
| 2 | 9 | | | 1 | | 4 | | 5 |
| | 3 | | | | | | 1 | 7 |
| 3 | | | 5 | | 8 | | | |
| | 6 | | 1 | 7 | 2 | | 4 | |
| | | | 6 | | 9 | | | 2 |
| 9 | 2 | | | | | | 7 | |
| 1 | | 4 | | 9 | | | 2 | 8 |
| 6 | | | | | 5 | | | 4 |

### சுடோக்கின் நேற்றைய விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 9 | 6 | 5 | 3 | 1 | 2 | 4 |
| 3 | 2 | 5 | 8 | 4 | 1 | 9 | 6 | 7 |
| 1 | 6 | 4 | 7 | 9 | 2 | 5 | 8 | 3 |
| 8 | 3 | 2 | 4 | 1 | 9 | 6 | 7 | 5 |
| 4 | 7 | 6 | 3 | 8 | 5 | 2 | 1 | 9 |
| 9 | 5 | 1 | 2 | 7 | 6 | 4 | 3 | 8 |
| 5 | 1 | 8 | 9 | 2 | 7 | 3 | 4 | 6 |
| 6 | 9 | 7 | 1 | 3 | 4 | 8 | 5 | 2 |
| 2 | 4 | 3 | 5 | 6 | 8 | 7 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

**(முன்னாள் V.S.V. Travels உரிமையாளர், ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி, கோண்டாவில்)**



மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (25.08.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னர் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதியரின் மூத்தமகனும், காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், நாகபூரணத்தின் அன்புக் கணவரும், பூபாலசிங்கம் (கனடா), காலஞ்சென்ற சற்குணசிங்கம் மற்றும் நந்தகுமார் (ஜேர்மனி), விஜயகுமார் (சுவிஸ்), குமுதினி (சுவிஸ்), குணாளினி (ஜேர்மனி), ஸ்ரீகுமார் (கனடா), பிறேம்குமார் (ஜேர்மனி), சசிகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தகுமாரி, லலிதா, இந்திரசோதி, சிவசோதி, அருளானந்தம், மதனா, தயாளன், கவிதா, துளசா ஆகியோரின் அன்பு மாமனும், டுஷான், டுஷானி (கனடா),கேமா, மதன், தீபா, மகிந்தன், கௌசீகன், நிரோசன், நிதர்சனா (இலங்கை), சாறோன் (ஜேர்மனி), சுரேன், சுஜானி (சுவிஸ்), மாதுரி, மயூரி, மாதினி (சுவிஸ்), பிரணவன்,மிதுலா, சதுஷன், மினாஷன், ஒசோறா (ஜேர்மனி), அபிலாஷ்,சாமந்தி (கனடா), அஸ்வின், அஸ்வினா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், காயா, கஜன், திவ்யன், தாரூண், பவீன் ஆகியோரின் பூட்டனும், பொன்னுத்துரை (ஆஸ்திரேலியா), நாகம்மா (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், புவனேஸ்வரி (சுவிஸ்), இராசேஸ்வரி (கனடா), நாகேந்திரம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2012) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காகப் பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தட்டாங்குளம் வீதி,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(22288)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத தேர்தல் பிரசாரம்: 'கபே' இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.29

அநுராதபுரத்தில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சட்டவிரோத தேர்தல் பிரசாரம் அதிகரித்துச் செல்வதாக 'கபே' இயக்கம் தெரிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் 9 மணிவரை அநுராதபுரத்தில் இருந்து கெக்கிராவை வரை ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி 65 வாகனங்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டன என்று கபே இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வாகனங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பேர்டி பிரேமலால் திஸாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டத்தரணி அபேசிங்க ஆகியோரின் படங்கள் உள்ளடங்கிய போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன என்று 'கபே' இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

பொலிஸார் வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்தபோதும் இந்த வாகனங்களைத் தடுத்து நிறுத்தவில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தேர்தல் சட்டம் மாத்திரமன்றி வீதிப் போக்குவரத்து சட்டமும் மீறப்படுவதாக அவர் தெரிவித்தார். (ச)



சிலாபம் முன்னேஸ்வர ஆலய வருடாந்த தீமிதிப்பு உற்சவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு நடைபெற்றது. அன்றையதினம் பக்தர்கள் தீ மிதிப்பில் ஈடுபட்டு தங்களுடைய நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுகின்றனர்.

# இலங்கை - இந்திய கடற்படையினர் சந்திப்பு

### டில்லியில் 4 நாள் பேச்சு



கொழும்பு,ஓக.29

இலங்கை - இந்திய கடற்படையினருக்கு இடையிலான நான்கு நாள் பேச்சுக்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை புதுடில்லியில் ஆரம்பமாகியுள்ளன.

இந்தப் பேச்சுக்களை நடத்துவதற்காக இலங்கைக் கடற்படை தலைவர் றியர் அட்மிரல் ஏ.ஏ.ஆர்.ஏ.டயஸ் தலைமையிலான குழுவொன்று புதுடில்லி சென்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புதுடெல்லி சென்ற இந்தக் குழுவினர் நாளை வியாழக்கிழமை வரை அங்கு தங்கியிருப்பர். இந்தியக் கடற்படைத் தலைவர் வைஸ் அட்மிரல் முரளிதரன் உள்ளிட்ட அதிகாரிகளுடன் இவர்கள் பேச்சு நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான தாக்குதல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் அதிகரித்துள்ள நிலையில், இருதரப்பு கடல்சார் விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. இரண்டு கடற்படைகளுக்கும் இடையில் நடவடிக்கை மட்ட ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்வது குறித்து இந்தச் சந்திப்பில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று இந்திய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# துறக்கமாட்டார் அமைச்சர் பதவியை

### ஆளும் கட்சிக்கு விசுவாசமாகவே இருக்கிறேன் என்கிறார் ஹக்கீம்

கொழும்பு,ஓக.29

அமைச்சுப் பதவியை துறக்கப் போவதில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பதவி விலகுமாறு கட்சியின் அதி உயர் பீடம் அழுத்தம் கொடுத்து வருவதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண தேர்தலுக்காக அமைச்சுப் பதவியைத் துறக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதே எனது நிலைப்பாடு என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிட்ட போதிலும், தாம் ஆளும் கட்சியிலேயே தொடர்ந்தும் அங்கம் வகித்து வருவதாகத் தெரிவித்தார்.

18 ஆம் திருத்தச் சட்ட மூல நிறைவேற்றம் உள்ளிட்ட முக்கிய சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சிக்கு விசுவாசமாக தாம் நடந்து கொண்டுள்ளதாக அவர் கூறினார்.



தேவையின்றி அரசிலிருந்து விலக வேண்டிய அவசியமில்லை.பசீர் சேகுதாவூத் பிரதி அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துள்ள போதிலும் கட்சியின் வெற்றிக்காக தொடர்ந்தும் செயற்படுவார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# சிறுவருக்கான கடவுச் சீட்டின் காலம், கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு,ஓக.29

16 வயதுக்குட்பட்ட இலங்கைச் சிறுவர்களுக்கான கடவுச்சீட்டின் செல்லுபடியாகும் காலத்தை மேலும் மூன்று வருடங்களால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படும் கடவுச் சீட்டுக்கள் இந்தத் திட்டத்துக்குள் உட்படவுள்ளது என்று குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, புதிதாக வழங்கப்படவிருக்கும் கடவுச் சீட்டுகளுக்கான கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்படி சகல நாட்டுக்குமான கடவுச்சீட்டினை பெறுவதற்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும், சாதாரண சேவைகளுக்காக ஆயிரத்து 500 ரூபாவும் செலுத்தப்பட வேண்டும்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கான கடவுச்சீட்டினைப் பெறுவதற்கு ஆயிரத்து 500 ரூபா செலுத்தப்பட வேண்டிய அதேவேளை, சாதாரண சேவைகளுக்காக ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

# புத்தரின் எலும்பை வைத்து அரசு தேர்தல் பிரசாரம்

### திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.29

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட புத்தரின் எலும்பை வைத்து அரசு இந்த முறை தேர்தல் பிரசாரம் செய்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கு தேர்தல் தொனிப் பொருள் ஒன்று இல்லாததால் புத்தரின் எலும்புகளை காட்டி மக்களிடம் வாக்கு பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட புத்தரின் எலும்பு தேர்தல் நடைபெறும் மாகாணங்களில் மாத்திரம் கண்காட்சிக்கு வைக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த தேர்தல்களில் போர் வெற்றியை தேர்தல் பிரசார தொனிப்பொருளாகக் கொண்ட அரசு, இந்த முறை தொனிப்பொருளின்றி புத்தரின் எலும்பை பயன்படுத்துகின்றது. இதே வேளை, 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை குறித்து எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு கல்வி அதிகாரிகள் முழு பொறுப்பு கூற வேண்டும்- என்றார். (ச)

### மரம் முறிந்து வீட்டில் விழுந்ததில் தாய், பிள்ளைகள் காயம்

கொழும்பு,ஓக.29

பதுளை, தொட்டமுன பகுதியில் உள்ள வீட்டின் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் மூவர் படுகாயமடைந்துள்ளனர். இந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டுக்குள் உறங்கிக் கொண்டிருந்த தாய் மற்றும் அவரது மகள், மகன் ஆகியோர் படுகாயமடைந்து பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# களியாட்ட விடுதிக்குள் பாம்புடன் சென்ற பெண்

கொழும்பு - கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள இரவு நேர களியாட்ட விடுதி ஒன்றுக்கு பாம்பு ஒன்றை எடுத்துச் சென்ற பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. பிலிமத்தலாவ பகுதியில் வசிக்கும் குறித்த பெண் களியாட்ட விடுதியில் பணிபுரிபவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட பெண்ணை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துவருகின்றனர். (ச)

# டேர்பனில் தடுத்து வைக்கப்பட்ட மகாபொல கப்பலின் நிலை என்ன?

### சிங்கக்கொடியின்றி பறக்கிறது தன்சானியா கொடி

கொழும்பு,ஓக.29

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 'லங்கா மஹா. பொல' கப்பல் டேர்பன் துறைமுகத்தில் தொடர்ந்து நங்கூரமிட்ட நிலையில் காணப்படுகிறது.

இந்தக் கப்பல் டேர்பனில் நங்கூரமிட்டதற்கான கட்டணமான 81 ஆயிரம் டொலர்கள் செலுத்தப்படவில்லை என்பதனால் கடந்த மே மாதம் 17 ஆம் திகதி டேர்பன் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டது. அதன் மாலுமிகள் [illegible] நாடு திரும்பினர். எனினும் இந்தக் கப்பல் இன்னும் மீட்கப்படாதுள்ளது.

இதேவேளை இந்தக் கப்பல் அரசினால் தன்சானியாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுவரையில் இலங்கையின் கொடி பறக்கவிடப்பட்டிருந்த இந்தக் கப்பலில், தற்போது தன்சானியாவின் கொடி பறக்க விடப்பட்டுள்ளது. எனினும் இதுவரையில் இந்தக் கப்பல் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பிலான அறிவிப்புகளை அரசு வெளியிடவில்லை.

இந்தக் கப்பலை கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்று பயன்படுத்தி வந்தது. இந்த நிறுவனத்தின் உரிமையாளர், ஜனாதிபதியின் முக்கிய அதிகாரி ஒருவரின் உறவினர் என்று தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 150 அடி பள்ளத்தில் பஸ் கவிழ்ந்தது: 17 பேருக்கு காயம்

கொழும்பு,ஓக.29

அவிசாவளை, கெந்தலவத்தையில் இருந்து தெரணியகலை நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் விபத்துக்குள்ளானதில் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.45 மணிக்கு மியனவிட்ட பகுதியில் சுமார் 150 அடி பள்ளத்தில் விழுந்து பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த பஸ்ஸில் 21 பயணிகள் பயணித்தனர் என்று தெரணியகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த 17 பேர் தெரணியகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட " A ' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

* எம்மிடம் கோழிக்குஞ்சு வாங்குபவர்களிடம் புறொயிலர் கோழி (இறைச்சிக்கோழி) மீள் கொள் வனவு செய்யப்படும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(22204) (8.6.7)

# சந்நிதியில் மண்பாதைக்கு மின் விளக்கு

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற செல்வச் சந்நிதி ஆலயத்தின் பின்புறம் தொண்டைமானாறு ஆற்றை ஊடறுத்து அமைக்கப்பட்ட மண்பாதையை தினமும் சீர் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களின் வசதி கருதி இந்த மண் பாதை வலி.கிழக்கு பிரதேச சபையினால் அமைக்கப்பட்டு கடந்த வாரத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த மண் பாதையில் கடல் நீரின் அரிப்பை தடுக்கும் முகமாக பாதையில் இரு பக்கமும் மண் மூடைகள் அடுக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. அதனைவிட இந்த மண் நடைபாதையூடாக இரவில் பயணம் செய்யும் பக்தர்களின் வசதி கருதி மின்சார விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

(3-17)

**ஆக்கம் கோரல்**

தென்மராட்சி, ஓக.29

சாவகச்சேரி டச்சுவீதி ஸ்ரீ பழநி சிக்கனக்கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தினர் இருபதாவது வருட நிறைவை யொட்டி நூல் வெளியிடவுள்ளனர்.

இதற்கான ஆக்கங்கள் படைப்பாளிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

கவிதைகள் கட்டுரைகள், சிறுகதைகள் உட்பட்ட ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு சங்கச் செயலாளர் ம.விவேகானந்தன் அறிவித்துள்ளார். (3-9)



# கிளிநொச்சி வர்த்தகர்சங்கம் தரும் விசேட அறிவித்தல்

அருள்மிகு கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான மகோற்சவ நிகழ்வில் முத்தேர் பவனி 30.08.2012 வியாழன் இடம் பெற இருப்பதால் அன்பர்கள் அடியார்கள் அனைவரும் கலந்து கொள்வதற்கு வசதியாக வர்த்தக விடுமுறையாக நடைமுறைப்படுத்தி ஒத்துழைப்பு நல்குமாறு அனைத்து வர்த்தகர்களையும் இறையன்புடன் வேண்டு கின்றோம்.

கிளிநொச்சி
வர்த்தகஅபிவிருத்திச்சங்கம்,
கிளிநொச்சி.

(19313)(6-7-8)

# 25ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர் கந்தசாமி-செல்லம்மா

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

ஒளிவிளக்காக சுடர்விட்டெரிந்த தீபம்
அணைந்து 25 ஆண்டுகள் கடந்தாலும்
எமது நினைவுகள் என்றென்றும்
அகலமாட்டா.
அவரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

கிருஷ்ணமூர்த்தி குடும்பம் (ஜேர்மனி), தேவராசா குடும்பம் (நோர்வே)
பிரசாத் குடும்பம் (ஜேர்மனி), பேரன்- செல்லரூபன்
செல்லகரன்(லண்டன்)
சதானந்தன் குடும்பம் (பண்ணாகம்),மகேந்திரா குடும்பம்
(பண்ணாகம்)
குமரன் குடும்பம் (இந்தியா),
பூட்டப்பிள்ளைகள்-சங்கீதா, அபிநயா, திவ்யா, கலியுகன்,
இந்தியா கபிநயா. (22041)(8-6)

# நீங்கா நினைவுகளுடன்

18 ஆம் ஆண்டு நினைவு | முதலாம் ஆண்டு நினைவு



தோற்றம் : 26★05★1927
மறைவு : 20★03★1994
**நன்னி கிருஸ்ணர்**

தோற்றம் : 15★08★1938
மறைவு : 11★09★2011
**பரமேஸ்வரி கிருஸ்ணர்**

ஆண்டுகள் பல கழிந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
காலங்கள் கழிந்தனவே அன்றி கண்ணீர் வற்றவில்லை
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு ஒரு போதும் நீங்காது
உங்கள் ஆத்ம சாந்திக்காக செல்வச்சந்நிதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்

30.08.2012 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

சுன்னாகம் வீதி,
புத்தூர் வடக்கு, புத்தூர். (22285)(6.7.8)

குடும்பத்தினர்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கேள்வி அறிவித்தல்

## மாடி வீட்டுடன் அமைந்த காணி

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான மாடி வீட்டுடன் கூடிய காணி விற்பனை செய்யப்படவுள்ளது.

* இல. 67, மூத்தவிநாயகர் வீதி, நல்லூரில் அமைந்துள்ள பரப்பு 1, குளி 2.65 விஸ்தீரணமுள்ள புதிய மாடி வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.
* கேள்விப்பத்திரங்களினை சமர்பிக்க விரும்புவோர் தமது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், கேள்வித் தொகை என்பவற்றினை தெளிவாகக் குறிப்பிட்டு தமது கை யொப் பத்துடன், இடது பக்க மேல் மூலையில் காணி கொள்வனவுக்கான கேள்வி எனக்குறிப்பிட்டு மூடிய கடிதவுறையில் தலைவர் / பொதுமுகாமையாளர் யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம், இல. 127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் 11.09.2012 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
* காணி கட்டடத்தினை பார்வையிட விரும்புவோர் சங்கத் தொலைபேசி இலக்கத்துடன் (021 2222587) அலுவலக நேரத்தில் பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடமுடியும்.
* கேள்வி விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதித்திகதி 11.09.2012
* கிடைக்கப்பெற்ற மூடிய கேள்விப்பத்திரங்கள் இயக்குனர் சபைக் கூட்டத்தில் திறக்கப்பட்டு, விலை மதிப்பீட்டுக்கமைய ஆராய்ந்து காணி விற்பனை தொடர்பான இறுதித் தீர்மானம் இயக்குனர் சபையால் மேற்கொள்ளப்படும்.

சங்கத்தின் இயக்குனர் சபைத் தீர்மானத்திற்கமைவாக,
பொதுமுகாமையாளர்
யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்

(சி/2965)(6-7-8)

ஸ்ரீ செல்வச்சந்நிதி வேல் துணை

"நல்ல திருவானதொரு சன்னதிவேலா - செந்தமிழ் வல்ல குரு நாதனென வந்திடையா"





# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி வேல்முருகப் பெருமான் மீது பாடப்பெற்ற * பக்திப்பாடல்கள்

## இறுவட்டு வெளியீட்டு வைபவம்

சப்பரத் திருவிழாவன்று 29.08.2012 புதன்கிழமை காலை செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் பூசைகளைத் தொடர்ந்து சந்நிதி வசந்தம் - 4 வெளியீடு செய்து வைக்கப்பட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் சிறப்புப் பிரதிகள் வழங்கும் நிகழ்வு இடம் பெறும்.

## சந்நிதி வேலன் புகழ்பாடும் சந்நிதி வசந்தம் ஆக்கக் கலைஞர்கள்

* பாடலாக்கம் : துரை கணேசமூர்த்தி
* இசை - கோ. சத்தியன்
* ஒருங்கிணைப்பு - சைவப்புலவர் செல்லையா பரமேஸ்வரன் (அதிபர்)
* பாடகர்கள் - இசைப்பேரரசு கலாநிதி நா. வி.மு. நவரத்தினம், சொரூபி நவரத்தினம், சுவாமி மோகனதாஸ் மற்றும்
* சாந்தன், திவாகர் ஆகியோருடன்
* பிரபல தென்னிந்தியப் பாடகர் T.M.S.செல்வக்குமார்

" எல்லாம் வல்ல பெருமான் சந்நிதியானின் புகழ்பாடும் சந்நிதி வசந்தம் - 4 பாடல்களை யாவரும் கேட்டு இன்புறுக "

## சந்நிதி வசந்தம் - 4 பக்திச்சுவை சொட்டிப் பரவ வாழ்த்துவோர்

★ பானு பல்பொருள் வாணிபம்


★ பிரபு உந்துருளி சுத்திகரிப்பு நிலையம்

★ செல்வரட்ணம் பைக்கோ வாடகை நிலையம்

தொடர்பு : துரையப்பா செல்வரட்ணம்
ஸ்ரேசன் றோட், ஊரெழு வடக்கு, சுன்னாகம்
தொ.பே. இல. 077 3621176

(22273)(6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## சந்நிதி ஆலய நிகழ்வுகள்

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்று வரும் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு பதின்மூன்றாம் திருவிழாவான இன்று, புதன் கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு இளைப்பாறிய ஆசிரியர் ஐ.சண்முகலிங்கன் "மானிட வாழ்வை மான்புறச் செய்வோம்" எனும் கருப் பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். (3-8)

★ ★

ஆலய முன்றிலில் மாலை 4 மணிக்கு சுப. ஜெயகோபால சாமி "தேர் உரை" எனும் கருப் பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். (3-8-253)

## உளநல சேவைக்கான பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஓக.29

வடமாகாணத்தில் உளநல சேவைகள் ஒப்பீட்டளவில் குறைந்த வளத்தில் திருப்திகரமான சேவையை வழங்கி வருகின்றது.

எனினும் மூன்று மாவட்டங்களில் மட்டுமே உளநோய் விடுதிகள் உள்ளன. ஏனைய இரண்டு மாவட்டங்களிலும் உளநோய் விடுதிகள் அமைக்கப்பட வேண்டும்.

அதேநேரம் பரந்துபட்ட அளவில் சமுதாய ரீதியிலான உளநல சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த உள மருத்துவ சமூகப் பணியில் ஈடுபட ஆர்வமுடைய பணியாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சி நெறி நேற்று தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஆரம்பமாகியது. நாளை 30 ஆம் திகதி வியாழக்கிழமை இந்தப் பயிற்சி நெறி நிறைவடைய உள்ளது.

வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களில் இருந்தும் தலா 2 பேர் வீதம் 10 பேர் இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-36)

## இலங்கை படையினரை வெளியேற்றக் கோரி குன்னூர் இராணுவ மையம் முற்றுகை

### தே.மு.தி.கவினர் 63 பேர் கைது

இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வரும் குன்னூர் வெலிங்டன் இராணுவ மையத்தை நேற்று முன்தினம் முற்றுகையிட முயன்ற தே.மு.தி.க.வினர், 63 பேரை, பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகேயுள்ள வெலிங்டன் இராணுவ மையத்தில் பயிற்சி பெறும் இலங்கை அதிகாரிகளை வெளியேற்ற வேண்டும் என, வலியுறுத்தி, தே.மு.தி.க. வினர் நேற்று முன்தினம் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



மாவட்டச் செயலர் சாந்திராமு தலைமையில், 63 பேர், வெலிங்டன் இராணுவ மையம் அமைந்துள்ள பிளாக் பிரிட்ஜ் பகுதியில், போராட்டத்தில் ஈடுபட்ட போது, பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனால், பொலிசாருக்கும் ஆர்பாட்டக் காரருக்கும் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது.

பின்னர், தே.மு.தி.க. வினர் ஊட்டி - குன்னூர் நெடுஞ்சாலையில், மறியலில் ஈடுபட்ட போது, அவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

இதேபோல், அந்தப் பகுதியை முற்றுகையிட முயன்ற, நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த, மூன்று பெண்கள் உட்பட, 22 பேரும் கைது செய்யப்பட்டனர். (3)

## சுயதொழில் கடன் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக.29

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கூட்டுறவுச் சங்கம், செபி திட்டத்தினூடாக யாழ்.மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு அரச வங்கிகளில் சுயதொழில் கடன் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்காக கடன் பெறும் பயனாளிகளுக்கு கடந்த 20 ஆம் திகதியிலிருந்து பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பயிற்சி நெறியின் நிறைவு நாள் எதிர்வரும் செப்ரெம்பர் 3 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலையத்தில் நிஸ்கோ பொது முகாமையாளர் ப.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (3)

## சமய சந்நிதிகளில்

கிளிநொச்சி, வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாத பெருமாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆலயத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் செப்ரெம்பர் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (3)

★ ★ ★

அளவெட்டி நாகேஸ்வரன் ஸ்ரீ நாகவிரத நாராயணர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று 29 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து நடைபெறும் உற்சவ நிகழ்வுகளில் எதிர்வரும் செப்ரெம்பர் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 8 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (3-78)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக.29

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்தப்பெருந்திருவிழாவில் சப்பரத் திருவிழா இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. தேர்த் திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 7மணிக்கும் நடைபெறவுள்ளது.

இவ் ஆலயத்தின் வருடாந்தப்பெருந்திருவிழா கடந்த 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது. (3-78-8)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கின்றேன்"
லூக் 23:43



அன்னை மடியில்
26.10.1975

ஆண்டவன் அடியில்
29.08.2006

அமரர்
ஜேசுதாசன் டேமியன்

எங்கள் மகனே, சகோதரா, அன்புள்ள அப்பா
எம்முடன் இருந்து எமையெல்லாம் மகிழ்வித்தவரே
வாழும் உரிமை பறிக்கப்பட்டு எம்மை
தனியாக விட்டுப்பிரிந்து ஆண்டு ஆறாகியதோ!
உங்களைக் காணாது, உயிரோட்டமான நினைவுகள்
அனைத்தும் எம் நெஞ்சங்களில் இருக்கின்றன.

முத்தான பிள்ளையொன்று உமை நினைத்திடுகையில்பதில்
கூற முடியாது மௌனித்து ஈரவிழிகளுடன் வாழ்கின்றோம்.
அன்று உமக்கிவ்விதம் ஆனாது ஏனோ என்று சக்தியற்று
செய்வதறியாது ஏங்குகின்றோம்.

டேமி! உன்னை சுமந்த அடைக்கல தாயவள்
நெஞ்சினில் தினம் சுமந்தவளாய் இருக்கக் கண்டு
உள்ளமதில் வந்து செல்கின்றாயே.
அன்பாலும் அமைதியாகவும் அளப்பரிய
பாசப்பிணைப்பாலும் அனைத்து நெஞ்சங்களையும்
வென்று எம்தூரில் உலா வந்திட்டவரே கண்கொள்ளும்
உங்கள் புன்னகையும் இனிய வார்த்தைகளும்
எம்புலங்களில் ஒலித்துக் கொண்டிருக்கும்.

வாழ்விலும்-உங்களை நேசித்தோம்
மறைவிலும் உங்களை மறவோம்.
உனது ஆன்மா இறைவனின் நித்தியத்தில் இருப்பதாக.

186, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
9/1, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(22266)(5-6-7)

அப்பா, அம்மா, சகோதரர்கள்
சகோதரிகள், மனைவி, மகள்.

### காணி விற்பனைக்கு

ஒட்டு வெளி, மிருசுவிலில் ஏ 9 வீதியிலிருந்து ¼ கி.மீற்றர் தூரத்தில் 25 பரப்புக்காணி (பிராமணன் வளவு) விற்பனைக் குண்டு.

தொடர்பு: 077 948 1100
077 408 7674
(21510)(5-6-7)

### இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொ யிலர், கல்பேட், தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்.

நல்லூர் பாம் சென்ரர்,
# 19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
(22203)(5-6-7)

### வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகர் ஸ்ரான்லி வீதியில், மக்கள் வங்கிக்கருகில் பிரதான வீதியிலிருந்து 100m தூரத்தில் 7 அறைகள் 2 பெரிய வரவேற்பறைகள் கொண்ட வீடு ($2400m^2$) வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 352 7506
(22256)(5-6-7)

### 50" TV விற்பனைக்கு

50" Sumsoug TV PLASAMAHD 1080P 100Hz உம் அத்துடன் புத்தம் புதிய குசன் செற்றியும், சாப்பாட்டு மேசை கதிரையும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: A.G.செல்வம், 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். 077 910 7153
(22265)(5-6-7)

### காணி விற்பனைக்கு/வாடகைக்கு

யாழ். கல்வியங்காடு சட்டநாதர் வீதிக்கு அருகில் 2 பரப்புக்காணி விற்பனைக்கு/வாடகைக்கு உண்டு

தொடர்பு: 071 252 0503
077 131 6095, 075 2390421
(20853)(5-6-7)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984 மூலம் 2ஆம் பாதம் செவ்வாய் குற்றமற்ற பாவம் 11 உடைய வங்கியில் பதவி நிலையில் உள்ள மணமகனுக்கு ஆசிரியை/வங்கியில் பணியாற்றும் அழகிய நற்குணமுள்ள மணமகள் தேவை.

தொடர்பு: 024 492 3418
(20861)(5-6-7)

### Gym Dybetic Tea

200 வருடங்களுக்கு முன் முனிவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இயற்கை மூலிகையான சிறுகுறிஞ்சா நீரிழிவு நோயாளிகளுக்கு சிறந்த இயற்கை மருந்து.

இப்போது எங்கள் யாழ்மண்ணில்.மற்றும் ஐரோப்பா நாடுகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
இதனை திங்கள்,புதன்,வியாழன்,வெள்ளி தினங்களில் செல்வசந்நிதித் சந்நிதானத்தில் பெற்றுக்கொள்ள முடியும்

Our Products



-Sithasuthesa Herbal Medical Council Approval
-Canadian Goverment Sitha Herbal Approval
-Industreial Award AllIsland

Gym diabetic tea 100% Herbal

Contact
K.B.INTERCOM SARL
U.KARTHIGESU
Av des Alpes 40
1820 MONTREUX
Tel: 021/961.27.16
Fax: 021/961.27.19

local Contact
V.Nishanthan
Contact Number: 0775241507
Fax: 112436359
nishanthan3ds@yahoo.com

ஏற்றுமதி தரத்தில்
எமது யாழ்ப்பாண தயாரிப்பு

Bio Tech
132/2 Palaly Road, Thirunelvelly,
jaffna.
021 222 0156

Soul Agent Europe & All Island

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய



# தேர்ச் சிறப்பு மலர் (நாளை 30.08.2012 தேர்த்திருவிழா)

## ஆலய வரலாறு

மஞ்சவனப் பதியில் வாழும் வரமணியே!
தஞ்சமென நின்பால் சரணடைந்தேன்-செஞ்சொல்
குணபதியே ஞானக் குருபரனே! செல்லக்
கணபதியே காப்பாய் கனிந்து

**தேர்த்திருவிழா நேர விபரம்**
வசந்தமண்டபப்பூசை காலை 7.00 மணி, சுவாமி தேரில் எழுந்தருளல் 9.00 மணி, சுவாமி தேரில் இருந்து இறங்குதல் 12.00 மணி, மகேஸ்வர பூசை (அன்னதானம்) 12.30 மணி
(மூன்று மடங்களிலும் நடைபெறும்)
மங்கல வாத்தியம் குகன் குழுவினர்
பாலமுருகன் குழுவினர், பஞ்ச மூர்த்தி குழுவினர்

முருகவழிபாடு ஈழத்தில் தொன்மையான வரலாற்றுப் பாரம்பரியமுடைய தொன்றாகும். கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் யாழ். நகருக்கு அண்மையில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ளது.மடாலயமாக விளங்கிய இந்த விநாயகர் ஆலயம் ஓலையால் வேயப்பட்டதாகவும், தரையானது சாணத்தினால் மெழுகப்பட்டதாகவும் இருந்த இவ்வாலயம் 1817ஆம் ஆண்டு ஆகம விதிப்படி கற்கோயிலாகக் கட்டப்பட்டது. வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணியப் பெருமானது கருங்கல் சிவமூர்த்தம் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

மேலும் கோயில் திருப்பணி வேலைகளை இருபத்து நான்கு பேர் சேர்ந்து திருப்பணிச் சபையொன்றை அமைத்து நிதி சேகரித்து திருப்பணி வேலைகளை நிறைவேற்றி முத்துக்குமார சுவாமி அலங்கார மூர்த்தியாக ஐம்பொன்னால் வார்க்கப்பட்டு அலங்கார உற்சவம் நிகழ்த்தப்பட்டது. 1890 ஆம் ஆண்டு இவ்வாலயம் திருத்தியும், புதுக்கியும் திருப்பணிகள் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டது. 1915ஆம் ஆண்டு ஆலயத்தில் கொடிஸ்தம்பம் அமைக்கப்பட்டது. துவாரோகணமாகி மகோற்சவம் சிறப்புடன் நிகழ்த்தப்பட்டது. கோபாலி கந்தையா அவர்கள் ஆறுதிருமுகங்களுடன் கூடிய சண்முகப் பெருமானது எழுந்தருளி விக்கிரகத்தை அமைத்துக் கொடுத்தார்.

1938ஆம் ஆண்டு வரை கட்டுத்தேரிலேயே சண்முகப் பெருமான் வலம் வந்தார். 1939ஆம் ஆண்டு பெரியார் அமரர் ச.வே. சண்முகம்பிள்ளை அவர்கள் ஈழவள நாட்டில் எங்குமில்லாத வகையில் இந்தியாவில் இருந்து அழைத்து வந்த ஸ்தபதிகள் மூலம் கலையம்சம் பொருந்திய அழகிய சித்திரத் தேரை அமைத்துக் கொடுத்தார்.

1975ஆம் ஆண்டு தம்பிமுத்து குடும்ப உபயமாக விநாயகப் பெருமானுக்கு தம்பிமுத்து நீதிராசா அவர்கள் ஒரு சித்திரத் தேரையும் 2004ஆம் ஆண்டு சண்டேஸ்வரப் பெருமானுக்கு ஒரு சித்திரத் தேரை சபாரட்ணம் சண்முகரட்ணம் அவர்களும் அமைத்து வழங்கியுள்ளனர். தேர்த்திருவிழாவன்று மூன்று தேர்களிலும் சுவாமி வலம் வரும் காட்சி பேருவகை தரும் காட்சியாகும்.

இவ்வாலயத்துக்கு வடக்குப் புறமாக காசிப்பிள்ளை பொன்னம்பலம் குடும்பத்தினால் வழங்கப்பட்ட காணியில் வல்லிபுரம் நவரத்தினம் குடும்பத்தினர் ஒரு தீர்த்த வாரியை அமைத்துக் கொடுத்துள்ளனர். தூலலிங்கமாகிய கோபுரத்தை தரிசித்தே சூக்கும லிங்கமாகிய இறைவனை தரிசிக்க வேண்டும் என்பதற்கிணங்க அமரர்.ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களால் ஆரம்பித்து வைக்கப் பட்ட இராச கோபுரம் அடியவர்களின் பெரும் பங்களிப்புடன் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதனால் மூர்த்தி, தலம், தீர்த்தம் அமைந்த சிறப்பைக் கொண்டதாக இவ்வாலயம் அமைந்துள்ளது.

பெரும் திருவிழாக்களின் எண்ணிக்கை சமய அறிஞர்கள் அந்தணப் பெருமக்களது ஆலோசனைக்கிணங்க பதினெட்டாக அதிகரிக்கப்பட்டது. வழமைபோல் ஆவணி மாத பூரணை தினத்தை தீர்த்த உபயதினமாக நிர்ணயித்தே பெரும் திருவிழாக்கள் நடைபெறும்.

இவ்வாலயம் திருமுக கிருபானந்தவாரியார் அவர்கள் ஈழவள நாட்டிலே அதிக நாள்கள் பேருரை வழங்கிய ஆலயமாகும். வாரியார் சுவாமிகள் தனது சுயசரிதையில் இதைக் குறிப்பிட்டுள்ளதே இவ்வாலயத்திற்குள்ள தனிச் சிறப்பாகும். இவ்வாலயத்தில் கந்தசஷ்டி உற்சவ காலம் மிகவும் பக்திமயமாக அடியவர்களால் அனுசரிக்கப்படுவது சிறப்பம்சமாகும். இவ்வாலயத்தில் பூங்காவனத் திருவிழாவன்று அழகிய நந்தவனத்தில் வள்ளி அம்மன் கொலுவிருக்கும் காட்சியும் வள்ளி திருமணக்காட்சியும் அப்போது நடைபெறுகின்ற ஊடல் காட்சியும் சிறப்பானதாகும். அத்தோடு சூரசம்கார தினத்தன்று சூரன் போர் சூரபத்மன் வாகனத்தில் வலம் வந்து பெருமானுடன் போர் புரியும் காட்சியும் தத்ரூபமான காட்சியாகும். பெரும் திருவிழாக்காலங்களில் ஆலய வடக்குப்புற வீதியில் அமைந்துள்ள சின்னம்மா மடத்திலும் தெற்கு வீதியில் அமைந்துள்ள கல்யாண மண்டபத்திலும் மகேஸ்வர பூசை சிறப்பாக நடைபெற்று வருவது சிறப்பானதாகும். இவ்வாலயத்தில் சிவஸ்ரீ இரத்தின சபாபதிக் குருக்கள் விக்கினேஸ்வரக்குருக்கள் அவர்கள் பிரதம குருவாக இருந்து சீரிய முறையில் பணியாற்றி வருகிறார்.

- இ.இராசலிங்கம், *செயலாளர் தர்மகர்த்தா சபை.*

## மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச்செய்தி



சீரும் திருவும் பொலியும் புண்ணிய பூமியாம் இலங்கை மணித் திருநாட்டில் மகுடம் எனத் திகழும் யாழ்ப்பாணத்தின் கொக்குவில் பகுதியின் மஞ்சவனப்பதி என்னும் திவ்விய நாமத்துடன்விளங்கும் முருகப் பெருமானின் வருடாந்த மஹோற்சவத்தின் இரதோற்சவம் நாளை ஆகும். மாறாப்பிணியில் அகப்பட்டு வருந்தும் அடியவர்களின் வருத்தம் எல்லாம் நீறாகப் போக நின்னருள் புரியும் மஞ்சவனப்பதி முருகனுக்கு உருகி உருகி உழைக்கும் உண்மை அடியார்களின் துன்பம் எல்லாம் உருகிப் போக கருணைக் கந்தன் நாளை அழகிய சித்திரத் தேரிலே வலம் வருகின்றான். எமது இந்தப் பண்பாடின் உறைவிடம் ஆலயம். சமுதாய வாழ்வில் ஆலயம் இன்றியமையாத ஒன்றாகும். ஆலயங்கள் வழிபடுவோரையும் இறைவனையும் இணைக்கின்ற பக்தி நிலையங்களாக அமைந்ததோடு அவை இந்துக்களது வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடையதாகவும் உள்ளன. அடியவர்களும் தம்மால் இயன்ற பணிகளையும் வளங்களையும் ஆலய சேவைக்கு வழங்கியுள்ளனர்.

அழகிய பழமைவாய்ந்த சிற்ப வேலைகளுடன் கூடிய சித்திரத் தேரில் ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி தேசநலன் காக்க மஞ்சவனப்பதியான் நாளை தேரேறி வருகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகக் காண மனிதவாழ்வில் புண்ணியமே செய்யத்தக்கது. பாவம் விலக்கத் தக்கது. அந்த வகையில் நாளைய தேர்த்திருவிழா நன்னாளில் அடியார்கள் எல்லோரையும் முருகப் பெருமான் சிறப்போடு வாழவைக்க வேண்டுமென்று மஞ்சவனப்பதி முருகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து ஆசிகூறி அமைகின்றேன்.

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

'ஈசான சிவாச்சாரியார் சிவாகம ஞான சாகரம்' சிவப்பிரம்ம ஸ்ரீ
சொ.இ.விக்கினேஸ்வர குருக்கள் மஹோற்சவ குருவும் ஆலய பிரதம குருவும்.

## ஆசிச் செய்தி



தொல்வினை தீர்த்தருளும் எல்லாம் வல்ல மஞ்சவனப்பதி முருகப் பெருமான் கொக்குவில் பதியில் வீற்றிருக்கின்ற அவர் தன்னை நாடி வந்து வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் போக்கி அருளாட்சிசெய்து கொண்டிருக்கின்றார். அந்த அலங்காரக் கந்தனுக்கு நாளை தேர்த்திருவிழா. இறைவனின் ஐந்தொழிலில் உன்னதமானது அழித்தல் தொழில் அதனை வெளிப்படுத்தும் இந்நாளில் சிவனின் திரண்ட சக்தி வடிவமான ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராக சித்திரத் தேரிலே பவனிவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியே. அருள் வள்ளலான ஆறுமுகப் பெருமான் தன்னை நாடி நிற்கும் அடியவர்களுக்கு துயரங்களைப் போக்கி நல்வாழ்வு அருள்வாய் குருபரனே என்று பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

'இருப்பரங் குன்றத்திடுமெ ..க வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்'

வே.கருணாகரன்,
உபதலைவர், ஆலய
தர்மகர்த்தா சபை


**தூர்க்கா ரேட்ஸ்**
**Turkka Trades**
கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி,
கொக்குவில். T.P.021 222 5008

**சாரங்கா நாணயமாற்று சேவை**
Sharanga Money Exchange (Pvt) LTD
(Permit No: Ecd/ In/ Aut/ Mc/ 164)
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 6972

**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 6972, Fax. 222 8869
இணை நிறுவனங்கள்
சாரங்கா ஜுவெல்லரி
TEL: 2434971, Fax. 0112434071
சிவா தங்கமாடம்
தொ.பே. 021 4922390

கொழும்பு ⟷ யாழ்ப்பாணம் ⟷ கொழும்பு
Venkadeswara Express
A/C Video Coach
217, Central Road, Colombo 12. Tel: 0115234588
Colombo: 0773988776,
Jaffna: 077 3929359,
Hot Line: 0777743578,
Tel: 021 222 6972

**விளம்பர அனுசரணையாளர்கள்**

**சண்ஜெய**
**உணவகம்**
416, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**செந்தூரன்**
**எலெக்ரிக்கல்**
கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

**இலங்கை வங்கி 1939 - 2012**
73 வருடங்கள் கடந்து நிமிர்ந்த நடையில் இலங்கையில் முதன் முறையாக ஒரு ட்ரில்லியன் (1,000,000,000,000) பெறுமதியான சொத்துக்களை அடைந்து சாதனை படைத்துள்ளது. பெருமைமிக்க இலங்கை வங்கியின் வாடிக்கையாளராக இருந்து எங்களைப் பலப்படுத்திய உங்களுக்கு ஒரு ட்ரில்லியன் நன்றிகள் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

**Seelan Aluminium Fitting**
DOHA, DUBAI
இல் பத்து வருட அனுபவமுள்ளவர்
No.54, K.K.S. Road, Kokuvil Junction.
Tel: 021 4902561, 0778050918

றோல்ஸ், வடை, பூந்திலட்டு, சர்பத், ஐஸ்கிறீம், பீடா என்பன ஓடர் மூலம் பெற்றுக்கொள்ளலாம்
**பரணி கிறீம் கவுஸ்**
கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி,
யாழ்ப்பாணம். தொ.பே.0779186284

**PSB Communication**
Local Call, Net IDD Calls,
Net Browsing, Photocopy, DVD
Writting, DVD Movies,
Mobile Phone Sales& Parts.
337 (555), K.K.S. Road,
Jaffna.
T.P: 021 222 7477 Fx: 021 222 4501

**JAYAM ELECTRONICS**
Repairing Center
அனைத்து வகையான இலத்திரனியல் பொருள்களும் மிகச் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
அனைத்து இலத்திரனியல் பொருள்களும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
339, K.K.S.Road, Jaffna.
T.P: 0774041910

**ரமணன்**
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
இல.84, ஐயனார் கோயிலடி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.இல. 021 4923417,
021 222 9296

**பராசக்தி**
**அரைக்கும் ஆலை**
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

22 கரட் தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள
**செல்வி நகையகம்**
ஸ்ரீ நதியா கட்டடத் தொகுதி,
1/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 9441




அலுமினியம் பிற்றிங்கில் அனுபவமுள்ளவர்கள். சிறந்த முறையில் வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
**சிறி அபிநயா**
**அலுமினியம் பிற்றிங்**
கொக்குவில் சந்தி.
தொ.பே.: 021 320 1110, 0777119475

**வளர்மதி ரெக்ஸ்**
கோயில் தேவைகளுக்கான சகல விதமான பொருள்கள் யாவும்
வீதி, யாழ்ப்பாணம்.

**John Kells Office Automation (Pvt) Ltd.**
Authorized Distributor
North Link Engineering (pvt) Ltd.
360/3, Mainstreet, Jaffna.
T.P. 021 222 4099

உள்ளூர், வெளியூர் அழைப்புக்கள் இன்ரநெற் வசதி போட்டோக் கொப்பி போன்றவற்றைப் பெற்றிட
**கணேசன்**
**கொமினிகேசன்**
கொக்குவில் சந்தி.
தொ.பே.021 222 2585


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

படவரைஞர் துறையில் அனுபவம் மிக்கவர்கள் (Acto cad மூலம்)மற்றும் கணியவியலாளர் (Quantity Survenyor) ஆகியோருக்கான பதவிகள் வெற்றிடமாக உள்ளன. விரும்புவோர் அலுவலக நாள்களில் காலை 9-4 மணிவரையுள் ஆவணங்களுடன் அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

குறிப்பு:இருதுறைகளிலும் பயிலுனர்களாக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.

உருத்திரா பொறியியல் கட்டடக்கலை
மதியுரை அகம்
114/1, கோயில் வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5534

(22294)(5 6 7)

## முக ஒப்பனை அழகுக்கலை மற்றும் கேக் ஐசிங் பயிற்சி நெறி - 2012

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள வறிய மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் முகமாக நல்லூர் பிரதேச சபையினால் நடத்தப்படும் மேற்படி பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் பெண் பயிற்சியாளர்தள் விண்ணபபப் படிவத்தை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் இலவசமாக பெற்று எதிர்வரும் 21.09.2012 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர் நல்லூர் பிரதேச சபை கொக்குவில் என்னும் விலாசத்திற்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுகொள்வதுடன். விண்ணப்பதாரர் நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பதுடன் இதனை அப்பகுதி கிராம சேவையாளரின் மூலம் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும் விண்ணப்பதாரர் 18 வயது தொடக்கம் 40 வயதிற்குட்பட்டிருத்தல் வேண்டும்.

திரு. ப. வசந்தகுமார்
தவிசாளர்
நல்லூர் பிரதேச ச்பை

(சி/2974)(14-8)

## நிஜம் ஒன்று நிழலாகி ஆண்டு மூன்று ஆனதுவோ....



தோற்றம்
11 ★ 02 ★ 1936

மறைவு
29 ★ 08 ★ 2009

திருமதி **பூரணபாக்கியம் சங்கர்**

பிரிவின் காலம் மூன்றாண்டு நம்ப முடியவில்லை
நேற்று வரை எம்முடன் வாழ்ந்த தாகவே
உள்ளத்து உணர்வலைகள்
ஆசையுடன் அசை போடுகின்றன.
என்றாலும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை இறைஞ்சி அஞ்சலிக்கின்றோம்.

505, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.

[22282][5-6-7]

பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் பகவத்சிங்கம்

மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பகவத்சிங்கம் நேற்று (28.08.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-வியாலாட்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ் சென்றவர்களான கார்த்திகேசு-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் மகிழ்மலரின் அன்புக் கணவரும் பகிரதி, திருவருட்செல்வன் ஆகியோரின் பாசமிகுதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2012) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல-72, பூதவராயர் வீதி,
(வெள்ளைப் பிள்ளையார் கோவிலடி)
திருநெல்வேலி கிழக்கு

தகவல்:
பிள்ளைகள்.

(22180)(9.14)

## வசதியில்லாத பஸ் நிலையம்

முல்லைத்தீவு,ஓக.29

முல்லைத்தீவில் தற்போது இயங்கிவரும் பஸ் நிலையம் மக்களுக்கு வசதியான இடத்தில் அமைந்திருக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் முல்லைத்தீவின் மத்திய பகுதியில் இந்த பஸ் நிலையம் அமைந்திருந்தது. இதனால் பிரயாணிகளுக்கு வசதியாகவும் இருந்தது. ஆனால் பழைய பஸ் நிலையம் புனரமைக்கப்படாது கடற்கரைப் பக்கமாகப் புதிய பஸ் நிலையம் அமைந்துள்ளது. இதனால் நகரிலிருந்து செல்வதில் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே பழைய பஸ் நிலையத்தைப் புனரமைத்து வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(க-500)

## குடிமகனுக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம் ஓக.29

மதுபோதையில் வீதியால் செல்பவர்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை ஒரு நாள் விளக்க மறியலில் வைக்க யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவைச் சேர்ந்த சந்தேக நபர் நகரில் இவ்வாறு செயற்பட்டார் என்று குற்றம் சாட்டி யாழ். பொலிஸார் நேற்று இவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய போதே விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

சந்தேக நபர் கடந்த வாரமும் இதே குற்றத்தைப் புரிந்ததற்காக மன்றில் மூவாயிரம் ருபா அபராதமாக விதிக்கப்பட்டது. தவிர இவர் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடனும் தொடர்புடையவரென்றுன் பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.(16-4)

## அபிவிருத்தித் திட்டம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக.29

ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித்திட்டம் தொடர்பான முன்னெடுப்புக்கள் பரீட்சார்த்தமாக மூன்று உள்ளூராட்சி சபைகளில் மேற்கொள்ளப்பட்டு அவை துரிதமாக முன்னேற்றம் கண்டுள்ளன.

ஜேர்மன் ஜி.ஐ.இசற். நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் வோட்டர் கெலர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தத் திட்டத்தில் சுழிபுரம், வேலணை, பருத்தித்துறை ஆகிய உள்ளூராட்சி சபைகள் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டு அங்கு பரீட்சிக்கப்பட்டுள்ளன.

தற்போது ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட பிரச்சினைகளை முன்வைத்துள்ளன.

இந்தப் பிரச்சினை தொடர்பான தீர்வினை சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு விளக்கி அதன் விவரங்களைக் கோரியுள்ளோம்.

இந்த விவரங்கள் முன்னுரிமைத் தேர்வு, பிரதேசத்தின் பிரச்சினைகளை, அதற்கான படிவங்களில் பூர்த்திசெய்து குறிக்கப்பட்ட திகதிக்குள் வழங்க வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் உரிய காலத்தில் செயற்படுத்தப் படாது விடின் இதற்கான தீர்வு எட்டப் படாது பின்தள்ளப் படுவதுடன், வடக்கில் தெரிவுசெய்யப்பட்ட 3 சபைகளின் அபிவிருத்தியும் பின்தள்ளப்படும்.

எனவே மாவட்ட மட்டத் திணைக்களத் தலைவர்கள் ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தி திட்டமிடலில் கூடிய கவனமெடுத்து செயற்படும் படியாக கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (26-41)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியர்
திருமதி சி. ஸ்ரீகாந்தன் அவர்களின் அன்புத் தந்தை

### சண்முகம் பாலசுப்பிரமணியம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்
ஆசிரியர் நலன் புரிக்கழகம் (அதிபர், ஆசிரியர்கள்)

(22299)(8.14)

## மரண அறிவித்தல்கள்

### இராசையா தர்ஷன்



நவாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தர்ஷன் நேற்று (28.08.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா - கனகேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும் தர்சினி (வவா), பிரபாகரன் (லண்டன்), ரிசியன், நிரஞ்சினி (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரரும், றூபன் (பிரான்ஸ்), மதியாணந்தன் (கனடா),. ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஜீபன், வரவான், கீர்த்திகன், தீரன் ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2012) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 9.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி கொத்துக் கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்

(22296)(8.14)

தகவல்:
வே. கனகராசா (மாமா)

### திருமதி தெய்வானைப்பிள்ளை பொன்னையா

*(அராலி மாவத்தை)*



அராலி தெற்கை பிறப்பிடமாகவும் அராலி மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வானைப்பிள்ளை நேற்று (28.08.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் நாகமுத்து தம்பதியரின் கடைசி மகளும் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சுப்பிரமணியம், பொன்னுப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் மலராம்பிகை, பாலசிங்கம்(கந்தளாய்), சிவராசா(இளைப்பாறிய மின்சாரசபை ஊழியர்), சிவனேஸ்வரி, இராசேஸ்வரி, செல்வராணி, தங்கேஸ்வரி, விஜயலக்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான பரமநாதன், துரைசிங்கம் மற்றும் சரஸ்வதி, இரகுநாதன் (இளைப்பாறிய சங்கானை ப.நோ.கூ.ச ஊழியர்), குணேஸ்வரன், இரத்தினசாமி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2012) புதன்கிழமை மாவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவத்தை வீதி,
அராலி தெற்கு
வட்டுக்கோட்டை.

தகவல்:
பொ.பாலசிங்கம்
பொ.சிவராசா
(இளைப்பாறிய மின்சாரசபை ஊழியர்)
மகன்மார்

(22184)(9.14)

## பொதுக்கூட்டம்

குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ் தான பரிபாலனசபை வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை(30.08.2012) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய முன்றில் தலைவர் செ.ஈஸ்வரபாலன் தலைமையில் நடைபெறும்.
உபயகாரர்கள்,திருப்பணிக்கு நிதியாகவும், பொருளாகவும் உதவிய பெருமக்கள், அம்பாள் அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பரிபாலன சபையினர்
குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி
அம்பாள் தேவஸ்தானம்.

(22291)(5 6 7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோதத்துவ வைத்தியம்
## (General Psychotheraphy)
## பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்

T.P: 0719315664, 0777569205

மீண்டும் யாழில்

28.08.2012 முதல் 02.09.2012 வரை 6 நாள்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக்கட்ட ணம் ரூபா300/=

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தை பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசுகரைதல், போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனபான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந் தியுங்கள்தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத்தவிர) எந்தவிதமான மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.அண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்துகொடுக்கபடுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

## நாதன் இன்

பழையகமால் லொஜ்] 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். [சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்] [பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்]

(சி/2988) (15-14)

# வெள்ளோட்டம்

தென்மராட்சி, ஓக.29

சாவகச்சேரி நுணாவில் மேற்கு, வீரபத்திரர் ஆலயத்திற்கு உருவாக்கப்பட்ட புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

ஆலய பரிபாலன சபையைச் சேர்ந்த சி.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாவகச்சேரி நகரசபைத் துணைத் தவிசாளர் கு.சதாசிவமூர்த்தி முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு ஸ்தபதி சின்னத்தம்பி மகேந்திரராஜாவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

(9)

## தவறிவிட்டது

செல்வச்சிவகுமார் றஜீபன் என்பவருடைய தேசிய அடையாளஅட்டை (892751471V) 26.08.2012 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள் ளவும்.

தொடர்பு:- 0774687811

(22295) (15-14)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—

advt@uthayan.com

0215671111

# மரண அறிவித்தல்
## சண்முகம் பாலசுப்பிரமணியம் (சேனாதியார்)



பலகாடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும், பொற்பதி றோட், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய உணவுக் களஞ்சியப்பொறுப்பாளர்) நேற்றுமுன்தினம் (27.08.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான நமசிவாயம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அம்பிகையின் அன்புக்கணவரும், காலஞ் சென்றவர்களான செல்லம்மா, கந்தையா ஆகியோரின் சகோதரரும், சிவயோகம், சண்முகராசா (M.C.S), சிவஞானம் (ஆசிரியை, யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), காலஞ்சென்ற தர்மரட்ணம் மற்றும் பரமேஸ்வரி, பத்மாவதி, அருட்பிரகாசம் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமாரன், கமலேஸ்வரி, ஸ்ரீகாந்தன், தவமலர், தர்மச்சந்திரன் (கிராம சேவகர் J/93), குகதாசன், மனோகரி ஆகியோரின் அன்புமாமனும் சிவமலர் (ஆசிரியை- செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலயம்), சிவமதி (கனடா), சிவகரன் (லண்டன்), யசோதரா (மொறட்டுவ பல்கலைக்கழகம்), விஷ்ணுப்பிரியா, கிருஸ்ணப்பிரியா (வேம்படி மகளிர் கல்லூரி), விக்கினராஜ், நந்தனுயா, கிருபைராஜ், லக்ஸ்மணராஜ் (வவுனியா மகாவித்தி யாலயம்), ஆத்மன் பிரம்மன் (புனித பரியோவான் கல்லூரி), மதுரா, மிதுனன், தசாங்கன் (லண்டன்), ஜெயரூபன் (கூட்டுறவு ஆணைக்குழு), ஜெயக்குமார் (கனடா), அனிதா (லண்டன்) ஆகியோரின் பேரனும் ரதிசன், பாகவன் (திருக் கோணேஸ்வர இந்துக் கல்லூரி), ஆர்ஷன், யதுஷன், பவதர்சன், மதுஷா, ஆபூர்ணா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.8.2012) வியாழக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது தற்காலிக இல்லமான பொற்பதி றோட், கோண்டாவில் கிழக்கில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

நிரந்தரமுகவரி: பலகாடு, காரைநகர்
த.மு. பொற்பதி அவனியூ,
பொற்பதிறோட் (தாயகம் சிறுவர் இல்லம் முன்பாக),
கோண்டாவில் கிழக்கு.

(20293)(6.7.8)

# 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 26 ★ 10 ★ 1942



விண்ணில் 11 ★ 09 ★ 1995

அமரர் முருகேசு கனகசபை (ஆசிரியர்)

திதி:-ஆவணி அபரபக்க துதியை

மீண்டு வருவீர் என நாமிருக்கையிலே
மீளாத்துயர் கொண்டு ஆண்டு பதினேழாகியதே
கல்விதான் கரையேற்றும் வாழ்வு எனச் சொல்லி வைத்தீர்
பிறருக்கு உதவி செய்தே உறவுக்குச் சுவை சேர்த்தீர்
வாழ வழிகாட்டி வளம்பல சேர்த்த உங்கள்
ஆசியுடன் வாழ்ந்திருப்போம் நாம்.

கைதடி நுணாவில், (22275)(15-14)
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## IRCON INTERNATIONAL LIMITED

(இந்திய அரசாங்கத்தின் ஒப்பந்தத்தின் கீழ்)

56ஏ. புகையிரத வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.

அறிவித்தல் 03/2012

## நிலம் குத்தகைக்குத் தேவை

இலங்கைக்குத் தேவையான ஓமந்தை. பலாலி மற்றும் காங்கேசந்துறை புகையிரதச் செயற் திட்டத்தை நிறைவேற்றுகின்ற IRCON International Limited (இந்திய அரசாங்கத்தின் ஒப்பந்தத்தின் கீழ்) நிறுவனம் அடிச்சுமையேற்றுச் சாதனங்கள் (Ballast) மற்றும் ஏனைய உபகரணங்களை களஞ்சியப் படுத்தி வைப்பதற்காக 5-10 ஏக்கர் காணியொன்றை குத்தகைக்கு பெற்றுக் கொள்வதற்காக ஓமந்தை புகையிரத நிலையத்திலிருந்து 5 கிலோ மீட்டர் எல்லையினுள் எதிர் பார்க்கின்றது. இதில் ஆர்வமுள்ளோர் மேலதிக விபரங்களைப் பேற்றுக் கொள்ள கீழ்வரும் கைத்தொலைபேசி இலக்கத்தடன் தொடர்பு கொள்ளவும். 0759489677 / 0771063500.

மேலதிக பொது முகாமையாளர் /PH
**Ircon International Limited**
நிறுவனத்துக்காகவும், சார்பாகவும்

(சி/2639)

## வேலையாள் தேவை

யாழ்.நகர், ஸ்ரான்லி வீதியில் இயங்கும் குமரன் சுற்றுலா விடுதிக்கு வேலையாள் (Room boy) தேவை. வயது 40 இக்கு மேற்பட்டவர். மாநகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.

(22284)(5-6-7) முகாமையாளர்.

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள கணினிகள், கணினிக் கதிரைகள், Internetசாதனங்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:077 066 9216

(சி/2641)(5-6-7)

Diploma in Microsoft office
Diploma in Desktop Publishing
Diploma in Graphic Designing
Diploma in Web page Designing
Diploma in Multimedia
Diploma in Video Editing

Course Fee 1000/=

கணக்கியல்துறையில் வல்லுனராக....

**Dip in Computerized Accounting**

Quick Book, ACCPAC, MYOB ஆகிய முன்னணி மென்பொருட்களூடாக கம்பனி கணக்குகளுடன் VAT இனையும் உள்ளடக்கி

உங்கள் கணனிகளை நீங்களே அமைத்திட

**Dip in Hardware Engineering**

Assembling, Upgrading, Repairing, Installation, Networking ஆகியவற்றின் ஊடாக நவீன பாகங்களுடன் (Dual Core, i3, i5, i7)

Duration: 3Month | Course Fee: 2000/=


சனி/ஞாயிறு 09AM & புதன்/வெள்ளி 03PM

Tally Class - Sat/Sun - 10.00AM

**COMPUTER EXPRESS**
No 15, Sirambiyadi Lane, (off stanly Road) Jaffna. Phone : 021-222-8250

# நினைவலைகள்

7 ஆம் ஆண்டு | 26 ஆம் ஆண்டு | 36 ஆம் ஆண்டு







அமரர் சின்னப்பு முருகேசு
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)
ஆண்டவன் அடியில் 17.08.2005

அமரர் முருகேசு ஜெயகாந்தன்
ஆண்டவன் அடியில் 06.02.1986

அமரர் முருகேசு அன்னலட்சுமி
ஆண்டவன் அடியில் 16.03.1976

திதி:- 29.08.2012 திரயோதசி

அப்பா, அம்மா, சோதரா! உங்களை மறக்கவில்லை மனமும்தான்
ஆறவில்லை கண்ணீரைக் காணிக்கையாக்கி நிற்கும்ரத்தத்தின் ரத்தங்கள்
ஓம் சாந்தி!

பருத்தியோலை,
கந்தரோடை, சுன்னாகம்.

– குடும்பத்தினர்.

(22289)(2,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தூரனின் போராட்டம் வெற்றி ஈழத் தமிழர்கள் 7 பேர் விடுதலை

**செங்கல்பட்டு சிறப்பு முகாமில், இலங்கைத் தமிழ் அகதிகளான பராபரன், தி.சதீஷ், வி.சதீஷ், சண்முகநாதன், சேகரன், விக்னேஷ்வரன், டிஸ்கி முகமது உள்ளிட்டோர் அடைக்கப்பட்டுள்ளனர்.**

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள 7 இலங்கைத் தமிழ் அகதிகளை விடுதலை செய்ய தமிழக அரசு உத்தர விட்டுள்ளது.

இதனால் இவர்களின் குடும்பத்தாரும், ஈழத் தமிழ் ஆதரவு அமைப்புகள், கட்சிகளைச் சார்ந்தவர்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

செங்கல்பட்டு சிறப்பு முகாமில், இலங்கைத் தமிழ் அகதிகளான பராபரன், தி.சதீஷ், வி.சதீஷ், சண்முகநாதன், சேகரன், விக்னேஷ்வரன், டிஸ்கி முகமது உள்ளிட்டோர் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்களை விடுவிக்கக் கோரி தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். இதனால் இவர்களின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. இவர்களில் செந்தூரனின் நிலை கவலைக்கிடமானது. இதையடுத்து அவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

இந்த அகதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, நாம் தமிழர் தலைவர் சீமான், விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் உள்ளிட்டோர் கோரிக்கை விடுத்து வந்தனர்.

மேலும் தொடர் போராட்டங்களும் நடத்தப்பட்டன. செந்தூரனை வைகோ நேரில் சென்று பார்த்தார். மேலும் மதிமுக தலைமைக் கழக அலுவலகத்தில் தொடர் உண்ணாவிரதப் போராட்டமும் தொடங்கப்பட்டது.

இந்த நிலையில் தற்போது 7 அகதிகளை விடுதலை செய்ய தமிழக அரசு உத்தர விட்டுள்ளது. அதே நேரம் நேற்று இவர்கள், அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கியூ பிரிவு பொலிஸாரின் பரிந்துரைப்படி இவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். (3)

## மாற்றுவலுவுடையோர் விசனம்

யாழ்ப்பாணம், ஓக.29

திருநெல்வேலி பொதுச் சந்தையின் மாடிக்கட்டடத்தில் மரக்கறி விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் மாற்றுவலுவுடைய வியாபாரிகள் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட மாற்றுவலுவுடையோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 4 மாதங்களாக திருநெல்வேலி பொதுச் சந்தையின் மரக்கறி விற்பனை மாடிக்கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே பரம்பரை பரம்பரையாக மரக்கறி விற்பனை செய்து வந்த மாற்றுவலுவுடைய வியாபாரிகள் 10 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாளாந்தம் மரக்கறி விற்பனைக்காக மரக்கறிகளை தரகு பணம் கொடுத்து மேலே கொண்டு சென்று, அதன் பின்னர் தாம் முயன்று மரக்கறி விற்பனை செய்யும் இடத்துக்குச் செல்வதாகவும் இதனால் உடல் ரீதியாக தாம் நோய் வாய்ப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக மாற்றுவலுவுடைய வியாபாரிகளின் நலன் கருதி பொருத்தமான சூழலில் வியாபாரம் மேற்கொள்ள இடவசதி ஏற்படுத்தித் தருமாறு அவர்கள் கேட்கின்றனர். (3-14)

## தபால்மூலமாக வாக்களிப்பு தவறியோருக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29

மாகாண சபைத் தேர்தலுக்காக யாழ்.மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்து நேற்றும், நேற்று முன்தினமும் வாக்களிக்காதவர்கள், யாழ். மாவட்ட செயலகத் தேர்தல் திணைக்களத்தில் தமது வாக்கினை அளிக்க முடியும் என்று உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

வடமத்திய, சப்பிரமுவ, கிழக்கு மாகாணங்களுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்றும் நேற்றுமுன்தினமும் நடைபெற்றது. இதற்கு யாழ். மாவட்டத்திலிருந்து 9 ஆயிரம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

இந்த இரண்டு தினங்களிலும் வாக்களிக்கத் தவறிய தபால் மூல வாக்காளர்கள், வாக்களிக்க விரும்பினால் யாழ். மாவட்ட செயலக தேர்தல் திணைக்களத்தில் தமது வாக்குகளைப் பதிவு செய்ய முடியும்.

நாளை மற்றும் செப்ரெம்பர் மாதம் முதலாம், 3 ஆம், 4, 5, 6 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை தமது வாக்கினை செலுத்த முடியும் என்று தெரிவித்தார். (10- 5)

## வழிகாட்டல் செயலமர்வு

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் செயலமர்வு நடைபெறவுள்ளது.

இந்தச்செயலமர்வு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் செப்ரெம்பர் முதலாம் திகதி மு.ப 9.30 மணிக்கு, பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்தச் செயலமர்வினை ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ம.நிரேஸ்குமார் ஒழுங்கமைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது.



வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விவசாய நிலங்களை ஜனாதிபதி பார்வையிடுகிறார்.

## இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர் நியமனம்

இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக கலாநிதி நாலக கொடஹேவ நியமிக்கப்பட்டுள்ளார். பிரியந்த பெர்னாண்டோ, சுஜீவ முதலிகே ஆகியோர் இக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக உள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பங்குச்சந்தையில் முதலீடு செய்யும்போது, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக யார் பதவி வகிக்கிறார்கள் என்பது குறித்து முதலீட்டாளர்கள் அக்கறை கொள்வதில்லை என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பங்குச் சந்தையில வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து 29 பில்லியன் ரூபா முதலீடு கிடைத்துள்ளது என அவர் கூறினார்.

"பங்கு விற்பனையானது பங்குசந்தையில் இடம்பெறும் பல்வேறு செயற்பாடுகளில் ஒன்றாகும். எமது பங்குச் சந்தையில் கிடைக்கும் பங்குகள் நம்பகமானவை. அதை முதலீட்டாளர்கள் அறிவார்கள். அதனால்தான் அவர்கள் பெருமளவிலான முதலீடுகளை செய்கின்றனர். பிணையங்கள் பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழுவில் யார் பதவி வகிக்கிறார்கள் என்பது குறித்து அவர்கள் கரிசனை கொள்வதில்லை" என அஜித் நிவார்ட் கப்ரால் கூறினார். (16)

## சந்நிதி வசந்தம் இறுவெட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.29

தொண்டமானாறு செல் வச்சந்நிதி முருகப்பெருமான் மீது பாடப்பட்டு வெளியீடப்பட்டு வரும் சந்நிதி வசந்தம் பாடல் தொகுதித்தொடர் இவ்வருடம் நான்காவது வெளியீடாக இன்று வெளியாகிறது.

சப்பரத்திருவிழாவான இன்று இந்த இறுவெட்டு வெளியிடப்படுகிறது. கடந்த வருடமும் இவ் இறுவெட்டு சிறப்பாக வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3)

## வீதி விபத்துக்களால் பாதிக்கப்பட்ட மூன்றாம் தரப்புக்கு நஷ்டஈடு

### புதிய சட்டம் அமுலுக்குவருகின்றது

வீதி விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு (3 ஆம் தரப்பு), வாகனத்தை செலுத்தியவர் நஷ்ட ஈடு வழங்குவதை கட்டாயமாக்கும் வகையில் சட்டங்கள் கொண்டுவரப்படவுள்ளன. இதுவரை காலமும் விபத்தில் தொடர்புபட்ட இரண்டு தரப்புகளுக்குமிடையில் மட்டுமே நட்டஈடு வழங்கும் நடைமுறை காணப்படுகின்றது.

விபத்தில் பாதிக்கப்பட்டவருக்கு எந்த நிவாரணமும் இல்லாமல், வாகன காப்புறுதி ஒப்பந்தம் மற்றும் அதேயிடத்து நஷ்டஈடு கொடுப்பனவு என்ற திட்டங்களின் கீழ் சாரதிகளுக்கிடையில் மூன்றாம் தரப்பு அதாவது விபத்தில் பாதிக்கப்பட்டவர் பற்றி கவனிக்கப்படுவதில்லை. அநேகமான சந்தர்ப்பங்களில் இவர்களுக்கு நஷ்டஈடு கிடைப்பதில்லை. விபத்து தொடர்பாக இரண்டு தரப்பினரும் ஓர் இணக்கத்துக்கு வந்துவிட பாதிக்கப்பட்டவர் கைவிடப்படுகின்றார். வீதிவிபத்தில் பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைப்பதற்காக வாகன போக்குவரத்து சட்டத்தை திருத்துவது அல்லது புதிய சட்டத்தை கொண்டு வருவது தமது நோக்கமாக உள்ளது என 'கோப்' தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான டி.எ.யூ.குணசேகர கூறினார். அல்லது வாகன உரிமையாளருக்கு இடையில் ஏற்படும் விளக்கத்தின் அடிப்படையில் பெரும்பான்மையான வீதி விபத்துக்கள் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்படுவது பற்றி அரசாங்க நிறுவனங்களுக்கான குழு கூட்டத்தில் இலங்கை காப்புறுதி சபை பற்றிய விசாரணையின்போது விவரமாக பேசப்பட்டது.

வாகன போக்குவரத்து சட்டத்தின் கீழ், 3ஆம் தரப்பு காப்புறுதி இன்றி எந்த ஒரு வாகனத்தையும் வீதிக்கு கொண்டுவர முடியாது. ஆனால் அண்மையில் வாகன காப்புறுதி திட்டம் அறிமுகம் செய்யப்பட்டதன்பின் இலங்கையில் வருடமொன்றுக்கு 80,000 வீதி விபத்துக்கள் நடக்கின்றன. இதனால் சராசரியாக 6-8 பேர் ஒவ்வொரு நாளும் மரணிக்கின்றனர். வீதி விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்க சிகிச்சையளிக்க சுகாதார அமைச்சு ஆண்டுக்கு 3.5 பில்லியன் ரூபா செலவிடுகின்றது. இலங்கையில் ஒவ்வொரு 10 நிமிடத்திலும் ஒரு பெரிய வீதிவிபத்து ஏற்படுகின்றது என சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால கூறினார். (16)

## திருவிழாவுக்காக சுத்திகரிப்புப் பணிகள் நிறைவு

யாழ்ப்பாணம், ஓக.29

குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகர சபையால் ஆலயப்பகுதிக்குட்பட்ட வீதிகள், வடிகால்கள்யாவும் சுத்திகரிக்கப்பட்டுள்ளன. அதேவேளை நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் இருந்த மின் விளக்குகள்யாவும்செப்பனிடப் பட்டு புதிய மின் விளக்குகள் [illegible] அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (3-16)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடு பிடித்தது மன்னார் பிறீமியர் லீக் பரபரப்பான ஆட்டங்களின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக.29

பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் மன்னார் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற லீக் சுற்று ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு-

சுற்றுத் தொடரின் 9 ஆவது லீக் போட்டியில் இந்து முன்னணி விளையாட்டுக்கழக அணியும் சென்.அன்ரனிஸ் அணியும் மோதிக் கொண்டன.

நாணயச்சுழற்சியில்வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்து முன்னணி விளையாட்டுக்கழக அணியினர் 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களை பெற்றனர்.

இதில் இந்து முன்னனி விளையாட்டுக்கழக அணி சார்பாக ரஞ்சித் 9 பந்துகளில் 14 ஓட்டங்களையும் ஜெகன் 6 பந்துகளில் 10 ஓட்டங்களைபும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிசார்பாக ஜோசியஸ் 3 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், நிலு 1 ஓட்டத்திற்கு 2 இலக்குகளையும், ஜெரோன், அகிலன், லஜீப் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 59 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதால், 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தனர்.

இதில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக சுகந்தன் 18 பந்துகளில் 22 ஓட்டங்களையும், பிரதீப் 18 பந்துகளில் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்து முன்னணி விளையாட்டுக்கழக அணிசார்பாக தர்சன் 9 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், லூயிஸ் லீனஸ், ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

அடுத்து இடம்பெற்ற 10 ஆவது போட்டியில் யங் ஸ்டார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஏசியன் விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது .

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யங்ஸ்டார் விளையாட்டுக்கழக அணியினர் ஏசியன் விளையாட்டுக் கழக அணியை துடுப்பெடுத்தாட பணித்தனர்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஏசியன் விளையாட்டுக்கழக அணியினர் 9.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் ஏசியன் விளையாட்டுக்கழக அணிசார்பாக குரு 19 பந்துகளில் 17 ஓட்டங்களையும், செல்வம் 4 பந்துகளில் 7 ஓட்டங்களையும் அதிக பட்ச ஓட்டங்களாக பெற்றனர்.

பந்துவீச்சில் யங்ஸ்டார் விளையாட்டுக்கழக அணி சார்பாக சுஜந்தன் 15 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், வேங்கை 8 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு அபாரமாக துடுப்பெடுத்தாடிய யங்ஸ்டார் விளையாட்டுக்கழக அணியினர் 8.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தனர்.

இதில் யங்ஸ்டார் அணிசார்பாக சுஜந்தன் 22 பந்துகளில் 37 ஓட்டங்களையும், தன்சன் 17 பந்துகளில் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஏசியன் விளையாட்டுக்கழக அணி சார்பாக குரு 7 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சருஜன் மற்றும் செல்வம் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து நடைபெற்ற, 11 ஆவது போட்டியில் சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணியினர் அதிரடியாக ஆடி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களை பெற்றனர்.

இதில் சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி சார்பாக நிர்மல் 22 பந்துகளில் 31 ஓட்டங்களையும், சுரேன் 12 பந்துகளில் 6 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிசார்பாக அகிலன் 4 ஓட்டங்களுக்கு 3இலக்குகளையும், பிரதீப் 14 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 70 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதனால் அந்த அணி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் - மயிரிழையில் - தோல்வியடைந்தது.

இதில் பிரதீப் 17 பந்துகளில் 26 ஓட்டங்களையும், மேனன் 7 பந்துகளில் 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி சார்பாக கீர்த்தன் 9 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், டானியல், சுரேன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

12 ஆவது போட்டியில் இந்து முன்னணி விளையாட்டுக்கழக அணியும் யங்ஸ்டார் விளையாட்டுக் கழக அணியும் பலப்பரீட்சையில் இறங்கின .

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்து முன்னணி விளையாட்டுக்கழக அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களை பெற்றனர்.

இதில் இந்து முன்னணி விளையாட்டுக்கழக அணி சார்பாக வசந்தன் 21 பந்துகளில் 55 ஓட்டங்களையும் ,தர்சன் 20 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யங் ஸ்டார் விளையாட்டுக்கழக அணி சார்பாக மயூரன் 19 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், செல்லா 26 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யங் ஸ்டார் விளையாட்டுக்கழக அணியினர், இந்து முன்னணி விளையாட்டுக்கழக அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 35 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 76 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி வியடைந்தனர்.

அந்த அணி சார்பாக எந்த ஒரு வீரரும் துடுப்பாட்டத்தில் இலக்கு ஓட்டங்களை

பந்துவீச்சில் தர்சன் 9 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், லீனஸ் 13 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், அர்யூன் 6 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

(ங-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஒக.29

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக்கழகம், 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 4 மணி

கலைமதி விளையாட்டுக்கழகம் எதிர் விண்மீன் வி.க.

***

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3.30 மணி

வல்வை விளையாட்டுக்கழக 'ஏ' அணி எதிர் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம்

பி.ப. 4.30 மணி

றேஞ்சஸ் விளையாட்டுக்கழகம் எதிர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம்

***

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம். (ங-23)

## டைமன்ஸ், றேஞ்சர்ஸ் அணிகள் அபாரமாக ஆடி வெற்றிவாகை

யாழ்ப்பாணம், ஒக.29

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம், டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

இதில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் 4 : 2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்த்தில் டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 6 : 0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.[ ங-23]

## தேசியமட்ட பெருவிளையாட்டு இரண்டாம் கட்டம் அடுத்த மாதம்

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கிடையே இலங்கை கல்வி அமைச்சினால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கான தேசிய மட்ட பெரு விளையாட்டு நிகழ்வுகளின் இரண்டாம் கட்டப் போட்டிகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளன.

இந்த இரண்டாம் கட்டப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் மாத்தளை எட்வேட் பார்க் விளையாட்டு மைதானம், வேர்னாட் அலுவிகார் விளையாட்டு மைதானம் என்பவற்றில் எதிர் வரும் 15ஆம், 16ஆம், 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

வட மாகாண அணி சார்பில் ஆண்கள் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ,தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச்சேர்ந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என்பன கலந்துகொள்ளவுள்ளன.

பெண்கள் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ,வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்பன கலந்துகொள்ளவுள்ளன. (ங-86)



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதை பந்தாட்ட அணிக்கான வீரர்களை தெரிவு செய்யும் செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது. இதன் போது பிரதேச செயலக ,மாவட்ட மட்ட ரீதியிலான போட்டிகள் நடத்தப்பட்டு அதிலிருந்து தேசிய அணிக்கு வீரர்கள் உள்வாங்கப்படவுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் இந்தச் செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக பிரதேச செயலக ரீதியிலான போட்டிகளை நடத்துவதற்கான செலவுக்குரிய காசோலையை மாவட்ட அரச அதிபர் ஹரிச்சந்திரா வழங்கினார். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறுதி லீக் ஆட்டத்தில் வென்றது நஹனஹிர



ஸ்ரீலங்கா பிறிமியர் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதி லீக் ஆட்டத்தில் நஹனஹிர நாகாஸ் அணி வெற்றிபெற்றுள்ளது. ஊவா நெக்ஸ்ட் அணிக்கெதிராக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நஹனஹிர நாகாஸ் அணி 6 இலக்குகளால் வெற்றிபெற்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஊவா நெக்ஸ்ட் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஊவா நெக்ஸ்ட் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது இலக்கை 13 ஓட்டங்களுக்கே இழந்த அந்த அணி, இரண்டாவது இலக்குக்காக மிகச்சிறந்த இணைப்பாட்டத்தைப் பெற்றது. கண்டம்பியும், டில்ஷான் முனவீரவும் 80 ஓட்டங்களை 9.2 பந்துப் பரிமாற்றங்களில் பகிர்ந்தனர். எனினும் அதன் பின்னர் இலக்குகள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் ஊவா நெக்ஸ்ட் அணி சார்பாக டில்ஷான் முனவீர 35 பந்துகளில் 45 ஓட்டங்களையும், திலின கண்டம்பி 29 பந்துகளில் 33 ஓட்டங்களையும், ஷிவ்நரின் சந்தர்போல் 18 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நஹனஹிர நாகாஸ் அணி சார்பாக ஷமிண்ட எரங்க 25 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், கனிஷ்க அல்விற்றிகல 35 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர். மிகுதி 3 இலக்குகளும் 'ரன் அவுட்' முறையில் வீழ்த்தப்பட்டிருந்தன.

161 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு ஆடிய நஹனஹிர நாகாஸ் அணி 19.1 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. சிறந்த ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்ட அந்த அணி, தொடர்ச்சியான சிறப்பான இணைப்பாட்டங்கள் மூலமே அந்த அணி வெற்றி வெற்றிபெற முடிந்தது.

துடுப்பாட்டத்தில் நஹனஹிர நாகாஸ் அணி சார்பாக இம்ரான் நஷீர் 25 பந்துகளில் 44 ஓட்டங்களையும், அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 33 பந்துகளில் 43 ஓட்டங்களையும், ட்ரவிஸ் பேர்ட் 30 பந்துகளில் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஊவா நெக்ஸ்ட் அணி சார்பாக சரித் ஜெயம்பதி 37 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஜேக்கப் ஓரம் 22 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், சச்சித்திர சேனநாயக்க 26 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக நஹனஹிர நாகாஸ் அணியின் இம்ரான் நஷீர் தெரிவானார்.

இந்த வெற்றியை அடுத்து நஹனஹிர நாகாஸ் அணி 2 ஆம் நிலை அணியாக அரையிறுதிக்குத் தெரிவாகியுள்ளது.

வயம்ப அணி முதலிடத்தையும், நஹனஹிர அணி 2 ஆம் இடத்தையும், கந்துரட்ட வொரியர்ஸ் அணி 3 ஆம் இடத்தையும், ஊவா அணி 4 ஆம் இடத்தையும் பெற்று அரையிறுதி ஆட்டங்களுக்குத் தெரிவாகியுள்ளன.

(5)

# டோனியுடன் கருத்து வேறுபாடில்லை

இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் மகேந்திர சிங் டோனியுடன் எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை என்று ஓய்வு பெற்ற டெஸ்ட் வீரர் வி.வி.எஸ் லக்ஸ்மன் தெரிவித்துள்ளார்.

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரும், நான்காவது இன்னிங்ஸ் நாயகன் என்றழைக்கப்பட்டவருமான வி.வி.எஸ் லக்ஸ்மன் நியூசிலாந்துக்கெதிரான இரண்டு டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணியில் சேர்க்கப்பட்டு இருந்தார்.

ஹைதராபாத்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் ஆட்டத்துக்கு முன்பு சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக லக்ஸ்மன் திடீரென அறிவித்தார்.

லக்ஸ்மனின் ஓய்வு முடிவுக்கு அணித்தலைவர் டோனி கொடுத்த நெருக்கடியே காரணம் என்று செய்திகள் வெளியாகின. அதனை உறுதிப்படுத்தும் வகையில் ஓய்வு குறித்து லக்ஸ்மன் அறிவிக்கையில் அணித்தலைவர் டோனியை தொடர்பு கொள்ள முடியவில்லை என்று தெரிவித்திருந்தார்.

முதல் டெஸ்ட் ஆட்டத்தில் பங்கேற்ற வீரர்களுக்கு ஹைதராபாத்தில் உள்ள தனது வீட்டில் லக்ஸ்மன் விருந்து கொடுத்தார். அந்த விருந்துக்கு அணித்தலைவர் டோனியை அழைக்கவில்லை. தனக்கு அழைப்பு இல்லை என்று டோனியும் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஓய்வு முடிவு சர்ச்சைக்கு வி.வி.எஸ்.லக்ஸ்மன் விளக்கமளித்துள்ளார்.

இது குறித்து லக்ஸ்மன் கூறுகையில், எனக்கு அணித்தலைவர் டோனியுடன் எவ்வித கருத்து வேறுபாடும் கிடையாது. இது குறித்து நான் எதுவும் பேச விரும்பவில்லை. முதல் டெஸ்ட் ஆட்டத்தை சனிக்கிழமை நேரில் சென்று பார்க்க விரும்பினேன்.

ஆனால் மழை அதிகமாக பெய்ததால் எனது அந்த முடிவை கைவிட்டேன். 4 ஆவது நாள் ஆட்டத்தையும் பார்க்க செல்ல முடிவு செய்திருந்தேன். எனது குழந்தைகளுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டதால் செல்ல முடியவில்லை. எனவே, முழு ஆட்டத்தையும் நான் வீட்டில் அமர்ந்து தொலைக்காட்சி வாயிலாக பார்த்தேன் என்றும் நமது வீரர்கள் சிறப்பாக விளையாடி வெற்றி கண்டதை பார்க்க நன்றாக இருந்தது எனவும் கூறியுள்ளார். (5)



# சச்சினுடன் என்னை ஒப்பிடுவதா?

## வேண்டாம் என்கிறார் ஹோக்லி



தன்னை சச்சின் டெண்டுல்கரோடு ஒப்பிட முடியாது என்று இந்திய அணியின் இளம் நட்சத்திர வீரர் விராத் ஹோக்லி தெரிவித்துள்ளார். சச்சின் டெண்டுல்கர் தான் வணங்கும் ஒருவர் எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி சார்பாக அண்மைக்காலத்தில் சிறப்பாகச் செயற்பட்டு வரும் விராத் ஹோக்லி, இந்த ஆண்டில் 5 சதங்களையும் அடித்துள்ளார். அத்தோடு உலகில் ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் 1000 ஓட்டங்களையும், 3000 ஓட்டங்களையும் விரைவாக அடைந்த வீரர் என்ற சாதனையும் விராத் ஹோக்லி வசம் உள்ளது.

இந்த நிலையில் சில காலங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த சச்சின் டெண்டுல்கர், தனது 100 சதங்கள் என்ற சாதனையை முறியடிக்கக்கூடிய வாய்ப்புள்ளவர்களில் ஒருவராக விராத் ஹோக்லியைக் குறிப்பிட்டிருந்தார். இதையே விராத் ஹோக்லி மறுத்துள்ளார்.

தன்னையும் சச்சின் டெண்டுல்கரையும் ஒப்பிடும்போது ஆசீர்வதிக்கப்பட்டதாக உணர்வதாகத் தெரிவித்த விராத் ஹோக்லி, எனினும் தனது கவனம் அனைத்தும் தனது திறமை வெளிப்பாடுகளிலேயே காணப்படுவதாகவும், இவ்வாறான ஒப்பீடுகளில் தனது கவனம் செல்வதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சச்சின் டெண்டுல்கரைத் தான் வணங்கும் நிலையிலுள்ள ஒருவர் எனக் குறிப்பிட்ட விராத் ஹோக்லி, அதன் காரணமாக இவ்வாறான ஒப்பீடுகளில் பயனில்லை எனக் குறிப்பிட்டார்.

சச்சின் டெண்டுல்கரைப் போல் யாராலும் 100 சதங்களைப் பெற்றிருக்க முடியவில்லை எனத் தெரிவித்த விராத் ஹோக்லி, 100 சதங்களைப் பெறுவதென்பது மாபெரும் சாதனையாக அமையும் எனத் தெரிவித்தார். இவ்வாறான விடயங்களைப் பற்றித் தான் அதிகம் சிந்திப்பதில்லை எனத் தெரிவித்த விராத் ஹோக்லி, இவ்வாறான விடயங்களைச் சிந்திக்க முயன்றால் தேவையற்ற அழுத்தங்களையே அதிகரிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

(5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌதமை விட திறமையானவர்

இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கௌதம் கம்பீரை விட இந்திய அணியின் 19 வயதிற்குட்பட்டவர்களுக்கான தலைவர் உன்முக்ட் சந் அதிக திறமையானவர் எனக் கருதுவதாக பயிற்றுவிப்பாளர் சஞ்சய் பர்ட்வாஜ் தெரிவித்துள்ளார். கௌதம் கம்பீர், உன்முக்ட் சந் இருவரையும் பயிற்றுவித்த அனுபவத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த வயதில் கௌதம் கம்பீர் இருந்ததை விட உன்முக்ட் சந் அதிக திறமையானவராகக் காணப்படுகிறார் எனத் தெரிவித்த அவர், உன்முக்ட் சந் திறமையும், கடின உழைப்பும் கொண்ட ஒருவர் எனவும் கௌதம் கம்பீர் முழுமையான கடும் உழைப்பால் முன்னிலைக்கு வந்தவர் எனவும் தெரிவித்துள்ளார்.

உன்முக்ட் சந்தின் கிரிக்கெட் வாழ்வில் அவரது வெற்றிக்கான காரணமாக கிடைத்த வாய்ப்புக்களையெல்லாம் இரண்டு கைகளாலும் அரவணைத்துக் கொண்டமையே காரணம் எனத் தெரிவித்த பயிற்றுவிப்பாளர், கௌதம் கம்பீர் அதிகமாகக் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியிருந்ததாகத் தெரிவித்தார்.



கௌதம் கம்பீர், உன்முக்ட் சந் இருவரையும் பயிற்றுவிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக கடவுளுக்கு நன்றி தெரிவிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்த சஞ்சய் பர்ட்வாஜ், இருவரினது திறமையினதும் காரணமாகவே தான் ஒரு சிறந்த பயிற்றுவிப்பாளர் போன்று தெரிவதாகவும், தனது சிறந்த பயிற்றுவிப்பின் காரணமாக அவர்கள் சிறந்த வீரர்களாக வரவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இருவரினதும் மன ரீதியான சில விடயங்களை மாத்திரம் தான் மேம்படுத்தியதாகவும், அதைத் தவிர, அவர்களது வெற்றிகள், திறமை வெளிப்பாடுகள் அவர்கள் இருவரினதும் சிறப்பான திறமைகளினாலேயே பெறப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

19 வயதிற்குட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணத் தொடரின் இறுதி ஆட்டத்தில் சிறப்பான சதம் பெற்று அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்த உன்முக்ட் சந் 2013 ஆம் ஆண்டளவில் இந்தியத் தேசிய அணியில் இடம்பெற வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(5)



## குழம்பித் தவிக்கும் வீரர்கள்

# நாட்டுக்காக விளையாடுவதா? பணத்துக்காக விளையாடுவதா?

சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடரில் நாட்டுக்காக விளையாடுவதா அல்லது பணத்துக்காக விளையாடுவதா என்ற சிக்கலில் பொலாட், சுனில் நரைன், பிராவோ ஆகியோர் உள்ளனர்.

நான்காவது சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடர் தென்னாபிரிக்காவில் (ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை) நடக்கவுள்ளது. இதில் சென்னை, கொல்கத்தா, மும்பை மற்றும் டெல்லி உட்பட 10 அணிகள் பங்கேற்கின்றன.

மேற்கிந்திய தீவுகளின் டிரினிடாட் அண்ட் டுபாகோ அணியில் பொலாட், சுனில் நரைன், பிராவோ ஆகியோர் உள்ளனர். இந்த அணி தகுதி சுற்றில் (ஒக்டோபடர் 9-11) பங்கேற்கவுள்ளது. ஆனால் இவர்கள் மும்பை (பொலாட்), கொல்கத்தா (சுனில் நரைன்), சென்னை (பிராவோ) அணிகளிலும் உள்ளனர்.

சம்பியன்ஸ் லீக் விதிப்படி வீரர்கள் எந்த அணிக்காக விளையாடுவது என்பதை வீரர்கள் தெரிவு செய்து கொள்ளலாம். ஒருவேளை கொல்கத்தா அணியில் சுனில் நரைன் விளையாடுவது என்று முடிவெடுத்தால், டிரினிடாட் அணிக்கு இழப்பாக ரூ. 83 லட்சம் கொல்கத்தா அணி கொடுக்க வேண்டும். இதேபோல, மற்ற அணிகளும் கொடுக்க வேண்டும்.

இதனிடையே இந்த வீரர்கள் சம்பியன்ஸ் லீக் தொடரில், தேசத்துக்காக விளையாட வேண்டும் என்று அந்த நாட்டு விளையாட்டு அமைச்சர் அனில் ராபர்ட்ஸ் தெரிவித்துள்ளார். தவிர உத்தேச அணியிலும் இவர்கள் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டுக்காக விளையாடுவதா, பணத்துக்காக விளையாடுவதா என்று மூன்று வீரர்களும் முடிவெடுக்காமல் திணறுகின்றனர்.


புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Chartered Accountancy**
Foundation level & Intermediate level
(CAB-I & CAB-II)
Medium :- English & தமிழ்
Minimum Requirement :- GCE A/L 3 Passes
** இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் பதிவினை மேற்கொள்ளலாம்

வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான
வங்கியியல் கற்கைநெறிகள்
**CBF,DBF**
அடிப்படைத்தகைமைகள்
G.C.E.( O/L) 06 PASSES WITH 05 Credits including Maths/Commerce & Accounts, and Language (Tamil/English)

**aat (Srilanka)**
Foundation level & intermediate level & Final
புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன

மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை
PHARMACIST (EXTERNAL) Examination course
(Cylon Medical College Council, University of Colombo)
கல்வித்தகைமைகள் :- GCE O/L ஆங்கிலமடை சித்தி
GCE A/L [illegible]

Further Detail.
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.0212223382



**18 ஆம் நாள் நினைவஞ்சலி**



அமரர் வைதேகி சிவசெந்திநாதன்
(முகாமைத்துவ உதவியாளர் நில அளவைத்திணைக்களம் திருகோணமலை)

எமது அருமை நண்பன் சிவசெந்திநாதன் (கணக்காளர், பட்டணமும் சூழலும் பிரதேசசெயலகம், திருகோணமலை) அவர்களின் பாசமிகு துணைவி வைதேகி அவர்களின் அகால மரணத்தையொட்டி 18 ஆம் நாள் நினைவஞ்சலி தினத்தில் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கரைம்பை குறிச்சி மேற்கு, வரணி — (சி/2977)(1514) — ப.கதிர்காமசோதிலிங்கம் குடும்பம்.



**NEW SCIENCE HALL**
**KANNATHIDDY-JAFFNA**

**2013 A/L**
**DAY CLASS**
திங்கள் தொடக்கம் வெள்ளி
(2012 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது)
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம்:-01.09.2012 SAT 8.00A.M
(சி/2972)(15-14)



வணிகக்கல்வி
S.பிரதீபன் M.Com
Paper Class ஆரம்பம் 01.09.2012 சனி/6A.M
A/L 2013 சனி, ஞாயி 7 AM
A/L 2014 சனி, ஞாயி 8 AM
புதிய பிரிவுகள் ஆரம்பம்
யூனிவேர்சல் கந்தர்மடம்



**கட்டட வேலைகள் செய்துகொடுக்கப்படும்**

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளை திருத்துதல், குளியலறை கட்டுதல், சுற்றுமதில்கட்டுதல், தச்சுவேலைகள், Electrical plumbing, Painting, Grilworks அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்தில் செய்து கொடுக்கபடும்.
இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட நிபுணத்துவம் வாய்ந்தவர்களினால் மாபிள் பதித்துக்கொடுக்கப்படும் தொடர்புகளுக்கு:- 0776679564
**AXSHAYA CONSTRUCTION JAFFNA**
**(Experts in housing)**



**விற்பனைக்கு**

52000 Km ஓடிய KA XXXX தொடரிலக்கமுடைய தனிப்பாவனைக் கார் நிர்ணயிக்கப்பட்ட விலை 1075000/= மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட கண்ணாடி சாப்பாட்டு மேசை 6 கதிரைகளுடன் புறஜெக்ரர் உடன் விற்பனைக்குண்டு.

**T.P 0778418344**



**French Language Center**

நெல்லியடியிலும், யாழ்ப்பாணம் கந்தர்மடத்திலும்....
சர்வதேசதரம் வாய்ந்த French மொழி வகுப்புக்களை மேற்கொள்ளும் நிறுவனம்.
வகுப்புகள் யாவும் France இல் ஆசிரியப் பயிற்சி பெற்றவரும், பல்கலைக்கழகத்தில் French விரிவுரைகளை மேற்கொள்பவராலும் வழங்கப்படுகிறது.
ஒரு வகுப்பில் 10 பேர்க்கு மட்டுமே அனுமதி

| | |
|---|---|
| 83, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (பீசா உணவகம் அருகில் உள்ள வீதியில்) | நெல்லியடி m.m.v வீதி, காளிகோவிலடி, நெல்லியடி. |
| ஆரம்பம்:-08.09.2012 சனி 2மணி(pm) | ஆரம்பம்:- 05.09.2012 புதன் 3மணி(pm) |

தொடர்புகளுக்கு:- 0779789456


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் என்பது திரும்பி வராத அம்பு.
-ஜோஷ்வா லோத் லிப்மென்-

# புதன் பொய்கை A

உதயன் 29 ஓகஸ்ட் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

மனோசக்தி

# கற்பனை செய்வோம் கனவுகளை வெல்வோம்

கற்பனை என்கின்ற ஆற்றலை இந்த இயற்கை மனிதனுக்கு தந்ததற்கு மனித குலம் இயற்கைக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். இந்த மகத்தான சக்தி இல்லையென்றால் மனிதர்களிடம் வளர்ச்சி ஏது? மகிழ்ச்சி ஏது?

கற்பனையில் மனிதர்கள் தங்களுக்கு வேண்டியவற்றை மனச் சித்திரங்களாக திரும்பத் திரும்ப பார்க்கத் தொடங்கி விட்டால் போதும் இலட்சியங்களை அடையலாம். ஆசையை நிறைவேற்றலாம், எண்ணியதைப் பெறலாம்.

இந்த உலகத்தில் உங்களுக்கு எது தேவையோ, எதை அடைய விரும்புகிறீர்களோ, அதை அடைந்து விட்டதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அதை உங்களால் அடைய முடியும். பெற முடியும். இதை விட எளிமையான வழி வேறெதுவும் இல்லை. சோதித்துப் பாருங்களேன்!

சின்னச் சின்னச் செயல்பாடுகளில் இந்த உத்தியைப் பயன்படுத்திப் பாருங்கள். சோதிக்கப்படாத எந்தக் கொள்கையும் ஏற்றுக்கொள்ள இயலாத பொய்யாகிப் போகும். சோதித்துப் பார்ப்போமா?

உள்ளிய எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின் -
(குறள் 540)

இந்தக் குறளை வாசிக்கின்ற பொழுது ''மறக்காமல், மறந்துவிடாமல் வேண்டியவற்றைக் குறித்து எண்ணிக் கொண்டேயிருந்தால் நினைத்ததை அடைவது எளிது'' என்கிற கருத்து நம்மை வியப்படையச் செய்கிறது.

ஏனெனில் வள்ளுவர் பொய் சொல்ல மாட்டார். அவர் பொய்யா மொழிப் புலவர். வள்ளுவர் புனைந்துரைப்பவர் அல்லர். ஏனெனில் குறள் கற்பனைக் காவியம் அல்ல. திருக்குறள் உலகப் பொதுமறை. வள்ளுவம் அனைவருக்கும் பொதுவான வேதம். காலத்தால் அழியாத, மாறாத, சத்திய வாசகங்கள்.

உலகம் உள்ளவரை, மனிதம் உள்ளவரை மாறாத உண்மைகள் வாழ்வியல் இரகசியங்கள், சூட்சுமங்கள். நினைத்ததை அடைய மறக்காமல் நினைத்துக் கொண்டே இரு.

நினைத்தாலே போதும். நீ நினைத்ததை அடைவாய். மிக எளிமையாய் இருக்கிறதே. இதில் ஏதேனும் உண்மை இருக்குமா என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது அல்லவா?

இயற்கையில், நீர் நிலைகளில் மீன்கள் முட்டையிட்டு விட்டு கண்களால் அவற்றைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டுமாம். அவைகளிலிருந்து மீன் குஞ்சுகள் உருவாவதற்கு நயன தீட்சை தேவை எனலாம்.

கடல் ஆமைகள் கடற்கரைகளில் வந்து குழி பறித்து முட்டையிட்டு விட்டு மணலால் மூடி வைத்துவிட்டு கடல் சேருமாம். முட்டைகளைக் குறித்து மறந்து விடாமல் நினைத்துக் கொண்டே இருக்குமாம். அவ்வாறு இருந்தால் தான் முட்டைகள் பொரித்து, ஆமைக் குஞ்சுகள் வெளிவருமாம். தாய் ஆமை இறந்து விட்டால் முட்டைகள் குஞ்சு பொரிப்பதில்லையாம். மானஸ தீட்சை தேவை போலும்.

நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும், பறவைகள் முட்டையிட்டு விட்டு அடைகாக்க வேண்டுமென்பது, அப்பொழுதுதான் குஞ்சுகள் உருவாகும். ஸ்பரிச தீட்சை நிச்சயம் தேவை. அது போலத்தான் நாமும் கூட வேண்டியவைகளைக் குறித்துப் பார்க்கவும், எண்ணவும், செய்யவும் வேண்டிய நிலையிலிருக்கிறோம்.

'' பார்க்காத பயிர் பாழ்'' என்றுதானே பகர்ந்திருக்கின்றார்கள்.

நினைத்தல் என்றால் என்ன? வார்த்தைகளாக நாம் நினைக்கிறோமா அல்லது படங்களாக, வார்த்தைகளின் வடிவங்களாக நாம் நினைக்கிறோமா? ஆமாம். நாம் படங்களாகத்தான் மனதில் பார்க்கிறோம்.

அதுதான் நமது எண்ணம். அதுதான் நமது சிந்தனை. எத்தகைய படங்களை நாம் கற்பனையில் நம் அனுபவத்தின், நம் அறிவாற்றலின் அடிப்படையில் பார்க்கிறோமோ அதைத்தான் நாம் அடைகிறோம். இது நம்மையறியாமலே நம் வாழ்வில் நடைபெறுகின்ற, இயற்கை நிகழ்த்துகின்ற அற்புதங்கள்.



**மனப்படங்கள் எப்படியோ, அப்படியே வாழ்க்கை அமைகிறது**

அதனால்தான் நீங்கள் நினைப்பதையெல்லாம். பெரிதாக வளமாக, வசதிமிக்கதாக, பெருமைக்குரியதாக, போற்றத்தக்கதாக, மிகத் துல்லியமாக, கற்பனை செய்யுங்கள்( Creative Visualization ) ஒரு வேளை அதை அடைய காலதாமதம் ஏற்பட்டாலும், கற்பனையை மட்டும் கைவிட்டு விடாதீர்கள். மீண்டும் நாம் வள்ளுவரின் வார்த்தைகளையே பார்ப்போமே.

''உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து'' - (குறள் 596)

மேற்கண்ட திருக்குறள்களை அவற்றின் பொருளைச் சாதாரண கண்ணோட்டத்தில் பார்க்காமல் இவைகள் பிரபஞ்ச இரகசியத்தின் வெளிப்பாடுகள் என்ற கோணத்தில் பார்த்தால் இது [illegible] நாம் பார்த்ததற்கு [illegible] உள்ள வேறுபாடுகளை நம்மால் உணர முடியும்.

கற்பனை என்பது வெறும் கற்பனையாக இல்லாமல் உணர்ச்சியைக் கலந்து (Emotion)செய்கிறபோது கற்பனையின் சக்தி பல மடங்கு பெருகி நினைத்ததை அடைவதற்கான காலத்தைக் குறைத்து விடுகிறது. விரைவில் நிறைவேறும். உடனே நடக்கும்.

'' வணிகம் வளருதுஇலாபம் பெருகுது''
'' கோடி செல்வம் வருகுது
குபேர வாழ்வு பெருகுது''

இதுபோன்ற வார்த்தைகளைத்தான் நாம் சுய கருத்தேற்ற ஆழ்மனக் கட்டளைகள் என்கின்றோம்.( Auto Suggestion)

இந்தத் தற்கருத்தேற்றக் கட்டளை வாக்கியங்களை உணர்ச்சிபூர்வமாகவும், நம்பிக்கையோடும் உச்சரிக்கின்றபோது அவைகள் உண்மைகளாகி விடுகின்றன.

இவைகள் அறிவு மனத்தினால் நிராகரிக்கப்படாமல், விவாதப் பொருளாக வேறுபடாமல் உச்சரிக்கப்பட வேண்டும். (Contradiction)

இவைகள் எப்படி உண்மைகளாகி விடுகின்றன என்று நாம் நம் அறிவைப் பயன்படுத்தி விசாரணை செய்கிறபொழுது விடை கிடைப்பதில்லை. இதனால் நம்பிக்கை உருவாவதில்லை. இதனால் முயற்சியைக் கைவிட்டு விடுகின்றோம். முன்னேற்றம் தடைபட்டு விடுகின்றது.

ஒரு சமயம் குரு ஒருவர் சீடர்களுக்கு போதனை செய்து கொண்டு இருந்தார். ஒரு சீடன் எல்லாச் செய்திகளையும் கேட்கும் பொழுது ஏன்? எப்படி? என்று விளக்கம் கேட்டுக் கொண்டே இருந்தான்.

எல்லாக் கேள்விகளுக்கும் பொறுமையாக, விளக்கமாக, பதில் சொல்லிக் கொண்டே வந்த குரு, ஒரு கால கட்டத்தில் மனம் சலித்துப் போய் ஏன்? எப்படி? என்று கேட்ட சீடனை, " இப்படி எல்லாவற்றுக்கும் சந்தேகங் [illegible] கேள்விகளைக் கேட்காதே! [illegible] வேலி ஓரத்தில் மேய்ந்து கொண்டிருக்கும் பெட்டைக் கோழியை போய்க் கேள். உனக்கு விடை கிடைக்கும்'' என்று வேடிக்கையாகச் சொன்னார்.

சீடனும் இதனை உண்மையென்று நம்பி, நம்பிக்கையோடு வேலி ஓரத்தில் மேய்ந்து கொண்டிருந்த பெட்டைக் கோழியை அணுகி, " பெட்டைக் கோழியே! பெட்டைக்கோழியே! உன்னைக் கேட்டால் எல்லாம் தெரியும் என்று என் குரு எனக்குச் சொன்னார். உனக்கென்ன தெரியும் சொல்? '' என்றான்.

அதற்குப் பெட்டைக்கோழி சொன்னது, '' சீடனே எனக்கென்ன தெரியும்? எனக்குத் தெரிந்ததெல்லாம் முட்டையிடவும் அடை காக்கவும் குஞ்சு பொரிக்கவும்தான். வேறெதுவும் தெரியாது'' என்றது.

உடனே சீடன் '' என்ன சொன்னாய்! உனக்கு முட்டையிடத் தெரியுமா? சரி, அடைகாக்கத் தெரியுமா? சரி, அடைகாத்த பின் குஞ்சு பொரிப்ப தாகச் சொன்னாயே! அது எப்படி? அந்த முட்டைகளுக்குள் குஞ்சு எப்படி உருவாகிறது? அதைச் சொல்லேன்!'' என்றான்.

பெட்டைக் கோழி சொன்னது, '' முட்டாளே குஞ்சு எப்படி முட்டைக்குள் உருவாகிறது என்பதை அறிந்துகொண்ட பின் தான் அடைகாக்க வேண்டுமென்றால் என் முட்டைகளெல்லாம் கெட்டுப் போய்விடும், காலம் கடந்துவிடும் ''.

சிலவற்றிற்கெல்லாம் காரண காரியங்களை நாம் காண வேண்டுமென்றால், கற்றுக்கொள்ள வேண்டுமென்றால் நம் வாழ்க்கையும் போதாது, காலமும் போதாது. நம் சிற்றறிவுக்கும் எட்டாது. ஏனென்று கேட்காமல், எப்படி என்று தெரியாமலே '' நன்மை நிச்சயம் கிடைக்கும் நட்டம் ஒன்றும் ஏற்படாது'' என்று தெரிந்து விட்டால் அதைச் செய்ய வேண்டும் பிரபஞ்சம் பெரியது. பிரபஞ்ச இரகசியம் அதைவிடப் பெரியது.

அறியாமலேயே செய்ய வேண்டும். அதை நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் செய்ய வேண்டும். நம்பிக்கையோடு செய்கிற செயற்பாடுகள் நலமாக நடந்தேறும்.

'' நம்பினார்க் கெடுவதில்லை. இது நான்குமறை தீர்ப்பு'' - பாரதி


நம்பிக்கை என்பது (Faith) கண்ணால் காண்பதை நம்புவதல்ல, காதால் கேட்பதை நம்புவதல்ல. முகர்ந்து பார்த்து நம்புவதல்ல, தொட்டுப்பார்த்து நம்புவதல்ல, எவற்றையெல்லாம் நம் ஐந்து புலன்களாலும் உணர முடியாதோ, அதை இருப்பதாக ஏற்றுக் கொள்வதுதான் நம்பிக்கை.

கற்பனை செய்யுங்கள். வேண்டியவற்றை அடைய கற்பனை செய்யுங்கள். மனப்படம் பாருங்கள். உணர்ச்சிபூர்வமாகப் பாருங்கள். நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் பாருங்கள். எண்ணிய அனைத்தும் ஈடேறும்.


கற்பனையின் வல்லமையை வாழ்வில் சோதித்தறியுங்கள். உங்கள் சோதனைகளின் வெற்றியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பு வடிவில் கேக்



பிரிட்டனைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று புதுமையான வடிவமைப்பில் கேக் வகைகளைத் தயாரித்துள்ளது. அந்த வகையில் மிகவும் தத்ரூபமாக தயாரிக்கப்பட்ட பாம்பு வடிவக் கேக்கைக் காணலாம்.




# இயந்திர விலங்குகள்




# முட்டையிலும் ஓவியம்



# இதுவும் மணல் சிற்பம்



# ஆபரணங்களாக மாறிய பண்டையகால கரண்டிகள்




# இவர்களுக்கு இதுதான் செல்லப்பிராணி





இங்கிலாந்தின் மிக நீளமான செல்லப்பிராணியான இந்த வெள்ளை மலைப்பாம்பு 17 அடி நீளம் உள்ளது. மேலும் இந்தப் பாம்பின் இருப் பிடத்தினை, மூன்று படுக்கையறைகளை ஒன்றாக இணைத்து உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல ஆண்டுகளுக்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட கரண்டிகளை கண்கவர் ஆபரணங்களாக மாற்றியுள்ளனர் தென்னாபிரிக்காவின் தலைநகரான கேப்டவுனை சேர்ந்த கலைஞர்கள். மிகவும் தத்ரூபமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ஆபரணங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு காட்சிகளைப் பிரதிபலிப்பனவாகக் காணப்படுவது சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைரேகைகளின் பலன்கள்

33




### புதன் ரேகையையும் பலாபலன்களும் (தொடர்ச்சி)

2.புதன்ரேகை பின்னப்பட்டுத் துண்டு துண்டாய் அமையுமிடத்து புத்திக்குப் பலக்குறைவு ஏற்படுகிறது.

புதன்ரேகை மெல்லியதாயிருந்தால் ஜீரண சக்தி குறைந்துவிடாது. ஆனால் புதனுடைய செல்வாக்கு சற்று குறையும்.

3.புதன்ரேகை அகன்று பள்ளமாயிருந்தால் தேகதிடம் அற்றவரென்பதைக் குறிக்கும். அதிகம் சாப்பிட்டாலும் குடலில் கோளாறை உண்டு பண்ணும். இதனால் நெஞ்செரிவு, தலைவலி முதலியன தொடர்ந்து நிற்கும். திடகாத்திரமான தேகாரோக்கியம் அமையாவிடினும் ஜீரணசக்திக்குத் தக்கவாறு ஆகாரத்தை உண்டு ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

4.புதன்ரேகையும் ஆயுள்ரேகையும் பின்னப்பட்டிருந்தால் நோயின் கடுமையைக் குறிக்கும். இத்துடன் புத்திரேகையில் தீவுக்குறி ஏற்பட்டால் மனத்துக்குச் சங்கடத்தைக் கொடுக்கும். புத்திரேகையில் நட்சத்திரக் சூரியமிருந்தால் திடீரென உன்மத்த நிலையைக் கொடுக்கும்.

புதன்ரேகை இடைவெளி விட்டு தொடர்ந்திருக்குமாயின், ரேகை காணப்படாத கீலத்தில் புதனின் செல்வாக்கு முற்றிலும் இல்லாமற்போனதை அறிவிக்கும். ரேகை தொடர்ந்திருப்பதால் மீண்டும், புதன் ரேகையில் குறுக்கிட்ட சிறுரேகை, புள்ளி, தீவு முதலிய எவ்விதக் குற்றமிருப்பினும், மேலும் இவை புதன்ரேகையின் இறுதியில் காணப்படில் துர்ப்பலன் நீடித்திருக்கும்.

சனி அல்லது சூரியரேகை இல்லாத விடத்து புதன்ரேகை தன் செல்வாக்கை ஆதரவாகச் செலுத்தும். புதன் மேட்டில் நீண்ட ரேகையில்லாதபோது சிறுரேகைகள் தோன்றி மறையும். இவற்றைச் சந்தர்ப்ப ரேகைகளாகக் கருதவேண்டும்.

புதன்ரேகை துண்டுகளாகவும் அல்லது ரேகைகளோடு சந்திரமேட்டில் பரவியிருக்கும். அதைச் சரிவரக் கவனித்துக் தெரிந்து கொள்ள வேண்டும். புதன் ரேகை புதன் மேட்டை நோக்கியிருக்குமேயன்றி சூரிய மேட்டை நோக்காது.

5.புதன் ரேகை வளைந்து வளைந்து அமைந்திருக்குமாயின், பித்தநோய் அதிகப்பட்டிருப்பதைக் குறிக்கும். பித்த சம்பந்தமான காய்ச்சல், மலேரியா, மஞ்சள்காமாலை முதலிய நுரையீரலைப் பற்றிய நோய்களுண்டாகும். அடுத்தடுத்து பித்த வாயுவையுண்டாக்கும்.

6.புதன்ரேகை ஒரே அளவின்றி சிறுத்தும் பெருத்தும் தோன்றினால், தேக ஆரோக்கியம் நன்றாயிருந்து வரும் போதே திடீரென ஜீரணக்குறைவு உண்டாகும்.

7.புதன்ரேகையில் குறுக்கிட்ட ரேகைக்குறியின் கால அளவுக்கே பொதுவாய் நோயுண்டு. எல்லை கடந்தவிடத்து சீர்படும்.

8.புதன்ரேகையில் குறுக்கிட்ட ரேகை அழுத்தமாய் பதிந்திருந்தால் அதிகக் கஷ்டத்தைக் குறிக்கும். குறுக்கிட்ட ரேகை மெல்லியதாயிருந்தால் அற்பத் தொந்தரவும் குறைந்த கால அளவிருக்கும். புதன்ரேகையில் அடுத்தடுத்துத் தீவு காணப்படில் ஈரலையும் தொண்டையையும் பற்றிய நோயுண்டாகும்.




புதன்ரேகையில் கிளைகள் இரு பக்கமும் மேல் நோக்கியிருக்குமாயின் சிறந்த தேகாரோக்கியத்தைக் குறிக்கும். கிளைகள் கீழ் நோக்கி இருக்குமாயின் சிரமப்பட்டுச் சம்பாதிப்பதை விளங்குவதாகும்.

9.புதன் ரேகையின் கிளை குரு மேட்டை நோக்கிச் சென்றிருந்தால் பெரும்பகுதியான நண்பர்களையும் வாக்குப்பலத்தால் மக்களை அடக்கி ஆளுந்திறமையுமுடையவராயும் இருப்




பர்.

புதன்ரேகையின் கிளை சனிமேட்டை நோக்கிச் சென்றிருந்தால் மகாமேதாவியாயும், தொழிலில் கீர்த்தி பெற்றவராயும் மிக்க செல்வத்தோடு வாழ்வர்.

புதன்ரேகையின் கிளை சூரிய மேட்டுக்குச் சென்றிருக்குமாயின் கலை ஞானத்தால் அபார ஞானமுடையவராயும் விஷயங்களில் தீர்ந்த புத்தியுள்ளவராயும் கீர்த்திவானாயும் விளங்குவார். இது வியாபாரிகளுக்குச் சிறந்த குறியாகும்.


10.புதன்ரேகையின் கிளை புத்தி ரேகையோடு கலந்து விடுமாயின் அபாரமான மனோ சக்தியுள்ளவராவர். இத்தகையோர் கலைஞானத்தைக் கற்று சபைகளில் சிறப்பாகப் பேசுவர். ***(தொடரும்)***

## நீர் ஒரு மங்குனி அமைச்சர்

எங்களுடைய யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற தியேட்டர்காரர் தான் படிக்கவில்லை என்பதை அடிக்கடி நிரூபித்துக் கொண்டிருக்கின்றார். வடிவேலுவின் பாணியில் சொல்வதானால் ''நீர் ஒரு மங்குனி அமைச்சர்'' என்பதை நொடிக்கு நொடி நிரூபித்துக் கொண்டிருக்கின்றார் ''.

கடந்த வருடம் தேர்தல் திருவிழா நடைபெற்றது. அதில் தனது கட்சியின் பெயர் என்ன என்பது தெரியாமல் எழுதி சிக்கலில் மாட்டியிருந்தார். அதன் பின்னர் அதனை ஒருவாறு சமாளித்திருந்தார்.

இந்த வருடம் நல்லூரான் திருவிழாவுக்காக பக்கத்து நாட்டுப் பாடகர் ஒருவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் ஒரு கலைமாமணி பட்டம் பெற்றிருப்பவர். அவர் பக்கத்து நாட்டவரின் துரோகத்தால், கடலில் வீரகாவியமான தளபதி ஒருவரின் பெயரைத் தாங்கிய பூங்காவில் இசை நிகழ்ச்சி நடத்தினார்.




அதற்கு எங்களுடைய தியேட்டர்காரரும் சென்றிருந்தார். சென்றது பரவாயில்லை. அந்த கலைமாமணிக்கு ஒரு நினைவுச் சின்னமும் வழங்கியிருந்தார். அத்துடன் நின்று விடவில்லை. தனது மேதாவித்தனத்தை காட்ட ஒரு சிற்றுரை நிகழ்த்தினார்.

அதில் முத்தமிழ் என்றால், இசை, நாடகம் மற்றது என்று தொடர்ந்தார். அந்த மற்றது தெரியாமல் வில்லங்கத்துக்கு முத்தமிழை இழுத்து திண்டாடிப்போனார் தியேட்டர்காரர். இவ்வாறு தனது அறிவின் கூர்மையை (?) மீண்டும் நிரூபித்தார்.

இதனை விட அறிவுமதியின் எழுத்துருவாக்கத்தில் ''அம்மா உன் பிள்ளை இன்று உயிரோடு இல்லை '' என்று வீரவரிகள் பாடிய பாடகன், தன்னுடைய தேசத்திலேயே ஒரு கொலைக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி இருப்பவரின் கையால் கேடயம் வாங்கும் கொடுமை எங்கு உள்ளது ?

ஒரே வரியில் சொல்வதானால் '' என்ன கொடுமை சார் இது ''

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

உதயனை அன்றாடம் பார்க்கும் வாசகர்களில் நானும் ஒருத்தி. உதயனில் வெளிவரும் அனைத்துப் பக்கங்களும் தரமாக இருப்பினும் சில முக்கிய செய்திகளை மட்டும் வாசிக்கத் தூண்டுகிறது. எமது பகுதியில் இடம்பெற்ற நிகழ்வினைப் பற்றிய செய்தி உதயனில் வரும் நாளில் அந்த செய்தியைத்தான் முதலில் படிக்கும் ஆர்வத்தில் இருக்கிறோம்.

இது எல்லோருக்குள்ளும் இருக்கும் ஒரு பொதுவான விடயம். ஆனாலும் முழுச் செய்திகளையும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தாலும் இன்றைய இயந்திர மயமான சூழலில் சில வேளைகளில் உதயனை முழுமையாக படிக்க முடியாத சூழலும் ஏற்படுகிறது. விடுமுறை நாள்களான சனி, ஞாயிறு தினங்களில் வெளிவரும் உதயனை முழுமையாக படிப்பதுண்டு.

அதிலும் சூரியகாந்திப் பக்கத்தினை விரும்பிப் படிப்பேன். அதில் வரும் ஒவ்வொரு கட்டுரைகளும் எமது தமிழ் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக வெளிவருவதால் அதனை படிக்கத் தூண்டுகிறது.

எனவே சூரியகாந்தி பக்கத்தினை உதயனில் வார பத்திரிகையாக வெளியிடலாம் தானே என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரிந்தி, கரவெட்டி

* * *

வன்னியில் இராணுவத்தினரால் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் இருப்பதாக உதயனைப் பார்க்கும் போது தெரிகிறது.

வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் ஒருபுறம் இருக்க இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகளுக்கும் முகம் கொடுப்பதால் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.


வன்னியின் பலபகுதிகளில் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகளால் அந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுடைய எதிர்காலம் கேள்விக் குறியாக இருக்கிறது.

வன்னி தொடர்பாக முழுமையான செய்திகளை உதயனூடாக மேலும் வெளியிட்டு அந்தப்பகுதி மக்களின் இப்படிப்பட்ட இராணுவத்தினரின் சோதனைக் கெடுபிடிகளை இல்லாமல் செய்வதோடு அந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டினை மேற்கொள்ளவும்.

உதயன் மூலமே வன்னியில் இடம் பெறும் சம்பவங்களை வெளிச்சத்துக்கு கொண்டுவந்து அந்த மக்கள் நிம்மதியாக வாழ வழியினை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

பிரபா, வட்டக்கச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போதை வீழ்தலும் மீள்தலும்

கவனிப்பாரற்று தெருவில் அலையும் சிறுவர்கள் என்றோ ஒருநாள் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி விடுகிறார்கள். அமெரிக்காவில் இரண்டு மணி நேரத்துக்கு ஒரு நபர் போதைப் பழக்கத்தினால் இறந்து கொண்டிருக்கிறார். பதினெட்டு வயதிற்கும் இருபத்தொரு வயதுக்கும் இடைப்பட்டவர்களில் 51% ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட போதைப் பொருள்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். பெண்களில் இது 36% என்கிறது அமெரிக்க ஆய்வு ஒன்று.

அமெரிக்காவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போதையிலிருந்து விடுபட பயிற்சிகளும், மருத்துவங்களும் நடைபெறுகின்றன. ஆனா லும் அது மிகப் பெரிய வெற்றியடைய வில்லை. போதைப்பழக்கத்திலிருந்து மக்களை வெளியே கொண்டு வருவது அத்தனை எளிதல்ல என்பது அனைவரும் அறிந்ததே.

போதைக்கு அடிமையானவர்கள், தான் போதைக்கு அடிமையாகி இருக்கிறோம் என்பதை ஒத்துக்கொள்தல் அவசியம். போதை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் நம்மைக் கொண்டு வந்து விட்டது என்பதையும், அதனால் நம்முடைய வாழ்க்கையில் நாம் பலவற்றை இழந்து கொண்டிருக்கிறோம் என்பதையும் உணர்ந்து கொள்ளாமல் போதையிலிருந்து வெளியேறல் சாத்தியமில்லை.

போதைப் பழக்கத்திலிருந்து மக்களை வெளியே கொண்டு வர மக்களின் சமூக அமைப்பையும், தனிமனித நம்பிக்கைகளையும் பலப்படுத்துவதன் மூலம் சமூகத்தில் போதைப் பழக்கத்தை ஒழித்து விடமுடியும் என்பது ஒரு சாராரின் வாதம்.

நாம் நம்மை விடப்பெரிய சக்தி என்று நம்பும் கடவுளிடம் நம்மை ஒப்படைத்து, மனதை நல்வழிப்படுத்த வேண்டும். இறைவன் கொடுத்த கொடையே நமது உடல். நமது உடல் இறைவன் உறையும் ஆலயம், அதை தீட்டுப்படுத்தக் கூடாது போன்ற நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வதன் மூலம் போதையை ஒழித்து விடலாம், என்பது இன்னொரு தரப்பினரின் வாதம். போதைக்கு அடிமையாகி இருப்ப வர்களிடம் எல்லாம் அதிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணம் இருப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. ஆனால் இயலாமையினால் உழலும் நிலைக்கு இந்தப் போதைப்பழக்கம் அவர்களை இழுத்துச் சென்று விடுகிறது. விளையாட்டாய் பள்ளியிலோ, கல்லூரியிலோ ஆரம்பித்த பழக்கம் வாழ்வின் பிற்பகுதியை மிகப் பெரிய இருட்டுச் சுரங்கத்துக்குள் இட்டுச் செல்லும் என்று ஆரம்பிக்கும் போது எவருமே நினைத்துப் பார்ப்பதேயில்லை.

போதைக்கு அடிமையானதை எப்படி அறிந்து கொள்வது ?

★ அடிக்கடி போதை வேண்டுமென்று தோன்றும். பயன்படுத்தும் போதைப் பொருளைப் பொறுத்து ஒரே நாளில் பலமுறை கூட பயன்படுத்தத் தோன்றும்.

★ ஏதாவது செய்து தேவையானது கிடைக்க வேண்டும் என்று பார்த்துக் கொள்ளத் தோன்றும். எதை மறந்தாலும் போதைப் பொருளை மறக்காமல் கையிருப்பு வைத்துக் கொள்ளத் தோன்றும்.

★ நிறுத்த வேண்டுமென்று அடிக்கடி முயன்று தோற்றுப் போன அனுபவங்கள் இருக்கும். நிறுத்தினாலும், அது மிகவும் குறுகிய நாளே நீடிக்கும்.

★ போதைப் பொருள் கிடைப்பதற்காக கீழ்த்தரமான செயலைக் கூட செய்யத் தோன்றும். திருடுவதோ, கெஞ்சுவதோ, வெட்கம் பாராமல் அலைவதோ நடக்கும்.

★ அந்தப் போதை தான் உங்கள் பிரச்சினைகளின் தீர்வு என்னும் மனநிலை உருவாகும்.

இவையெல்லாம் நீங்கள் போதைக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை உங்களுக்கு உணர்த்தும் எச்சரிக்கை மணிகள். மணி அடிக்கும் போதே விழித்துக் கொண்டால் பெரிய விபத்திலிருந்து உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ள முடியும்.

போதைப் பொருள்கள் நமது ஞாபக சக்தியை விழுங்கி ஏப்பமிடுகின்றன. நரம்பு மண்டலத்தை வலுவிழக்கச் செய்கின்றன. இரத்த அழுத்தத்தை அதிகரித்து சீரான இதயத் துடிப்பை பாதிக்கின்றன. கவனத்தைச் சிதைக்கின்றன. ஒரு குழப்பமான மனநிலைக்குள்ளும், குற்ற உணர்ச்சிக்குள்ளும் நம்மை ஆழ்த்துகின்றன. சோர்வையும் உடல் பலவீனத்தையும் உருவாக்குகின்றன என அடுக்கிக் கொண்டே செல்லும் போதையினால் ஏற்படும் நன்மை என்று ஒன்று கூட இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

குழந்தைகள் போதைக்கு அடிமையாகாமல் கண்ணும் கருத்துமாகப் பார்க்க வேண்டிய கடமை பெற்றோருக்கு இருக்கிறது.

★ பள்ளிக்கூடத்துக்கு குழந்தை ஒழுங்காகச் செல்கிறானா ? அவனுடைய நண்பர்கள் யார் ? படிப்பில் திடீர் வீழ்ச்சி ஏதாவது ஏற்படுகின்றதா என்பதை பெற்றோர் கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டும். பள்ளிக்கூடத்துக்கு அடிக்கடி வருகை தந்து ஆசிரியர்களைச் சந்திக்க வேண்டும் அது குழந்தைகளை வழி தவறாமல் தடுக்கும்.

★ உடல் நிலையில் ஏதேனும் மாற்றம் தென்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். செயல்பாடுகளிலோ அல்லது உரையாடல்களிலோ ஏதேனும் மாற்றம் தென்படுகிறதா என்பதை ஆழமாகக் கவனிக்க வேண்டும்.

★ திடீரென ஆடை அணிவதிலோ, ஒழுங்காக இருப்பதிலோ கவனம் செலுத்தாமல் இருக்கிறானா ? புதிதாக கவனக் குறைவு போன்றவை இருக்கிறதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

★ திடீரென தனிமையைத் தேடுகிறானா ? அவனுடைய தனிமையான அறையில் எவரும் நுழைவதைத் தடுக்கிறானா? குடும்பத்தினருடனான உறவில் ஏதேனும் மாற்றம் தெரிகிறதா எனப் பார்க்க வேண்டும்.

★ அடிக்கடி பணம் கேட்கிறானா ? உண்மையான தேவை தானா என்பதைக் கண்டறியுங்கள். படிக்கும் காலத்தில் அளவுக்கு [illegible] னெனில் [illegible] கணியுங்கள்.

■களஞ்சியன்

# கிரியைகளும் உண்மைகளும்

யாழ்.குடாநாட்டில் வெட்டி வீசிய தடி கூட முளைத்துத் துளிர்விட்ட ஒரு மரம் முள்முருங்கை. இது இன்று அருகி அற்றுப்போய் விட்ட நிலைக்கு வந்துவிட்டது. கடந்த சில ஆண்டுகளாக முள்முருங்கையில் முடிச்சுக் குளவியின் தாக்கம் இருப்பதாகவும், அதனால்தான் அது அற்றுப் போய் விட்டதாகவும் தாவரவியல் நிபுணர்களால் கருத்துக் கூறப்பட்டு வருகின்றது. இது தெரிந்த விடயம் தெரிந்தும் தெரியாத விடயமாக ஒரு நிகழ்வு நடந்து முடிந்தேறி இப்போது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்துக்களின் திருமணத்தில் முக்கிய இடம் வகிப்பது இந்த முள்முருங்கை மரம். தேவர்களுக்கு அதிபதி இந்திரன். அவரைப் பிரதிநிதிப்படுத்தும் வகையில் அதற்கு வஸ்திரம் கொடுத்து அரசாணி மாலை என நான்கு திக்கும் மாலை கட்டி நான்கு திசைக்கும் பூரண கும்பம், குத்துவிளக்கு ஏற்றி தேவசபை ஒன்றைத் திருமண மண்டபத்தில் உருவாக்குவது எல்லோரும் அறிந்த விடயம்.

மணமகன் மணமகளுக்கு மங்கல நாண் பூட்டும் முன்பு, அந்தக் கிரியைகளை செய்யும் குருக்கள், அக்கினி சாட்சியாக தேவர்கள் சாட்சியாக என்று மேற்படி முருங்கை மரத்தைக் காட்டி இந்திரனை சாட்சியாக வைத்தே திருமணத்தை நிகழ்த்துவர். வீடுகளில் மட்டும்தான் திருமணங்கள் நடந்த காலங்கள் உண்டு. இதை இன்றைய இளைய சமூகம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படி வீடுகளில் திருமணம் நடைபெற்ற காலங்களில் முள்முருங்கை மரம், பூரண கும்பம், குத்துவிளக்கு போன்றவை திருமணம் நடந்து மூன்றாம் நாள் அன்று தான் அந்த அரசாணி மண்டபத்தினின்றும் மிகப் பக்குவமாக எடுப்பார்கள். முள்முருங்கை மரத்தை மிக நல்ல சூழலில் நட்டு மேற்படி கும்ப நீரை அதற்கு வார்த்து அது வளர்கின்ற செழிப்பைப் பார்த்து மணமக்களுடைய வருங்கால வாழ்வின் சிறப்பைக் கண்டு மகிழ்ந்த காலம் ஒன்று இருந்தது.

இப்போது மண்டபங்களிலும் சரி வீட்டிலும் சரி திருமண வைபவங்களின்போது வீடியோ கலாசாரத்துக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டதால் திருமண வைபவத்தின்போது மணமகன் மணவறையில் அமர்ந்த உடனேயே வீடியோ படப்பிடிப்பாளர்களால் அரசாணி மாலைகள் மேலே துக்கி வீசப்படுகின்றன. அதன் பின் மங்கல நாண் பூட்டிய உடனேயே தேவர்களுக்கு அதிபதியாக இருந்த முள் முருங்கை மரம் கழுத்தில் பிடித்து எறியுமாப்போல திருமண மண்டபத்தில் மூலை ஒன்றில் போய் விழுகின்றது.

வீட்டின் அலுமாரியில் குடம் இருக்கின்றது. கிணற்றில் நீர் இருக்கின்றது. மாமரத்தில் மாவிலை இருக்கின்றது. தேங்காய் வளவில் இருக்கிறது. இவை தனித்தனியே இருக்கும்போது அந்தந்த தேவைகளுக்கு மட்டும் பாவனைக்குரியதாகின்றது. இவற்றை எல்லாம் சேர்த்து ஒரு கும்பஸ்தாபனம் செய்தால் பின் அதைப் பிரிப்பதற்கு ஒருமுறை இருக்கின்றது.

அந்தக் கும்பத்தை அன்றோ தவறின் மூன்றாம் நாளோ பிரித்து அதனுள் உள்ள நீரை ஒருவரினதும் கால்படாத இடமாகப் பார்த்து துளசிச் செடி போன்றவற்றுக்கு ஊற்ற வேண்டும். வீட்டில் வைக்கின்ற சாதாரண கும்பத்துக்கே இந்த நடைமுறை இருக்கும்போது முகூர்த்தம் பார்த்து நடத்தும் திருமணத்தில் தவப் பிரதிநிதியாக விளங்கிய முருங்கை மரத்துக்கு ஏற்படும் கதி துயரம் தருகிறது.

படப்பிடிப்பை தொழிலாகக் கொள்பவர்களுக்கு விதி முறைகள் தெரிந்திருக்க நியாயமில்லை. இருப்பினும் அவர்கள் சரியாக விதி முறைகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளாமல் புண்ணிய நிகழ்வுகளை நடைமுறைப்படுத்த முனைவது மிகவும் வருத்தத்துக்குரிய விடயமாகும்.

இதன் சரி, பிழைகளைத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு கிரியைகளைச் செய்யும் குருவினுடையதே. குருவானவர் வாய் மூடி மௌனமாக இருந்தால் தெரியாத பிழைகள் எல்லாம் சரியான நெறிமுறையாக மாறிவிடும் அபாயம் உண்டு. இதற்கு இந்த முள்முருங்கை மரமே உதாரணம். தப்பித் தவறி உயிருடனும் நோயுடனும் காணப்படும் முருங்கை மரத்துக்கு குருஸ்தானத்தில் உள்ளவர்கள் அனைவரும் பிராயச்சித்தம் ஒன்றை மேற்கொண்டு தெய்வேந்திரனிடம் மன்னிப்புக்கோரி மீண்டும் எமது முள் முருங்கை மரத்தின் மகிமையை நிலைபெறச் செய்வார்களா? வேதாகமங்களை முறைப்படி கற்றுத் தேர்ந்து கிரியைகளை நடத்தும் குருவினரின் சொல் கேட்டு ஏனையவர்களும் நடந்து எமது நெறிமுறைகளைச் சரிவரப் பேண வேண்டியது நலமல்லவா? சிந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்கு தெரியுமா?

- 2011ஆம் ஆண்டில் உலகில் 366 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டார்கள். மேலும் 280 மில்லின் மக்கள் குளுக்கோஸ் சகிப்பாற்றல் குறைவினால் பாதிக்கப்பட்டார்கள்.
- உலகில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட மக்களில் அநேகமாக ஐந்தில் ஒரு பங்கினர் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் வசிக்கிறார்கள்.
- நிரிழிவு நோயாளர்களில் 50% சதவீமானோர் தங்கள் நிலைமை பற்றி அறியாதிருக்கிறார்கள்.
- நீரிழிவு நோய் சம்பந்தப்பட்ட கோளாறினால் ஒவ்வொரு 7 வினாடியிலும் ஒருவர் மரணமடைகிறார்.
- நிரிழிவு நோயினால் மரணம் அடைவோரில் 48 சதவீதமானோர் 60 வயதிற்கு உட்பட்டவர்களாவர்.
- கூடுதலாக இளம் வயதினரே இந்த ஆபத்தை எதிர்நோக்குகிறார்கள்.
- ஒவ்வொரு 10 வினாடியிலும் 3 பேர் நீரிழிவு நோய்க்கு ஆளாகிறார்கள்.
- ஆரோக்கியமான உணவுகளை உண்பதன் மூலமும் கூடுதலான உடல் செயற்பாடுகளின் மூலமும் வகை 2 நீரிழிவு நோய் ஏற்படுவதை 80% சதவீதம் வரை கட்டுப்படுத்தலாம்.

"ஆரோக்கியமான வாழ்க்கை ஒரு விருப்பத் தேர்வு அல்ல கட்டாய தேவையாகும்"

சீனியை தள்ளுங்கள்

சோலோவுக்கு மாறுங்கள்
(கலோரி கிடையாது. சீனிக்கு மாற்றானது.)




சோலோ உடன் உங்கள் தேநீர் ஆரோக்கியமானது.

HEMAS
Enriching Lives

# கூந்தலுக்குத் தேவை விற்றமின்கள்



இன்றைய காலத்தில் நிறைய பேருக்கு, மற்ற பிரச்சனைகளை விட கூந்தல் பிரச்சனையே அதிகமாக உள்ளது. அந்த கூந்தல் பிரச்சனையில் முக்கியமானது, கூந்தல் உதிர்தல், கூந்தல் வளர்ச்சி குறைவாக இருப்பது போன்றவைகளே. இத்தகைய பிரச்சனைகள் வருவதற்கு பெரும் காரணம், உடலில் போதிய விற்றமின் இல்லாததே ஆகும். ஆகவே அதிக விற்றமின்கள் இருக்கும் உணவுகளை உண்டால், கூந்தல் வளர்ச்சி அதிகமாவதோடு, தலையும் சுத்தமாக, ஆரோக்கியமாக இருக்கும். மேலும் கூந்தல் உதிர்தலும் குறையும்.

விற்றமின் ஏ சத்து கூந்தலின் வளர்ச்சி மற்றும் வலுவில் முக்கியத்துவம் வாய்ந்துள்ளது. அதற்காகத்தான் தலைக்கு குளித்தப் பின் கண்டிஷனரைப் பயன்படுத்துகிறோம். அதுமட்டுமல்லாமல் விற்றமின் பியில் இன்னும் பல வகைகள் உள்ளன. அதில் விற்றமின் பி12 மற்றும் விற்றமின் பி5 சத்துக்கள் கூந்தல் வளர்ச்சிக்கு உதவுவதோடு, கூந்தல் உதிர்வதைத் தடுத்து, வெள்ளை முடிகள் வருவதையும் தடுக்கிறது. இத்தகைய சத்துக்கள் பால் பொருள்கள், தானியங்கள், இறைச்சி மற்றும் முட்டையில் அதிகம் இருக்கின்றன.

**விற்றமின் ஏ சத்து கூந்தலின் வளர்ச்சி மற்றும் வலுவில் முக்கியத்துவம் வாய்ந்துள்ளது. அதற்காகத்தான் தலைக்கு குளித்த பின் கண்டிஷனரைப் பயன்படுத்துகிறோம்.**

விற்றமின் சி மற்றும் டி சத்துக்களும், அதே வேலையைத்தான் செய்கின்றன. இத்தகைய சத்துக்கள் நிறைந்த உணவுகளை உண்பதால், அதில் இருக்கும் இரும்புச் சத்துக்களை உறிஞ்சி, கூந்தல் உதிர்வது குறைந்து கூந்தல் ஆரோக்கியமாக, நீளமாக வளரும். சொல்லப்போனால் விற்றமின் சி, விற்றமின் ஏயை விட மிகுந்த ஆன்டி-ஒக்ஸிடன்ட். இந்த விற்றமின் சி நிறைந்த உணவுப் பொருள்களை உண்பதால், தலையில் இருக்கும் எண்ணெய் சுரப்பிகள் நன்கு வேலை செய்து, கூந்தலுக்கு தேவையான எண்ணெயை அளிப்பதோடு, கூந்தலை ஆரோக்கியமாக வளரச் செய்கிறது.


விற்றமின் ஈ தான் மிக முக்கியமான சத்தாகும். இந்த சத்துக்கள் நிற்றைந்த உணவுகளை உண்டால், உடலில் இரத்த ஓட்டம் தலையில் சரியாக நடப்பதோடு, புதிதான செல்களை உருவாக்கி, கூந்தலை வளரச் செய்கிறது. இந்த சத்துக்கள் நிறைந்த உணவுப் பொருள்கள் கிடைப்பது மிகவும் ஈஸியானது. அதற்காகத் தான் நம் முன்னோர்கள் சொல்வார்கள், கிடைக்கும் உணவுகளை உண்டு வாழ்ந்தால், எந்த பிரச்சனையும் உடலில் வராமல் இருக்கும்.

ஆகவே விற்றமின் அதிகம் இருக்கும் உணவுகளான இறைச்சியில் சிக்கன், மட்டன், மாட்டு இறைச்சி, முட்டை, பால் பொருள்கள், காய்கறிகள், கீரை, பழங்கள் மற்றும் இதர தானியங்கள் என்று அனைத்தையும், தினமும் உணவில் சிறிது சேர்த்து சாப்பிட்டு வந்தால், எந்த குறையுமின்றி ஆரோக்கியமாக வாழலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் எடையை பேணும் யோகா



யோகா செய்வதற்கு உங்கள் உடலைத் [illegible] எந்த உபகரணமும் தேவை இல்லை. யோகாவில் பிரதான மானது மூச்சுப் பயிற்சி. இதில் இரத்த ஓட்டம் சீராகும், மனம் தெளிவடையும், புத்தியில் விழிப்புணர்வு உண்டாகும். மனமும் உடலும் இணைவதுதான் யோகா. மற்ற பயிற்சிகளில் உடல் மிக விரைவாக இளைக்கும். ஆனால், பயிற்சியை நிறுத்தினால் முன்பைவிட அதிக எடை வர வாய்ப்பு உண்டு.

யோகாவில் எடை குறைவது மெதுவாக நிகழும். ஆனால், ஆறுமாத யோகா பயிற்சியின் பலன் ஒன்றரை வருடம் இருக்கும். இடையில் யோகாவை நிறுத்தினாலும் எடை ஏறாது.

இயற்கை நமக்கு 24 மணி நேரம் கொடுக்கிறது. நேரப்பகிர்வு அவசியம். முதல் நாள் இரவே மறுநாளுக்கு தேவையான காய்கறி, உடைகளை தயார் நிலையில் வைத்துவிட்டு விரைவாக படுக்கைக்குச் சென்றால், அதிகாலையில் விழிப்பு வரும். எழுந்ததும் யோகா செய்வது மிக நல்லது.

இதனால் உடல், மனம், புத்துணர்வு அடைவதோடு, சுத்தமான காற்றும் கிடைக்கும். 20 நிமிட யோகா, 16 மணி நேரம் புத்துணர்ச்சியுடன் வைக்கும். 11 மணிக்கு வேலைகளை முடித்துவிட்டு யோகா செய்யலாம். ஆனால், 8.30 மணிக்கு காலை உணவை முடித்திருக்க வேண்டும். மாலையும் நல்லதுதான். மதியப் பயிற்சி வேண்டாம்.

c/2637

# நீ மான திருமண ஆடை



3 கிலோமீற்றர் நீ முடைய திருமண ஆடையொன்று இத்தாலிய தேவாலயமொன்றின் பம [illegible] டுக் [illegible] காட்சிப்படுத்தப்பட்டது. இது மிக நீளமான திருமண ஆடையாக [illegible] ஸ் உ [illegible] தனை புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற் [illegible] திருமண ஆடையானது கியானி மொலாரோ என்பவரால் வடிவமைக்கப்பட்டுள்ளது. [illegible]ந்த ஆடையின் மொத்த நீளம் 1.86 மைல்கள் (3 கிலோமீற்றர்) ஆகும்.

# அண்டெவளியில் புதிய விண்மீன் திரள்கள்



அண்டவெளியில் 2 புதிய விண்மீன் திரள் [illegible] Galaxies) விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். ஆஸ்திரேலிய விஞ்ஞானி அரோன் ரொபோதம் நடத்திய ஆய்விலேயே இந்த புதிய விண்மீன் திரள்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன.

இது குறித்து விஞ்ஞானி கூறுகையில், பூமி அடங்கியுள்ள பால்வெளி மண்டலத்தை (Milky Way Galaxy) போலவே இந்த புதிய விண்மீன் திரள்களும் உள்ளன.

விரிந்து கிடக்கும் வானத்தில் இன்னும் எத்தனை விண்மீன் திரள்களை நாம் கண்டறியாமல் விட்டிருக்கிறோம் எனத் தெரியவில்லை.

மொத்தம் 14 விண்மீன் திரள்கள் அண்மைக் காலத்தில் கண்டறியப்பட்டுள்ளன. இதில் இந்த இரு விண்மீன் திரள்களும் நமது பால்வெளி மண்டலத்தைப் போலவே இருக்கின்றன என்று கூறியுள்ளார்.






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org